

"... தாண்டியது யார்?"

-கலைஞருக்கு பா.ஜ.க.கேள்வி

கல்கி

KALKI
17.8.2003
ரூ.6.00



EXCLUSIVE



அப்துல் கலாம் பர்செனல் பேட்டி!



உடல் வளர்ச்சிக்கு ஊக்கம்
கொடுக்க வேண்டும்.
அதை லைட் மற்றும் ம்யூஸிக்
மூலம் என் பொம்மைகள்
அள்ளித் தருகின்றன.
Stride To Ride Walker
www.fisher-price.com
Bat 'N Wobble Ball
Push 'N Glide Driver
The Baby Playzone™ Range குழந்தைகளுக்கு திரும்ப திரும்ப விளையாட ஆவலைத் தூண்டும், அவர்களின் புலன்களை ஊக்குவிக்கும், உடல் ஆர்வங்களுக்கு ஈடு கொடுக்கும். லைட், சவுண்ட் மற்றும் ம்யூஸிக் இணைந்து உருவாக்கப்பட்ட சுறுசுறுப்பாக விளையாடக் கூடிய இந்த பொம்மைகள் குழந்தைகளின் உடல் வளர்ச்சியில் உதவுகிறது மற்றும் மூளை வளர்ச்சியின் முக்கிய பகுதிகளை வலுவாக்குகிறது.
Stride To Ride Walker™ குழந்தை தன் முதல் அடிகளை ஸ்திரமாக வைக்க உதவுகிறது. இதில் கால்கள் சீராக ஒரு இருக்கை போல் இடத்தில் பொருந்துகிறது. இதன் Push 'N Glide Driver™ மற்றும் Bat 'N Wobble Ball™, மனங்கவர் ம்யூஸிக், டான்சிங் லைட்ஸ், வேடிக்கையான ஒலிகள், ஸ்பின்னிங் பால் ஆகியவை குழந்தை விளையாடும்போது மேலும் சிறப்பாகிறது. ஆனால் இவை எங்களிடம் உள்ள நீண்ட வரிசையில் ஒன்று மட்டுமே. இந்த அணி சிசு மற்றும் ப்ரீ-ஸ்கூல் பொம்மை தயாரிப்பில் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக முன்னணி பெயராக இருந்து வருகிறது.
உங்கள் குழந்தைக்கு சிறப்பான ஆரம்பத்தை தாருங்கள்.
Fisher-Price
சிசு மற்றும் ப்ரீஸ்கூல் பொம்மைகள்
புதிய 2003 Fisher Price அட்டவணையை பெற சுய விலாசமிட்ட, ஸ்டாம்ப் ஒட்டிய A4 சைஸ் கவரை அனுப்ப வேண்டிய முகவரி : Fisher-Price, c/o Mattel Toys (I) Pvt. Ltd., P. O. Box No. 16356, Lower Parel, Mumbai - 400 013

உள்ளே...

தைரியலட்சுமி!



“இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் எந்த அரசியல் கட்சியின் மீதும் தற்போது பிடிப்பில்லை. ஊழல் அரசியல்வாதிகளைப் பார்த்து, வெறுத்துப் போயிருக்கிறார்கள் அவர்கள். தான் உண்டு; தன் படிப்பு உண்டு என்றிருக்கிறான் இன்றைய மாணவன்.”

– இது இன்று நிலவும் பொதுவான கருத்து. இந்தச் சூழ்நிலையில் சமீபத்தில் தமிழகத்திலுள்ள பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த நூற்றியிருபத்தைந்து மாணவ, மாணவிகள் ஜெயலலிதா முன்னிலையில் அ.தி.மு.க.வில் சேர்ந்திருக்கிறார்கள். இந்த இணைப்புக்கு முழு மூச்சாக உழைத்தவர், மாணவர் அணிச் செயலாளர் டாக்டர் விஜய பாஸ்கர் எம்.எல்.ஏ.

இணைந்த மாணவ, மாணவியர் சிலரிடம் ஜெயலலிதா எந்த விதத்தில் உங்களைக் கவர்ந்தார்? என்ற கேள்வியை முன் வைத்தோம்.

அகஸ்தியன்: அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் என்றவுடன், பொதுமக்கள், ‘இதை எப்படி முதல்வர் சமாளிக்கப் போகிறாரோ’ என்று யோசித்து நின்றனர். ஆனால் வேலை நிறுத்தம் சட்ட விரோதம் என்று சொல்லி, மிக, மிகக் கண்டிப்புடன், வேலை நிறுத்தம் செய்த ஊழியர்களைப் பதவி நீக்கம் செய்து, பொது மக்களுக்கு எந்தவித பாதிப்பும் வராமல் பார்த்துக் கொண்டாரே! இவர்தான் தைரியலட்சுமி. இப்போது நீதி மன்றங்களும் இவரது அணுகுமுறையைப் பாராட்டியிருக்கிறதே! இதுதான் ஜெயலலிதாவின் தலைமையை ஏற்றுக் கொள்ள என்னைத் தூண்டியது.

சுனில்: இன்று படித்த இளைஞர்களுக்குச் சரியான வேலையில்லை. இந்த நிலையில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் விதமாக, பதினைந்தாயிரம் பேருக்கு அரசு வேலை உடனடியாகக் கொடுத்தாரே? அதுவும் வேலை நிறுத்தம் முடிந்து ஊழியர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பிய பிறகும் கூட, தற்காலிகமாக எடுக்கப்பட்ட ஊழியர்கள், பணியில் தொடருவார்கள் என்று அறிவித்துள்ளாரே! எனக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது.

முகமது அப்துல்லா: கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் சிறுபான்மை மக்களுக்கு எதிரானதல்ல. போலி மதச் சார்பைக் கடைப்பிடிக்கும் அரசியல்வாதிகள், சிறுபான்மை மக்களுக்கு எதிராக முதல்வரை நிறுத்தப் பார்க்கிறார்கள். அந்த முயற்சியில் அவர்கள் வெற்றி பெற முடியாது. அதே போல, நாடு முழுக்கப் பொது சிவில் சட்டம் வேண்டுமென்பதையும் சொல்லியிருக்கிறார். பாகிஸ்தானிலேயே பொது சிவில் சட்டம் இருக்கும் போது, இந்தியாவில் ஏன் கொண்டு வரக் கூடாது?

அம்பிகா: எனக்கு மிகவும் பிடித்தது முதல்வரின் அன்னதானத் திட்டம். இது தவிர, ஆயிரக்கணக்கான ஏழை ஜோடிகளுக்குத் திருமணம் செய்து வைத்திருக்கிறாரே? எல்லாத் துறைகளிலும் பெண்

களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் என்னை மிகவும் கவர்ந்து விட்டது.

ஸ்ரீதேவி: அரசியல் பிரச்னைகளில் தைரியமாக கருத்துச் சொல்லுகிறார். குறிப்பாக, சோனியா காந்தி வெளிநாட்டில் பிறந்ததால் இந்தியப் பிரதமர் ஆகக் கூடாது என்று சொன்னது எனக்கு மிகவும் பிடித்து விட்டது. இன்றைய அரசியல் வாதிகள் அரசியல் காரணங் களுக்காக அடக்கி வாசிக் கும்போது, தேங்காய் உடைத்தது போல் முதல் வர் கருத்துச் சொல்வது சூப்பர்.



சீனு, சண்முகம்: எங்கள் இருவருக்கும் மிகவும் பிடித்தது, எத்தனை சோதனைகள் வந்தாலும் துவண்டு விடாமல் துணிந்து நிற்கிறாரே, அந்த உறுதிதான். கட்சியை ஒரு ராணுவ மிடுக்குடன் நடத்துவது, சந்தைக் கடை போல இருக்கும் மற்றக் கட்சிகளுக்கு நல்ல எடுத்துக்காட்டு.

— ஸ்ரீநி

படம்: ராஜன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

சிவசங்கரி

கல்லூரியில் படித்தபோது இலக்கியத்தின்பால் உங்களுக்கு ஈடுபாடு உண்டானது என்று ஒரு புத்தகத்தில் படித்தேன். மனசைத் தொட்டு சிந்திக்க வைக்கும்படியான கவிதைகள் எழுதியிருக்கிறீர்கள். படைப்பாளியாக வேண்டும் என்பது உங்கள் சின்ன வயசுக் கனவா? எப்போது எழுதத் துவங்கினீர்கள்?



'அக்னிச் சிறகுகள்' விற்பனை ஒரு லட்சம் பிரதிகளைத் தாண்டிவிட்டது. நாடறிந்த தலைவரான அப்துல் கலாம் ஓர் எழுத்தாளராகவும் முத்திரை பதித்துவிட்டார். எழுத்தாளர், தனி மனிதர் என்ற தகுதியில் அவர் சிந்தனைகள் என்ன..? இந்தப் பிரத்யேகப் பேட்டி ஆராய்கிறது...

எழுத வேண்டும் என்கிற ஆசை எனக்கு எப்போதும் உண்டு. அது, எப்போது, எப்படி வளர்ந்ததென்று சொல்லத் தெரியவில்லை. திருச்சி செயின்ட் ஜோஸஃப் கல்லூரியில் படித்தபோது என்னை வெகுவாகப் பாதித்த ஒரு பாதிரியாரின் செயல்பாடுகளை ஒரு கனவு போல வர்ணித்து எழுதினேன். கல்லூரி மலரில் பிரசுரமான அந்தக் கட்டுரைக்கு நல்ல வரவேற்பு. அதுதான் துவக்கம்.

அந்தக் கட்டுரையின் தலைப்பு, உள்ளடக்கம் என்ன?

எங்கள் கல்லூரியின் ரெவரண்ட் ஃபாதர் தினமும் ஹாஸ்டலில் இரண்டு, மூன்று நான்கு மாடிகள் ஏறி, ஒவ்வொரு மாணவனையும் பரிவோடு விசாரித்து கவனிப்பார். ஒரு சமயம், வெகு நாட்களாகப் பெற்றோருக்குக் கடிதம் எழுதாமலிருந்த பையனிடம் இன்லாண்ட் தபால் கவரைத் தந்து, கிட்டத்தில் நின்று எழுதவைத்து, அதை அவரே மடித்து ஒட்டி, தபாலில் சேர்த்தார். இன்னொரு சமயம், ஒரு பையனின் முகம் தலைவலியால் வாடியிருந்ததைக் கவனித்து, என்னவென்று விசாரித்து, உடனே மாத்திரை

கொடுத்து போட்டுக் கொள்ளச் செய்தார். கரிசனத்துடன் கூடிய இந்த நடவடிக்கைகள் என்னைப் பாதித்ததில், 'ஒரு உண்மைத் தந்தை' என்ற தலைப்பில் அந்தக் கட்டுரையை எழுதினேன். பிறகு எம்.ஐ.டி.யில் படித்தபோது தமிழ்ச் சங்கம் நடத்திய போட்டியில் நான் எழுதிய 'ஆகாய விமானம் கட்டுவோம்' என்ற கட்டுரைக்கு முதல் பரிசு கிடைக்க, அதை அன்றைய 'ஆனந்த விகடன்' ஆசிரியர் தேவன் கையால் வாங்கினேன். அதற்குப் பிறகுதான் தமிழின்பால் உண்மையான ஆர்வம் பிறந்து, வளர்ந்து, இலக்கிய, விஞ்ஞானக் கட்டுரைகள், புத்தகங்கள் எழுதுவது என்று தொடர்கிறது.

கவிதை, கட்டுரைகளை நீங்கள் சிந்தித்து எழுதுவது தமிழிலா, அல்லது ஆங்கிலத்திலா?

கவிதைகளைத் தமிழில்தான் சிந்தித்து எழுதுவேன். தேவையென்றால் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பேன். ஆனால், விஞ்ஞானக் கட்டுரைகளை ஆங்கிலத்திலேயே சிந்தித்து எழுதுவேன்.

நீங்கள் பேசும்போது பல சந்தர்ப்பங்களில் திருக்குறளிலிருந்து மேற்கோள் காட்டுகிறீர்கள். திருக்குறள் மீது உங்களுக்கு இத்தகைய ஈர்ப்பு வரக் காரணம் ஏதும் உண்டா?

ராமநாதபுரம் ஸ்வாட்ஸ் மேல்நிலைப் பள்ளியில் படித்தபோது, வெங்கடசுப்ரமணியன் என்றொரு தமிழாசிரியர் இருந்தார். அவர் தினமும் ஒரு குறளை கரும் பலகையில் எழுதி விளக்கம் கொடுப்பார். ஒருநாள், 'வெள்ளத் தனைய மலர்நீட்டம், மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு' என்ற குறளை எழுதிவிட்டு, மாணவர்களை அவரவர் கற்பனைக்கேற்ப விளக்கம் கொடுக்கச் சொன்னார். முதிர்ச்சி இல்லாத அந்த வயதில் நான் கொடுத்த விளக்கத்தை அவர் மிகச் சிறந்தது என்று பாராட்டியது இப்போது நினைவுக்கு வருகிறது.



அன்று நீங்கள் கொடுத்த விளக்கம் நினைவிலிருக்கிறதா?

ஆறு, குளங்களில் ஆழம் அதிகமாயிருக்கும்போது, தெளிவாக, சுத்தமாக இருக்கும் தண்ணீர், நீர் வற்றி, ஆழம் குறைந்துவிட்டால் சேறும் சகதியுமாகி அசுத்தமாகிவிடும். நீர் சுத்தமாக இருந்தாலும் அசுத்தமாக இருந்தாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல், அதில் முளைத்திருக்கும் அல்லி, பூ மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும். இதேபோல, எந்தச் சூழ்நிலையிலும், எந்தப் பிரச்னை வந்தாலும், நாம் மன உறுதியுடன் இருந்தால், வெற்றி என்கிற பூ நம்மை வந்து சேரும் - என்றேன். திருக்குறள்பால் எனக்கு ஈர்ப்பு வந்தது இப்படித்தான்.

ஜப்பான், சீனா, ஜெர்மனி, ரஷ்யா போன்ற நாடுகளில் அவரவர் தாய்மொழியில் கல்வி கற்று பட்டம் பெற்றுள்ளதால், சர்வதேச அளவில் வியாபார ரீதியாகத் தொடர்பு கொள்வதற்கு இயலாது போகிறது. இதை உணர்ந்து பலரும் அண்மைக் காலத்தில் ஆங்கிலமும் பயில முன்வந்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. நிலைமை இப்படி இருக்கையில், எந்த நோக்கத்தில் அறிவியலைத் தமிழில் படிக்க வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள்?

திருமணம் மறுத்தது ஏன்..?

அப்துல் கலாம் பேசுகிறார்

நான் பள்ளியிறுதி ஆண்டுவரை தமிழ் மீடியத்தில்தான் படித்தேன். கல்லூரிக்கு வந்ததும், மீடியம் ஆங்கிலத்துக்கு மாறி விட்டது. அங்கும் ஐம்பெருமான் கோனார் என்ற ஆசிரியர் தமிழ் வகுப்புகளை எடுத்தார். கம்பராமாயணத்தை அருமை யாய்ச் சொல்லிக் கொடுத்தார். இந்த வகையில்தான் அனைவருக்கும் கல்வியைப் போதிக்க வேண்டும் என்பது என் கருத்து. ஆரம்பத்தில் தமிழில்தான் படிக்க வேண்டும். பிறகு மாற்றிக் கொள்ளலாம். தவறில்லை. ஆனால், தமிழை விட்டுவிடக் கூடாது. அது பாரம்பரியமுள்ள ஓர் அருமையான மொழி. 'இடும்பைக்(கு) இடும்பை படுப்பர் இடும் பைக்(கு) இடும்பை படாஅ தவர்' - துன்பம் வரும்போது கலங்காமல் இருந்து துன்பத் திற்கே துன்பம் கொடு - என்பது எத்தனை பாஸிடிவ்-ஆன கருத்து! இப்படி எந்த மொழி சொல்கிறது?

சின்ன வயதில் உங்கள் அப்பா அற்புத மான கருத்துகளைச் சொன்னதோடு, அதன்படி வாழ்ந்து காட்டி உங்களுக்கு ஒரு நல்ல முன்னுதாரணமாகவும் இருந்திருக் கிறார். அவரைத் தவிர உங்கள் மைத்துனர், அக்கா புருஷர், ஆசிரியர், நண்பர்கள், மேலதிகாரிகள் - என்று உங்களைப் பாதித் தவர்களைப் பற்றியெல்லாம் புத்தகங்களில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், உங்கள் தாய், எம்.ஐ.டி.யில் சேர பணம் தேவைப் பட்டபோது தன் வளையல்களைக் கழற்றித் தந்த சகோதரி ஜோஹரா இவ்விருவர் தவிர, வேறு எந்தப் பெண்ணையும் நீங்கள் எங்குமே குறிப்பிடாதது எனக்கு வியப் பைத் தருகிறது.

ஏன், மதர் தெரெஸாவைப் பற்றி எழுதி யிருக்கிறேனே! என் அம்மா, அக்கா, அண்ணிமார் எல்லோருமே குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர்கள்தாம்...

நான் கேட்டது நீங்கள் படித்து, வேலை பார்த்த காலத்தில் உங்களைப் பாதித்த பெண்களைப் பற்றி...

(சிரிக்கிறார்) நீங்கள் எங்கெங்கேயோ போகிறீர்கள்!

உங்களைப் பற்றிய புத்தகங்கள், நீங்கள் எழுதிய புத்தகங்கள் என்று பலவற்றைப் படித்தபோது எனக்குத் தோன்றிய எண் ணத்தைதான் கேள்வியாக உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். பல ஆண்களைப் பற்றி மிக உயர்வாக எழுதியிருக்கும் உங் களை, பெண்கள் அந்த அளவுக்குப் பாதிக்கவில்லையோ என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது... உங்கள் நண்பர் குழாமில் பெண்கள், அதாவது பெண் சிநேகிதிகள், இருந்தார்களா? இப்போது இருக்கிறார்களா?

ISRO, DRDO-வில் என்னோடு சிறப்பாக வேலைபார்த்த பெண்கள் பலர் உண்டு. 'அக்னி' ஏவுகணைத் தயாரிப்பில் அதற்குத் தேவையான heat-sheath தயார் செய்தது ரோகிணி என்ற ஒரு பெண்தான். அதை நாங்கள் Carbon Carbon Technology என்போம். ஏன் பெண்களைப் பற்றி எழுதவில்லை என்று நீங்கள் கேட்கும்வரை, இந்த ரீதியில் நான் சிந்தித்ததில்லை. இருப்பினும், in future I will write! *(சிரிக்கிறார்)*

தற்கால இந்தியாவில் பெண்களின் நிலை, அவர்களுக்குக் கிட்டியுள்ள முன் னேற்றம், உங்களுக்குத் திருப்தி தருவதாக உள்ளதா?

சில சமூகத்தைச் சார்ந்த பெண்கள்



கல்வியறிவு பெற்று முன்னேறியிருக்கிறார்கள்; சில சமூகத்தில் இது இன்னமும் சாத்தியமாகவில்லை. கட்டாயக் கல்வி மூலம் அனைத்துப் பெண்களையும், குறைந்த பட்சம் எட்டாவது வகுப்பு வரையிலுமாவது படிக்க வைக்க வேண்டும். கேரளம், தமிழ்நாடு, மகாராஷ்டிரம் தவிர்த்து மற்ற மாநிலங்களில் படித்த, படிக்காத பெண்களிடையேயுள்ள இடைவெளி மிக அதிகம். இந்த நிலை மாற வேண்டும். பெண்கள் முன்னேறினால்தான் நாடு முன்னேறும்.

சம்பிரதாயம் என்ற பெயரில் இன்னமும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் நிகழ்ந்து கொண்டுதானே இருக்கின்றன!

நிறைய நடந்தது; இப்போதும் நடக்கிறதா



என்பது கேள்விக்குறி! 1941-ல் நான் பள்ளி மாணவனாய் இருந்தபோது என் ஆசிரியர் வீட்டில், அவர் மனைவி எனக்குச் சாப்பாடு பரிமாற மறுத்தார்; பின்னர் அவரே மனம் மாறி, போட்டார். இப்படிச் சமுதாய மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. கல்வி வளர்ந்திருக்கும் இடங்களில் பண்பாடும் வளர்ந்திருக்கிறது. இப்போது உங்களிடம் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்... பெண்களுக்கான முப்பது விழுக்காடு ஒதுக்கீடு இன்று இல்லையென்றாலும், கொஞ்ச நாளில் வந்துவிடும். சுமார் நூற்றியெழுபது பெண்களைக் கொண்ட லோக்சபையின் நடப்புகள் எப்படியிருக்கும் என்று நம்புகிறீர்கள்? தரமுள்ளதாய், அமைதியாய், அதிக அளவில் செயலாற்றுவதாய் இருக்குமா, இல்லை மாறாக இருக்குமா?

நான் பெண் என்பதற்காகக் கூறவில்லை; பொதுவாகப் பெண்களுக்குப் பொறுப்புணர்வு அதிகம். வேலைக்குப் போகும் பெண்கள் இதை நிரூபித்திருக்கிறார்கள். வீட்டிலும் அதிக பொறுப்பைச் சுமப்பவர்கள் பெண்கள்தான் என்பதால், துவக்கப் பிரச்னைகளைத் தாண்டிவிட்டால், பாராளுமன்றத்தின் செயல்பாடுகள் தரமாக இருக்கும் என்றுதான் நான் அழுத்தமாய் நம்புகிறேன். பெண்களைப் பற்றிப் பேசுகையில் ஒரு முக்கியமான விவரத்தைத் தெரிந்து கொள்ள ஆர்வம் எழுகிறது. உங்கள் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் என்கிற எண்ணத்தில்தான் திருமண பந்தம் வேண்டாம் என்று தீர்மானித்தீர்களா?

(சிரிக்கிறார்) அப்படி எந்த எண்ணமும் இல்லை. வீட்டில் அண்ணன்மார், அக்கா என்று எல்லோரும் ஒன்றாக இருந்தோம். அவர்களுக்கெல்லாம் நிறையக் குழந்தைகள். அந்தப் பெரிய குடும்பத்தில் ஒருவர் கல்யாணம் செய்து கொள்ளவில்லை... அவ்வளவுதான்.

மீண்டும் இதையே வற்புறுத்திக் கேட்பதற்கு மன்னிக்க வேண்டும். சில விஷயங்களை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாது. கணவன் - மனைவி பந்தம், உறவு என்பது அலாதியானது தானே? அந்த பந்தம் தேவை என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?

(பேட்டி அடுத்த இதழிலும் தொடர்கிறது)

அட்டை, ஜனாதிபதி படங்கள் :

மீடியா ராமு

ஆஹா! ரூ.50,000 பரிசு!

பாண்டிச்சேரி வாசகர்களே! போன வாரம் (10.8.03) கல்கி இதழில் இடம் பெற்ற கூப்பனைப் பூர்த்தி செய்து வைத்துக் கொண்டிருக்கிறீர்களா...?

இதோ இரண்டாவது கூப்பன். இதில் கேள்விகளுக்குப் பதில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து வரும் 24, 31 ஆகஸ்டு மற்றும், 7, 14 செப்டெம்பர் இதழ்களிலும் இதே போன்று குவிஸ் கூப்பன்கள் இடம் பெறும். ஆறாவது வார இறுதியில் ஆறு கூப்பன்களையும் நிரப்பி, உங்கள் பெயர், விலாசத்துடன் எங்களுக்கு அனுப்ப வேண்டும்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய பாண்டிச்சேரி வாசகர் ஒருவருக்கு ரூ. 50,000 பரிசு வழங்கப்படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதிலை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசுகளாக வானதி பதிப்பகம் வழங்கும் ரூபாய் பத்தாயிரம் பெறுமானமுள்ள புத்தகங்கள் நூறுபேருக்குக் காத்திருக்கின்றன.
- உறையின் மீது 'ஆஹா! 50,000 (பாண்டி)' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்படமாட்டாது.
- இந்தப் போட்டி பாண்டிச்சேரி யூனியன் பிரதேச கல்கி வாசகர்களுக்கு மட்டுமே.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.



அடுத்த பரிசுப் போட்டி
கோவை வாசகர்களுக்கு!

வெயிட் பண்ணுங்க, அதற்கு முன்னால்... உங்கள் ஊருக்கு வந்து கலக்க, கல்கி நிருபர் குழு காத்திருக்கிறது. ஆனால் சிறப்பிதழ் ஜொலிக்க நீங்கள் பேனா பிடித்து எழுதாவிட்டால் எப்படி? கோவை நகரம் அல்லது கோவை மாவட்டத்தின் எந்தப் பகுதியில் நீங்கள் இருந்தாலும் உங்கள் ஊர்ச் செய்திகளை சுவாரஸ்யமான துணுக்குகளாய், கட்டுரைகளாய், புகைப்படங்களோடு ஒரு பக்கத்துக்குள் அடங்கும்படி எழுதி அனுப்புங்கள்.

யெஸ்! கோவை மாவட்டச் சிறப்பிதழ்! வாசகர் சிறப்பிதழும் கூட!



ஆஹா! ரூ. 50,000 பரிசு!

குவிஸ் போட்டி கூப்பன் - 2

1. பாண்டிச்சேரி லெப்டினண்ட் கவர்னர் மாளிகையின் பெயர் ....

2. பாண்டிச்சேரி கடற்கரை ....கடலை ஒட்டி இருக்கிறது.

3. பாண்டிச்சேரி பாரதி பூங்காவைச் சுற்றியுள்ள கட்டடங்களில் ஒரு பிரபலமான நூலகமும் உண்டு. அதன் பெயர் ....

4. கை ரிக்ஷா, ஜட்கா வண்டி, பல்லக்கு ஆகியவற்றை ஒரே இடத்தில் பார்க்க வேண்டுமானால் பாண்டிச்சேரி .... போகவேண்டும்.

5. மாஹே, யானம் இவற்றோடு வேறொரு இந்தியப் பகுதியும் முன்பு பிரெஞ்சுக்காரர்கள் வசமாக இருந்தது. ஒரு பெண் நாயன்மாரின் பெயரோடும் தொடர்புள்ள அந்தப் பகுதி ....

6. ஜிப்மரின் அருகிலுள்ள ஒரு குடியிருப்புப் பகுதிக்குப் பண்டைய பிரபல இந்திய வைத்திய நிபுணர் ஒருவரின் பெயர் வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியின் பெயர் ....

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச வாசகர்களுக்காக மட்டுமே கல்கி வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி




பெரிய பெரிய ஆசை!

இன்றைக்குக் காலையில் விழித்ததும் பார்த்த முதல் முகம் பிஸ்மில்லா கானுடையது. ஹிந்து நாளிதழ் முதல் பக்கத்தில் வண்ணப்படம் – நாடாளுமன்ற வளாகத்தில் வளர்ப்பு மகளோடு இணைந்து ஜுகல்பந்தி நிகழ்ச்சி. கான்சாஹிப் அடித்த ஜோக்கை விஞ்ச யாராலும் முடியாது... அவருடைய அன்றாட குடும்பச் செலவை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால், அவரது ஷெனாய் வேறு ஒரு சங்கீதம் இசைக்குமாம்! வாஹ் ரே வாஹ்! பிஸ்மில்லா கான் போன்ற கலைஞர்கள், கச்சேரிகளுக்கு லட்சக் கணக்கில் சன்மானம் வாங்குகிறார்கள் என்பது தென்தமிழ்நாட்டு வாசகர்கள் சிலருக்குத் தெரியாதிருக்கலாம். இப்படிப் பட்ட கலைஞர்களை அரசும் சமுதாயமும் ஊக்குவிக்க வேண்டும் என்று வேண்டுமானால் ஒப்புக் கொள்ளலாம்; ஆனால் இவர்களுடைய குடும்பச் செலவை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தால், கஜானா என்ன ஆவதாம்!

கலைஞர்கள் தேசத்தின் சொத்து என்பதால் அவர்களுடைய கடன்களுக்கும் அரசு பொறுப்பேற்க முடியுமா..? கலைஞர்களுக்குச் சின்னச் சின்ன ஆசைதான் வரும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். வைரமுத்து 'பெரிய பெரிய ஆசை' என்றொரு பாடல் எழுதுவாரா?

எதையும் எதிர்பார்க்காமல் கலை வளர்த்து, கௌரவமாய்ச் சம்பாதித்து, நற்பணிகளுக்கு வாரி வழங்கிய கலைஞர்களும் இந்த நாட்டில் உண்டு; கலைப் பள்ளிகள் நிறுவி, பண்பாடு தழைக்கப் பாடுபட்டவர்கள் உண்டு.

தமிழகத்தில் ருக்மிணி தேவி மேற்கொண்ட அத்தகு முயற்சிக்கு இன்னமும் உயிர்த்துடிப்புடன் சாட்சி சொல்லிக் கொண்டிருக்கிறது கலாக்ஷேத்ரா. நிறுவனரின் நூற்றாண்டையொட்டி அரங்கேறிய 'கூர்மாவதாரம்' நாட்டிய நாடகத்தைப் பார்த்து, பிரமிப்பும் பெருமையும் ஒரு சேர உண்டாயிற்று. மலையைப் பெயர்க்கும் வேலை என்று சொன்னால் மிகையில்லை – தேவாசுரர்கள் மந்தர மலையைப் பெயர்த்து வந்து பாற்கடலில் இட்டு, 'வாசுகியை நாண் ஆக்கி' கடையும் கதை – இதை நாட்டியமாக அமைத்த முயற்சியில் கற்பனை, கலைப்புலமையுடன், கம்பீரமும் நளினமும் கலந்து வேறொரு உலகத்துக்கு அழைத்துப் போய் விட்டன. ருக்மிணி தேவியின் மனோதர்மத்தை யொட்டியே பாபநாசம் சிவன் இசையமைத்துச் செல்ல, அசைவுகளும் இசையும் உணர்வுகளும் ஒன்றி, கடைந்தெடுக்கப்பட்ட அமுதக் கலசமாக மிளிர்ந்தது தயாரிப்பு! கஷ்டப்பட்டு பெற்ற அமிர்தம் மோஹினியிடம் கைமாற, 'அவள்' அதை வினியோகிக்கும் கட்டத்தில் காட்டிய ஜாலம்... வயமிழந்த அசுரர்களின் பரிதவிப்பு... யாவற்றிலும்



• புஷ்

• ருக்மிணி தேவி





கௌரவம்; ஆடை அலங்காரங்களின் கண்ணியமான அழகு; ஒளி அமைப்பு, மேடை அமைப்பு என அனைத்தும் சேர்ந்து, ஒரு அழகான சித்திரக் கதை உயிர்பெற்று உலா வந்தது போல் தோன்றச் செய்து விட்டன.



• பிஸ்மில்லா கான்

பார்த்தவர்களுக்கு அதிர்ஷ்டம், பார்க்காதவர்களுக்கு நஷ்டம்!

அமெரிக்க சுமி ரசிகர் மன்ற உறுப்பினர் ஒருவர் ஈமெயில் அனுப்பியிருக்கிறார்... அடுத்த ஆண்டு அங்கே ஜனாதிபதி தேர்தல் வருகிறதாகையால், நிதி சேர்க்கவும் பிரசாரம் பண்ணவும் நூதன முறைகளைத் தேடிச் சிண்டைப் பிய்த்துக் கொள்கிறார்களாம் அரசியல்வாதிகள். சமீபத்திய யுக்தி: பந்தயங்களில் கலந்து கொள்ளும் கார்களின் பக்க வாட்டில் வேட்பாளர் பெயரை எழுதச் செய்வது. தொலைக்காட்சி விளம்பரங்களைக் காட்டிலும் இது மலிவாம்! நம் நாட்டு அரசியல் வாதிகள் 'ரீபாக்', 'பெப்ஸி' வழியில் சச்சின் கூட்டத்தினரைக் குத் தகையெடுப்பார்களோ...?

தமிழக முதல்வருக்குப் போட்டியாக ஒரு காரியம் செய்திருக்கிறார் ஜார்ஜ் புஷ்! அம்மையார் ஓய்வெடுக்க ஒரு வாரம் ஹைதராபாத் போனால், புஷ் ஒரு மாதம் டெக்ஸாஸில் தமது பண்ணை வீட்டுக்குப் போய்விடுகிறார். அங்கே அரசியல் திட்டமிடலும் நடைபெறுமாம்.

புஷ்தான் ஜெயலலிதாவோடு போட்டி போடுகிறார் என்றால், ஓவியர் நடனத்தோடு வி.விஜயராகவன் இப்படிப் போட்டி போட வேண்டுமா? செந்தமிழ்ச் செல்வி சுமியை அவர் வரைந்தனுப்பியிருப்பதைப் பாருங்கள்... என்னைப் பார்த்து நானே பயந்து போய் உணவுக் கட்டுப்பாடு விதித்துக் கொண்டிருக்கிறேன்.

நான் போடுவதாக அவர் குறிப்பிட்டுள்ள கணக்குக்கு விடை யாரும் அனுப்ப வேண்டாம்.

'அசை கவை பசை' என்ற அவரது மொழிபெயர்ப்புக்குப் போட்டியாக 'மென்குதப்பி' என்ற தமிழ்வடிவத்தை முன் வைக்கிறார் சி.தெ. இளமுருகன்.

இது சுதந்தர இந்தியா; ஆகவே அவரவரும் தோன்றிய தமிழில் மொழி பெயர்த்துத் தள்ளுங்கள்... 'ஒட்டுவது'தான் இறுதியில் நிலைக்கும்.


அது கிடக்கட்டும், மென்று முடித்த குதப்பிகளை ஆங்காங்கே ஒட்டவைத்துச்





• வி.வி.யின் 'சித்திரப்பாவை'!

செல்லும் சமூக விரோதிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வழி தெரிந்தால் சொல்லுங்களேன்.

— சுமி







பாரதத்வா Vs ஹிந்துத்வா

மோடி தமிழகத்துக்கு வருகை தந்து பி.ஜே.பியின் தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கி வைத்துவிட்டார்! 'வோட்டுப் போடுங்கள்' என்று இன்னும் அக்கட்சி கேட்க ஆரம்பிக்கவில்லைதான். எனினும் மோடி பங்கேற்ற ரத யாத்திரைக் கூட்டம், வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. அதிலும், பா.ஜ.க. தலைவர்களின் உயிருக்கு இஸ்லாம் தீவிரவாதிகள் உலை வைக்க முயன்று தோற்ற கோவையிலேயே நடந்து முடிந்திருக்கிறது. பலத்த பாது காப்பிடையே தமது பராக்கிரமத்தைப் பிரகடனம் செய்ததோடு, 'மதச்சார்பற்ற போலி'களையும் சாடித் தீர்த்திருக்கிறார் மோடி. காஞ்சி மடாதிபதியின் ஆசி, அயோத்தி ராமர் கோயிலுக்கு ஜெயலலிதாவின் ஆதரவு என படிப்படியாக தமிழகத்தில் பா.ஜ.கவுக்குப் பலம் சேர்ந்து வருகிறது.

பா.ஜ.கவுக்கு ஆதரவு பெருகுவதில் என்ன ஆட்சேபணை இருக்க முடியும் என்று கேட்கலாம்...

பா.ஜ.கவை ஆதரிப்பது என்பது மதச்சார்பின்மையை எதிர்ப்ப தற்குச் சமம்.

மதச்சார்பின்மை என்றால், அது ஹிந்து விரோத நிலை என்பதாக பாரதிய ஜனதா கட்சி பிரசாரம் செய்து வருகிறது.

உண்மை அதுவல்ல. நமது அரசியல் சாசனம் உறுதி செய்கிற மதச் சார்பின்மையானது, இந்தியாவின் சகல மதங்களுக்கும்




கல்கி



2003 ஆகஸ்ட் 17
சுபானு ஆடி 32
மலர் : 62
இதழ் : 3

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



சமமான அந்தஸ்து அளிக்கிறது. பாரதிய ஜனதா கட்சியின் ஹிந்துத்வா கொள்கையோ, அந்தச் சம அந்தஸ்துக்கு முரணானது. ஹிந்து ஆதரவுதான் அதில் மேம்பட்டிருக்கிறது.

இந்தப் போக்கு இந்திய மக்கள் பிளவுபடுவதற்கே வழி செய்யும். ஹிந்துக்கள் அல்லாதவர்கள், தாங்கள் அச்சுறுத்தப்படுவதாகவோ, நிராதரவாகவோ உணரும்போது, இங்கே உள்நாட்டுக் குழப்பமும் சகோதரச் சண்டையும் விளையும். அண்டை நாடுகளுக்குக் குறிப்பாகப் பாகிஸ்தான் – கொண்டாட்டம்தான்!


மொத்தத்தில், இந்தியாவை வெகு விரைவில் பலவீனப்படுத்துவதற்கான வழிதான் ஹிந்துத்வா ஆதரவு. ஹிந்துத்வா ஆதரவில், பிற மதங்களை துவேஷிப்பதும் அடங்கியிருப்பதைக் காண்கிறோம். பிற நாகரிகங்களை எதிர்க்கவும் பா.ஜ.கவின் இந்த ஹிந்துத்வா கோட்பாடு உரிமம் வழங்குவதைப் பார்க்கிறோம். தங்கள் கருத்தை ஏற்காதோரை நசுக்கும் மனப்பான்மையையும் உணர்கிறோம்.

இது போன்ற அடிப்படைவாதக் கொள்கையுடன் ஆளப்படும் இஸ்லாமிய நாடுகள், ஹிந்து மக்களுக்குச் சிறைகளாக மாறியிருக்கின்றன. இங்கே, இந்தியாவில் ஹிந்து அடிப்படைவாதம் வேரூன்றினால் பிற மதத்தினருக்கு இந்நாடு சிறையாகிவிடும். இந்தியாவின் ஆன்மாவான சகிப்புத்தன்மையும் சகோதரத்துவமும் குழி தோண்டிப் புதைக்கப்படும். உணர்வு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இது நாட்டுக்குப் பெரும் கேடு.

இந்த அவலப் போக்குக்கு நேர் எதிரான போக்கைத்தான் பா.ஜ.கவை எதிர்க்கும் கட்சிகள் கைக்கொள்ள வேண்டும். குறிப்பாக, மாற்றுக் கட்சியான காங்கிரஸ், உடனடியாகத் தீவிர மாற்றுப் பிரசார முறைகளை மேற்கொள்ள வேண்டியது மிக அவசியம்.

ஹிந்து மதக் கோட்பாடுகள், மக்களின் இதயங்களிலும் வாழ்க்கை முறையிலும்தான் காப்பாற்றப்படுகின்றனவேயொழிய, அரசியல்வாதிகளாலும் ஆட்சியாளர்களாலும் அது பேணப்படுவதில்லை என்பதை, காங்கிரஸ் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

ஹிந்து மதத்துக்கு நாங்கள் விரோதிகள் அல்ல; பிற மதத் துவேஷத்தை வளர்க்கும்



அடிப்படைவாதத்தைத்தான் எதிர்க்கிறோம்.

இந்தியாவின் ஒற்றுமையை, பன்முகக் கலாசார மேன்மையைக் காக்க உறுதி கொள்வோம்... என்றெல்லாம் பள்ளிப் பாடம் நடத்துவது போல் மக்களுக்கு உண்மைகளை எடுத்துச் சொல்லி, மிகவும் கஷ்டப்பட்டுதான் அவர்கள் ஆதரவையும் நம்பிக்கையையும் பெற வேண்டும்.

மாறாக, பா.ஜ.கவின் பணி மிக எளிது. அவர்கள் பெரும்பான்மை மக்களின் மத உணர்வுகளை உசுப்பிவிட்டு, மிகச் சுலபமாக அவர்கள் மனங்களைக் கவர்ந்து விடுவார்கள். பிரதமரே, 'அயோத்தியில் ராமர் கோயில் நிச்சயம் உருவாகும்' என்று முதல் நாளும்; 'நீதிமன்றத் தீர்ப்பு, பேச்சுவார்த்தை' என்று மறு நாளும் பேசி, கூட்டணி ஆட்சியையும் காப்பாற்றிக் கொண்டு, அதே சமயம் பி.ஜே.பிக்கு மக்கள் ஆதரவைப் பெருக்கவும் முயற்சி செய்கிறார்.

காங்கிரஸின் பணி சுலபமானதல்ல; ஆனால், மிக முக்கியமானது. ஜனநாயகப் பண்புகள் தழைக்கவும், மனித உரிமைகளும் சமத்துவமும் நீடிக்கவும், இந்தியா உருப்படவும் இந்த ஒரு வழிதான் இருக்கிறது.

'ஹிந்துத்வாவை நாங்களும் ஆதரிக்கிறோம்; ஆனால் இது பிற மதங்களை துவேஷிக்காத ஹிந்துத்வா என இரண்டுங்கெட்டானாகச் சொல்லிப் பயனில்லை. இந்தப் போக்கு தோல்வியையே உறுதிப்படுத்தும். ஹிந்துத்வாவுக்கு எதிராக பாரதத்வா என்ற சமதர்மக் கோட்பாட்டை முன் வைத்து காங்கிரஸ் வோட்டு கேட்க வேண்டும். காலந்தாழ்த்தாது இப்பணியை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன் கோஷ்டிச் சண்டைகளை நிறுத்த வேண்டும்.

இப்போது, நாட்டின் முன் உள்ள பிரச்னை காங்கிரஸா? பி.ஜே.பியா? என்பதல்ல, மதச்சார்பின்மையா? ஹிந்துத்வாவா? என்பதுதான். இதை உணர்ந்து காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளட்டும். இல்லையேல், தாங்களும் கெட்டு நாட்டையும் கெடுத்த பாவத்துக்கு உள்ளாவார்கள்! ○





✉ சி.பி.ஐ.க்கு நெருக்கடி தந்து வழக்கை வாபஸ் பெறச் செய்ததன் மூலம், ஒரு தவறான பாதைக்கு வழி வகுத்திருக்கிறது பி.ஜே.பி. அவர்கள் காட்டியிருக்கும் இந்தத் தவறான முன்னுதாரணத்துக்கு அவர்களே பலியாகக் கூடிய சந்தர்ப்பமும் உண்டு என்பதை அவர்கள் உணராமலிருப்பது சோகம்தான்.

மதுரை, என்.பாலகிருஷ்ணன்

✉ சஹானா தொடரில் தாயும், மகனும் சேர்ந்து குடிப்பதாக ஒன்றும் காட்சி வரவில்லை. பழகி விட்ட தாயாருக்கு மகன் எடுத்துக் கொடுப்பதாகவே சித்திரிக்கப்படுகிறது. அதிலும் அந்தத் தீய வலையில் விழுந்துவிட்ட தாய், சுய கழிவிரக்கம் கொண்டு புலம்புவதைக் கேட்டிருந்தால் 'சுமி' புகார் கூறியிருக்க மாட்டார்!" (டி.வி. என்பது ஆங்கில வார்த்தைதானே?).

ஸ்ரீரங்கம், எஸ்.கௌரிலக்ஷ்மி

✉ பைத்தியக்காரப் பிரச்னைக்கு வைத்தியம் பார்த்த திருப்தி தந்தது சுமி சூப்பர் மார்க்கெட். பழைய நடையை திட்டவட்டமாக மறுத்துவிட்டதால் "சுமி எதிர்ப்பாளர்கள் சங்கம்" என்று ஆரம்பித்திருக்கிறோம். தலைமை தாங்க சுமியே வரவேண்டும்...?

கே. ரமேஷ், பள்ளிபாளையம்

✉ 'வெள்ளைக் காலர் வேலை' கிடைக்கவில்லை என வாழ்க்கையை நொந்து கொள்ளும் இன்றைய இளைய தலைமுறைக்கு, மண்ணைப் பொன்னாக்கிய விஜயா நடேசன் ஒரு 'ரோல் மாடல்' என்றால் மிகையில்லை!

திருச்சி, எஸ். வாசுகி

✉ நாகேஷ் எழுதிய 'சிரித்து வாழ வேண்டும்' கட்டுரை படித்தேன். அவர் நடித்த முதல் சீனைப்பற்றி எழுதியதைப் படித்ததும், அக்காட்சியை நேரில் பார்த்ததுபோல உணர்ந்தேன். அந்த வி.ஐ.பி. டைரக்டர் பாலசந்தர் தானே?

திருநெல்வேலி, திலகம்

உறுமியைப் பம்பையாக்கி விட்டாரே!

✉ யதார்த்த நிலையை எடுத்துரைத்தது தலையங்கம். பாராட்டுகள். அரசு ஊழியர்களின் மன்னிப்புக் கடிதத்தினைவிட அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதே முக்கியம் என்பது நூறு சதவிகிதம் சரி.

சென்னை, கிருஷ்ணமூர்த்தி

✉ மீனாட்சி விஜயகுமார், ஸ்ரீதர் ஆனந்த கிருஷ்ணன், விஜயா நடேசன், சானியா மிர்ஸா, அஞ்சல் துறை வெங்கடேசன், கண் பார்வையற்ற இளங்கோ, நடனமணி சந்தியா போன்றவர்களின் சாதனைகளை வெளியிட்டு, இந்த வார இரட்டைச் சிறப்பிதழ் கல்கியை 'சாதனைச் சிறப்பிதழாக' ஜொலிக்க வைத்து விட்டீர்கள்.

ஆடுதுறை, கோ. ராமதாஸன்

✉ முதல் பரிசு பெற்ற 'கடவு' சிறுகதை அருமை. கதாநாயகன் நையாண்டி கணேசை 'தவில்' வாத்தியக் கலைஞராகக் கதாசிரியர் சித்திரித்திருக்கிறார். ஆனால் ஓவியரோ 'உறுமி மேளத்தை - பம்பையின் மேற்பகுதியை' வரைந்திருக்கிறாரே!

நெல்லை, புளியரை கணேசன்





ஆம்லெட் முருகன்!

மொத்தம் பதிமூன்றாயிரத்து முன்னூற்று, நாற்பத்தேழு ஆம்லெட்டுகள். ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை வெறும் ஐந்து நிமிடங்கள் மட்டுமே ஓய்வு எடுத்துக் கொண்டு, இடைவிடாமல் எழுபத்து இரண்டு மணி நேரம் ஆம்லெட்டுகளைப் போட்டு உலகச் சாதனை படைத்திருக்கிறார் ஜோதி முருகன்.

புதுவை முதலமைச்சர் நிவாரண நிதிக்கு இந்தச் சாதனை மூலம், ஒரு லட்சத்து ஒரு ரூபாய் நிதி திரட்டிக் கொடுத்துவிட வேண்டும் என்பது ஜோதி முருகனின் திட்டம். ஆனால் அவரது உலகச் சாதனையை முறியடிக்கும் விதமாக, வேடிக்கைப் பார்க்க வந்தவர்கள் முப்பது ஆம்லெட்டுகள்வரை மூச்சுமுட்டத் தின்றுவிட்டு, ஒரு ரூபாய் உண்டியலில் போட்டு விட்டுப் போனதில், ஆறாயிரத்து நாநூறு ரூபாய்தான் வசூலாகியிருக்கிறது! ஆனால் ஜோதி முருகன் சளைக்கிற மாதிரித் தெரியவில்லை. விரைவில் தொண்ணூற்று ஆறு மணி நேரம் ஆம்லெட் போட்டு, ஆம்லெட்டுக்கு ஒரு ரூபாய் வீதம் நன்கொடை வசூலித்து, முதல்வரின் நிவாரண நிதிக்கு ஒரு லட்சம் தராமல் விடமாட்டேன் என்று சபதம் செய்கிறார். பெரும்பாலான புதுவைவாசிகளுக்கு தங்கள் ஊரின் சாதனைச் சிங்கம் இவர். பலருக்கு ஜோதிமுருகன் ஒரு ஜோக்கர். ஆனால் ஜோதி முருகன், தம் காதுபட இப்படிக் கிண்டலடிக்கிறவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை.

"தாய் நாடு, தாய் மொழி, சமூகம், சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வு பெற்று மக்கள் மனம் மாறும்வரை நான் ஓயப்போவதில்லை. எனது சாதனைகளின் மூலம் அவர்களின் விழிப்புணர்வுச் செடி, மரமாகும் வரை தண்ணீர் பாய்ச்சிக் கொண்டே இருப்பேன்" என்று சொல்லும் ஜோதிமுருகன் முட்டை ஆம்லெட் போட்டது மட்டும்தான் சாதனையா? அதுதான் இல்லை.

தீவிரவாதத்துக்கு எதிராக கூண்டுக்குள் ஒற்றைக்காலில் நின்று எழுபத்து இரண்டு மணி நேரம் சாதனை, அப்துல் கலாமுக்கு மாணவர்கள் மூலம் சேகரித்து பதினைந்து கி.மீ. வாழ்த்துமடல், போலியோ சொட்டு மருந்தின் அவசியத்தை வலியுறுத்தி, காரைக்கால் முதல், புதுவை வரை போலியோ பாதிக்கப்பட்டவர்போல தவழ்ந்து வந்தது. இந்திய அணைகளை தேசிய மயமாக்க காந்தி வேடமிட்டு, புதுவையிலிருந்து சென்னைக்கு நடைப்பயணம், பெண்ணுரிமை பேண வேண்டும் எனக்கோரி, எழுபத்து இரண்டு மணி நேரம் தொடர்ந்து கரவொலி எழுப்பிச் சாதனை, இருபத்தியோராம் நூற்றாண்டின் அமைதிக்காக இந்தியா முழுவதும் இருபத்து இரண்டாயிரம் கி.மீ. சைக்கிளில் சுற்றிச் சாதனை என பட்டியல் நீள்கிறது.

ஜோதிமுருகன் வயிற்றுப் பாட்டுக்கு என்ன செய்கிறார்...? காய்கறிக் கடை!

- ஸ்ரீ சக்கரம்

படம் : டி.ஜி. சண்முகம்

அன்பின் வகைகள் மூன்று

அன்பு மூன்று வகைப்படும். கவர்ச்சியால் வருவது, நெருங்கிய பழக்கத்தால் வருவது, தெய்வீகத்தால் வருவது. நான் சொல்லுவதை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?

கவர்ச்சியால் வரும் அன்பு நீண்ட காலம் நிலைத்து நிற்காது. நெருங்கிய பழக்க மில்லாதபோது, நீ கவரப்படுகிறாய்; நெருங்கிப் பழகிய பிறகு, கவர்ச்சி வேகமாகக் குறைகிறது, சலிப்பு ஏற்படுகிறது. பல திருமணங்களில் இப்படி ஆகிறது. இம்மாதிரியான அன்பு, ஒருவித பயம், ஐயம், பாதுகாப்பற்ற தன்மை, துன்பம் ஆகியவற்றைத் தருகிறது.

நெருங்கிய பழக்கத்தால் வரும் அன்பு வளருகிறது. இதனால் நீ மிக மகிழ்ச்சியையும், ஆறுதலையும் பெறுகிறாய். உதாரணம், புதிய நண்பனைவிட, பழைய நண்பனிடம் நீ மகிழ்வையும், ஆறுதலையும் உணருகிறாய். ஆனால் இந்த அன்பில் கிளர்ச்சியோ, உற்சாகமோ இருக்காது.

தெய்வீக அன்பு இவ்விரண்டையும் கடந்தது. தெய்வீக அன்பு எப்பொழுதும் புதியது. நெருங்கி வரவர, அதில் ஒரு கவர்ச்சியும், ஆழமும் இருக்கும். தெய்வீக அன்பில் ஆறுதல், உற்சாகம், நெருங்கிய பழக்கம் ஆகியவை உள்ளது. அதில் என்றும் சலிப்பே இராது. எல்லோரை

குருஜி

தேக ஆரோக்கியத்துக்காக நாம் தினசரி உணவு உட்கொள்ளுகிறோம். நல்ல ஓசைகள் கேட்கிறோம். நல்ல காட்சிகள் பார்க்கிறோம். வண்ண வண்ணமாக, வசதியாக உடுத்திக் கொள்ளுகிறோம். ஆனால் இவற்றை எல்லாம் கண்காணிக்கும் சக்தி ஒன்று இருக்கிறது. அதுதான் மனம். நல்லது -



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

அன்பின் ஊற்று-9



யும் அது விழிப்புடன் இருக்க வைக்கும். உலகம் சார்ந்த அன்பு, ஒரு சமுத்திரம் போன்றது; ஆனால் சமுத்திரத்துக்கு அடித்தளம் உண்டு. தெய்வீக அன்பு வானம் போன்றது; வரையறை இல்லாதது. எல்லை இல்லாதது. கடலின் அடித்தளத்திலிருந்து வானம் வரை எழு. அதாவது உலகம் சார்ந்த அன்பிலிருந்து தெய்வீக அன்பிற்கு உயர்வாயாக. ●


கெட்டது, சரியானது - தவறானது, மகிழ்ச்சியானது - மகிழ்ச்சி தராதது என்று எல்லாவற்றையும் தரம் பிரித்துக் காட்டும் சக்தி அதற்குத்தான் இருக்கிறது. ஆனால் அது வெளியே தெரியாததால், நாம் அதை மறந்துவிடுகிறோம். அதற்குக் கவனம் தருவதில்லை.

ஆர்ட் ஆஃப் லிவிங் அதைத்தான் செய்கிறது. உன் மனசுக்கு உணவளிக்கிறது. 'அதை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது. நம்முடைய பேச்சுகளிலும், பிறரோடு பழகுவதிலும் இறுக்கத்தைத் தளர்த்தி இயல்பாக்கிவிடுகிறது. அப்போது நாம் அமைதியின் தூதர்களாகவே மாறிவிடுகிறோம். உலகில் எல்லாருமே அப்படி ஆகிவிட்டால்? நினைத்துப் பாருங்கள். ஆர்ட் அஃப் லிவிங் அதைச் சாதிக்க முடியும்.

சிறைச் சாலைகளிலும், காவல் துறையிலும் நல்ல மாற்றம் கொண்டு வர முடிந்தது. ஆர்ட் அஃப் லிவிங் மூச்சுப் பயிற்சி எளிமையானது. இதைச் சொல்லித் தரும் ஆசிரியர்களும் நன்றாகப் பயிற்சி அளிக்கிறார்கள். அவர்கள், குருஜீ ஸ்ரீஸ்ரீரவிசங்கர் அவர்களால் உருவானவர்கள். எங்கள் காவல் துறை அதிகாரிகளுக்கு அவர்கள் பயிற்சி அளித்ததற்கு நான் மிகவும் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். ஒரு சமச்சீரான வாழ்க்கை முறைக்கு ஆர்ட் அஃப் லிவிங் வகை செய்கிறது. ஒரு நாள் நம் எல்லோருக்குமே அது தேவைப்படத்தான் போகிறது. எவ்வளவு சீக்கிரம் பயிலுகிறோமோ அவ்வளவு நல்லது.

இந்தப் பயிற்சியைப் பெற்றவர்களின் உத்தியோக வாழ்க்கையிலும் சரி, சொந்த வாழ்க்கையிலும் சரி, பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழும் என்பதில் எனக்கு நிறையவே நம்பிக்கை உண்டு.

டாக்டர் கிரண் பேடி,
புதுதில்லி



கட்டிப்பிடித்து முத்தமிடவா முடியும்?
ஒரு கப் காபி சாப்பிடலாம் வா!

— கவிஞர். தேவதேவன்

காதல், பிரமிப்புகளால் ஆன ஒரு வீட்டைக் கட்டுகிறது. அதில் ஒரு பாதிக் கதவாக ஆண் இருக்கிறான். மறு பாதிக் கதவாகப் பெண் இருக்கிறாள். இருவரும் பார்த்துக் கொண்டே பிரிந்திருக்கிறார்கள். காலம் காலமாகத் தங்களைச் சேர்த்து வைக்கக் காத்திருக்கிறார்கள். காற்றடிக்கும் போதெல்லாம் தாற்காலிகத் தீண்டல்கள் நடக்கின்றன.

இரவு வருகிறது. திருட்டு பயம் கதவுகளைச் சேர்த்து வைக்கிறது. என்றாலும், காதலில் கள்வர்கள் வெளியே இருந்து வருவதில்லை. கதவுகளே களவு செய்யத் தொடங்கி விடுகின்றன.

திடீரென்று ஒரு நாள் கண் விழித்து கண்ணாடி பார்க்கையில், மேல் உதட்டுக்கு மேல் மெல்லியதாய்ப் பூனை ரோமங்கள் தலைகாட்ட, பரவசங்களும்... புதிர்களும்... நிரம்பிய ஓர் உலகத்தில் ஆண் தள்ளி விடப்படுகிறான்.

திடீரென்று ஒரு நாள் ஊரே கூடி மஞ்சள் தேய்த்து மூலையில் தாவணியுடன் அமர வைக்கையில், தத்தளிப்புகளும்... தயக்கங்களும்... நிரம்பிய ஓர் உலகில் பெண் தள்ளிவிடப்படுகிறாள்.

இருவருக்கும் இடையில் ஒரு மெல்லிய திரையைக் கட்டிவிட்டு, யௌவனம் வேடிக்கைப் பார்க்கிறது.

யௌவனம், கைப்பிடியற்ற; இருபுறமும் கூர்மையான; பூக்களால் செய்யப்பட்ட; ஒரு கத்தியைக் கொடுக்கிறது. ஒரு சிலர் பூக்களுடன் வெளியே வருகிறார்கள். ஒரு சிலர் காயங்களுடன் வெளியே வருகிறார்கள்.

உடலிலிருந்து வெளியேறி உடலைப் பார்க்கும் கலையை, பதின் வயதுகள் கற்றுக் கொடுக்கின்றன. கிட்டத்தட்ட இந்த இடத்தில் தான் கடவுளும் சைத்தானும் எதிரெதிரே அமர்ந்து கொண்டு சதுரங்கம் ஆடுகிறார்கள்.

உடல், சதைகளால் ஆன ஓர் அருவி. அதன் ஆரம்பம் எங்கோ தொடங்குகிறது. அதன் முடிவும் எங்கோ செல்கிறது. அந்த அருவி, மேகங்களின் சிதறல்களுடனும், நீர்த் தாவரங்களின் வசீகரங்களுடனும், தன்னுள் மூழ்கும் ஒவ்வொருவரையும் பாறைகளின் இடுக்குளில் அழைத்துச் சென்று, பளபளக்கும் சூரிய ஒளியை அறிமுகப்படுத்துகிறது.

இதோ ஒரு சிறுவன் அல்லது சிறுமி, மனிதனாகவும் மனுஷியாகவும் மானுட சங்கமத்தில் நழுவி விழுகிறார்கள். ஒரு கூட்டுப் புழு பருவ மாற்றத்தில் பட்டாம் பூச்சியாகிறது. பதிலுக்கு இந்தப் பிரபஞ்சம் என்ன கொடுக்கிறது?

பகல், வெறுமையைப் பரிசளிக்கிறது.

இரவு, தனிமையைப் பரிசளிக்கிறது.

தூக்கமற்ற இரவுகளில் ஒவ்வொரு

விண்மீனும், 'எனக்கு ஒரு ரகசியம் தெரியும். அதை உனக்குச் சொல்ல மாட்டேன்' என்று கண் ணடிக்கிறது.





வயதின் பேராற்றங்கரையில் மூழ்கித் திணறுகையில், ஒரு பிம்பம் கைப்பிடித்து வெளியே இழுக்கிறது. அது கண்ணாடி பிம்பம்.

கண்ணாடிக்கு எதிரிகள் என்று யாராவது உண்டா? கண்ணாடிகள் நட்பைக் கொண்டாடுபவை. கண்ணாடி கள் சூட்சுமம் அறிந்தவை. நம் பிம்பத்தை நமக்கே காட்டி நம் மதிப்பையும் அன்பையும் சம்பாதிப்பவை. கண்ணாடி பார்க்கும் போதெல்லாம், நாம் கடவுளைப் பார்ப்பதைப் போல் மெய்மறந்து விடுகிறோம்.

அழகானவை, அசிங்கமானவை, குரூரமானவை, சாந்தமானவை என கோடிக்கணக்கான பிம்பங்கள் தன்

கிராமம், நகரம், மாநகரம் 3

நா. முத்துக்குமார்

மேல் விழுந்தாலும், கண்ணாடிகள் நிர்ச்சலனமானவை.

எது குறித்தும் அவற்றுக்குப் பெரிதாக சந்தோஷமோ அல்லது வருத்தமோ இல்லை. கண்ணாடிகளின் ஸ்படிக மௌனம் ஞானிகளுக்கும் அப்பாற்பட்டது.

கண்ணாடி பார்த்து வியத்தல்; பிரமித்தல்; மிரளுதல்; மோகித்தல்; புன்னகைத்தல்; தொலைத்தல், தேடுதல் என, பல பரிமாணங்களும் பதின் வயதுகளில் ஆரம்பித்து விடுகின்றன. கிராமம், நகரம், மாநகரம் இந்த மூன்று நிலவியலிலும் யௌவனம் கண்ணாடிக்குள் புதைந்து விடுகிறது.

கிராமத்து மார்கழி மாதங்கள் பூசணிப் பூக்களுடன் விடிகின்றன. தெருவடைத்த மாக்கோலத்தில் பூசணிப் பூக்கள் வைக்கும் குமரிகள், தெருக்கள் உருவானதற்கு அர்த்தம் கொடுக்கிறார்கள். இராமனின் கால்பட்டு அகலிகை உயிர்பெற்றது மாதிரி, இவர்களின் கைவிரல்கள் பட்டு தெருக்கள் தங்கள் நூற்றாண்டுத் தனிமையை கலைத்து விடுகின்றன.

பூசணிப் பூக்கள் பெரும்பாலும் குப்பைகளிலேயே பூக்கின்றன. குப்பையிலிருந்து படர்ந்து; பூசணிக் கொடி குடிசைகளில் ஏறி; கூரை முழுக்கப் பூசணி பூக்கள் பூத்த வீடுகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? வீடு பேறு பெற்ற வீடுகள் அவை.

மார்கழி மாதங்களின் விடியலில் இரவெல்லாம் வானம், சிந்திய பனித்துளிகளைக் கவிதைகளாய் மொழி பெயர்த்து வைத்திருக்கும் பூசணிப் பூக்கள்.

கருக்கலில் அவற்றைப் பறித்து கோலங்களின் சாணி உருண்டைகளின் மேல் ஒரு சிலை வடிப்பதைப் போல, குமரிப் பெண்கள் வைத்துக் கொண்டிருப்பார்கள். கண்களாலே தூது விட்டுக் கொண்டு தூரத்திலேயே சைக்கிளை விட்டு இறங்கி, கோலம் கலையாமல் சைக்கிளைத் தூக்கிச் செல்லும் வாலிபர்கள் விட்டுச் செல்வது சைக்கிளின் தடத்தை மட்டுமா? காதலையும் தான்!

வயல் வெளிகளில் நாற்று நடுகையில் மடைத் தண்ணீரில் சில மீன்களும் வந்து விடுவதுண்டு. கிண்டலும், கேலிகளும், நாட்டுப்புறப் பாடல்களுமாய்க் களையெடுக்கும் இளம் பெண்களிடமிருந்து வழுக்கிச் செல்வது மீன்கள் மட்டுமா? காதலும்தான்!

ஆற்றங்கரையின் நாணல் புதர்களில்... பூப் பூத்த கரும்புத் தோட்டங்களில்... தண்ணீர் எடுக்க வரும் ஊர்ப் பொதுக் கிணற்றடிகளில்... திருவிழாக் காலத்து தெருக்கூத்து இராத்திரிகளில்... என ஒவ்வொரு இடத்திலும் பாரதியும் செல்லம்மாவும் பாடிக்கொண்டே இருக்கிறார்கள்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தது இவ்விடமே!"

நகரத்துக் காதலை பெரும்பாலும் தட்டச்சுப் பயிலகங்களே முன்மொழிகின்றன. asdfgfக்குள்ளும், lkjhjக்குள்ளும் எத்தனையோ ஆண் பெண் உறவுகள் ஒளிந்திருக்கின்றன. சில விரல்கள் ஒன்று சேர்கின்றன. சில விரல்கள் அழிக்க முடியாத ரேகைகளுடன் பிரிகின்றன.

பாம்புகளைப் போல் காகிதங்களைச் சுருட்டிக் கொண்டு தட்டச்சுப் பயிலகங்களில் இருந்து வெளியே வரும் ஆண்களும் பெண்களும், காலத்தின் சுழற்சியில் எங்கு தான் செல்கிறார்கள்?

சூரியன் அவர்களுக்காக காலையிலும் மாலையிலும் தன் மஞ்சள் நிற ரேகைகளால் வெப்பத்தைக் குறைத்துக் கொண்டு ஆசீர்வாதம் செய்கிறது. அந்த

மஞ்சள் வெளிச்சம் இன்னமும் பல முகங்களில் படர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

நகரங்களின் கோயில் படித்துறையில் மீன்கள், இறைக்கப்படும் பொரிகளுக்காக கூட்டம் கூட்டமாக நீந்தி வந்து கொண்டே இருக்கின்றன. அவற்றின் கண்களுக்கு மேல், படிக்கட்டுகளில் காதல் மயக்கத்துடன் ஆண்களும் பெண்களும்.



மா நகரங்களில் காதல் ஒரு குறு மிளகைப் போல சற்று காரமாக இருக்கிறது. கடல் சார்ந்த மாநகரம் எனில் கேட்கவே வேண்டாம். கட்டுமரங்களுக்கும் வியர்க்கும் நண்பகல் வேளையில், ஜோடி ஜோடியாக வெண் மணலில் அமரும் காதலர்கள் நிரூபிக்கிறார்கள், காதலுக்குக் கண் மட்டுமல்ல... சூடும் இல்லையென்று...

திரையரங்குகளின் இருட்டுகளில் கடைசி நாற்காலிகளைத் தேடுவதற்காகவே காதலிப்பவர்களும் மாநகரத்தில் உண்டு.

அமெரிக்கக் கனவுகளுடன் கணிப்பொறிக் கல்வி மையங்களில் குவியும் லகான் கோழிகளும், சேவல்களும் நட்பில் தொடங்கி காதலில் முடிவடைகின்றன. விமானத்தில் ஏறி கிரீன் கார்டு கிடைக்கும் வரை இக்காதல் தொடர்கிறது.

மாநகரங்களில் ஆண், பெண் நட்பு இலகுவாக இருக்கிறது. தயக்கங்களின் சுவர்கள் எழாத நட்பு அது. நட்பா? காதலா? என்னும் கத்தி மேல் நடக்கும் கேள்விகள் மாநகரத்தில் அதிகம்.

கா தல், தும்மல், கர்ப்பம், புகை இந்த நான்கையும் மறைக்க முடியாது என்பார்கள். கிராமம், நகரம், மாநகரம் என எங்கு தோன்றினாலும் உண்மைக் காதலின் ஜுவாலை, இதயங்களின் அடிவாரத்தில் அணையாமல் எரிந்து கொண்டிருக்கும்.

ஆண் பெண் இருவரும் வெற்றிடமாக இருக்கிறார்கள். காதல் ஒரு காற்றைப் போல வந்து நிரப்புகிறது.

காதல்... அணைக்கும் போது மட்டுமே எரிகிற தீ. காதல்... இருப்பவற்றிலிருந்து இல்லாதவற்றைத் தேடுகிறது... இல்லாதவற்றிலிருந்து இருப்பவற்றைத் தேடுகிறது.

கவிஞர் கண்டராதித்தனின் இந்தக் கவிதையைப் படிக்கையில் காதலுக்கும் கடவுளுக்குமான இடைவெளி குறைந்து விடுகிறது.

நீ என்ன தீச்சொரூபினியா
ஆயிரமாயிரம் தழல்களாகச்
சுடர் விட்டு
பிரகாசிப்பது நீயா?
என் முன் மஞ்சள்
பெண் உருவில்
மாயா மாய விநோதங்களை
நிகழ்த்தி விடுகிறாய்
மலைகளை எரியச் செய்கிறாய்
நதியின் சீற்றத்தில் கலந்து
நீலக்கடல் அலைகளின்
நிழல்களை
எரிக்கின்றாய்
நீதானா செந்தீ!
உனது கண்களில் இருந்து
மகுடம் சுமந்து வெளியேறும்
எரிக்குருவிகள்
எல்லாத் தோட்டத்துக்
கனிகளாகவும்
பழுப்பது உன்னால் தானா?
தீயின் உருவை விரும்பி
ஏற்றுக் கொண்டாயா?

— **கவிஞர் கண்டராதித்தன்**
(கண்டராதித்தன் கவிதைகள்
தொகுப்பிலிருந்து...)

(சந்திக்கிறேன்)

புதுவைச் சிறப்பிதழ்

'வணக்கம்' மேடம் வர்றாங்கடா!

ஷாப்பிங் காம்ப்ளெக்ஸை விட்டு வெளியே வந்து, தனது ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு சாலையில் விரைகிறார் அந்தப் பெண். பின்னாலேயே ஒருவர் தொடர்கிறார். கிட்டத்தட்ட அரை கி.மீ. தூரம் தொடர்ந்து அவர் வந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும், ஸ்கூட்டியை சட்டென்று நிறுத்தி, "யெஸ்" சொல்லுங்க" என்றபடி அவரைப் பார்க்க, பின்னால் தொடர்ந்தவர் "நீங்க ஸ்கை சாட் தொலைக்காட்சியில் செய்தி வாசிக்கும் பவானி ஜெயச்சந்திரன்தானே?" என்று தட்டுத் தடுமாறிக் கேட்க, "ஆமாம்' என்ற புன்னகைத்த படி பவானி சொல்ல.. வந்தவர் ஏதோ திருப்தி யடைந்தவர் போலத் திரும்பிச் செல்கிறார்.

இது போன்ற நடுத்தெரு 'விசாரணை'கள், புதுவையில் கடந்த ஐந்தாண்டுகளாக பவானிக்கு ஏற்பட்டுக் கொண்டேயிருக் கின்றன.

என்னதான் சன், ராஜ், ஜெயா செய்திகள் இருந்தாலும், புதுவையில் வாழும் பத்து லட்சம் பேரில், குறைந்த பட்சம் இரண்டு லட்சம் பேர் ஸ்கை சாட் செய்தி ரசிகர்களாக இருக்கிறார்கள். சீனியர் பத்திரிகையாளர் தணிகைத்தம்பி செய்திகளுக்குப் பொறுப்பேற்க, நிர்வாக இயக்குனர் சலீம், சாட்டிலைட் தொலைக் காட்சிகளுக்கு இணையாக செய்தித் தயாரிப்பை செழுமைப்படுத்துகிறார். உள் ளூரில் பல நிகழ்ச்சிகளை நேரடியாகவே கவர் செய்து ஒளிபரப்புகிறது ஸ்கைசாட். சுற்றுச் சூழல் விவகாரங்களில் அதிகம் ஆர்வம் காட்டும் ஸ்கைசாட் தொலைக்காட்சியைச் செல்லமாக "முனிசிபாலிட்டி" என்று கூடக் கிண்டல் செய்கிறார்கள்.

"ஒரு வி.வி.ஐ.பி. ரேஞ்'சுக்குப் போனது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தாலும், கொஞ்சம் பயத்தையும் கொடுக்கிறது. இந்த ஊரில் சத்தமாகப் பேசினாலேயே எல்லோ ருக்கும் கேட்டுவிடும். எனவே என்னைப் போன்றவர்களுக்குப் ப்ரைவசி அவுட்" என்



• லீலா, வனஜா, மீனா

• பவானி

றார் பவானி. காஸ்டியூம் எப்படி செலக்ட் செய்கிறார்? "தேசிய தொலைக்காட்சிகள், தமிழ்த் தொலைக்காட்சிகள் என்று எல்லா சேனங்களிலும் செய்திகளைப் பார்க்கிறேன். பின் என் டேஸ்டுக்கு ஏற்றபடி பார்ப்பவர்கள் முகம் சுளிக்கா வண்ணம் அழகுபடுத்திக் கொள்கிறேன்" என்ற பவானியைச் சீண்டும் தோரணையில் "செய்தி வாசிக்கும் போது, குறிப்பாக தமிழ் செய்தியில் உச்சரிப்பைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமே!" என்றபோது, "என்ன... அப்படிச் சொல்லிப்புட்டீங்க" என்று மல்லுக்கட்டினார் பவானி. இவரது ஸ்பெஷாலிட்டி, கான்க்ரீட் தனமாகப் படிக்காமல் ஏற்ற இறக்கம், செய்திகளின் தன்மைக்கு ஏற்றபடி





• விஜயலட்சுமி

அழுத்தம் கொடுத்து வாசிப்பதாம். பிடித்த செய்தி வாசிப்பவர், சன் தொலைக்காட்சி ரத்னா. நிர்மலா பெரியசாமி துவக்கத்தில் "வணக்கம்" சொல்லும்போது கலகலப்பை உண்டாக்குவது போல, பவானி செய்தியை முடிக்கையில் 'வணக்கம்' சொல்வது ஸ்கை சாட் ரசிகர்களை ரொம்பவே கவர்ந்துள்ளதாம். "வணக்கம் மேடம் வாறாங்கடா" என்று பையன்கள் கிண்டலடிப்பதுண்டாம்.

இப்படி ஒரு பக்கம் ஸ்கைசாட் கலக்கிக் கொண்டிருக்க, மற்றொரு கேபிள் தொலைக்காட்சியான சிட்டி தொலைக்காட்சி, ஆங்கிலம், பிரெஞ்ச் என்ற இரு மொழிகளிலும் செய்திகள் சொல்லி அசத்துகிறது. இந்தியாவிலேயே கேபிள் தொலைக்காட்சியில் பிரெஞ்ச் செய்தி வாசிக்கப்படுவது சிட்டி தொலைக்காட்சியில் மட்டும்தான். பிரெஞ்ச் செய்தியை வாசிப்பது ஒரு இளமை டீம். லீலா, மீனா, வனஜா இவர்கள் மூவரும் சகோதரிகள். பிரான்ஸில் பிறந்து பாண்டிச்சேரியில் வளரும் இந்தச் சகோதரிகள், பிரெஞ்ச் தெரிந்த பாண்டி மக்களிடையே ரொம்பப் பாப்புலர். எந்தக் கேள்வி கேட்டாலும் ரொம்ப வெட்கப்பட்டுப் போகிறார்கள். அவர்களது அதிகபட்ச பதில், ஒரு மின்னல் கீற்றான புன்னகைதான்.


சிட்டி தொலைக்காட்சியில் பரவசத்தை உண்டாக்கும் முகங்கள், ஸ்வேதாவும் விஜயலட்சுமியும். ஆங்கிலச் செய்தி வாசிக்கும் ஸ்வேதா, ராஜீவ் காந்தி பொறியியல் கல்லூரியில் படிக்கிறார். "ஆங்கில உச்சரிப்புக்கு எப்படி பயிற்சி எடுத்துக் கொள்கிறார்?" வீட்டில் யாரும் பார்க்காத போது தனியாக உட்கார்ந்து செய்தித்தாளை சத்தமாக வாசிப்பேன். கல்லூரியில் ஆங்கிலத்தில் பேசினால், "அடப் பொண்ணு ரொம்ப தான் பீட்டர் வுடுதுன்னு" கிண்டல் செய்கிறார்களாம்.

— ப்ரியன்

படங்கள்: டிஜிட்டல் சண்முகம்

ARTHRITIS * CALCANEAL SPUR

மூட்டுவலி * குதிகால்வலி



▼ குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur) ▼ கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும். ▼ கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும். ▼ கழுத்து வலி (Cervical Spondylitis) ▼ நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area) ▼ இடுப்பு எலும்பும் (Pelvic Bone) தொடை எலும்பு தலையும் (Femoral Head) சேருமிடம். ▼ குதிகால் இணைப்புகளில் வலி. முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்க விளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம். இந்தியா மற்றும் வெளி நாடுகளில் இருந்தும் வியாதியஸ்தர்கள் வருகிறார்கள்.

அன்புள்ள டைரக்டர் திரு S.புருஷோத்தமன் அவர்களுக்கு,

நான் வலதுகை முழங்கை வலியாலும், வலது தோள்பட்டை வலியாலும், இடது மணிக்கட்டு வலியாலும் அவதிப்பட்டு வந்தேன். தாங்கள் எனக்கு ருமடாய்டு ஆர்த்ரைட்டிஸ் என்று டயக்னஸ் செய்து, பிறகு தாங்கள் கொடுத்த இயற்கை மருத்துவ சிகிச்சையில் 15 நாட்களிலேயே 80% மேலாக வலி குறைந்து விட்டது. வலியில்லாமல் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்.

டைரக்டர், டாக்டர், மேசியர்கள், பிசியோதெரபிஸ்டுகள், நர்சுகள், சமையல் டிபார்ட்மென்டில் உள்ளவர்கள் மற்றும் அடையார் இயற்கை மருத்துவமனையின் எல்லா உதவியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் மதிக்கத்தக்க சேவை, வலியால் துன்பப்படும் எல்லோருக்கும் போய் சேர வேண்டும் என்று ஆண்டவனை பிரார்த்தனை செய்கிறேன்.

T. விமலா, (w/o.T. தாமரைபாண்டி)

Flat.No.B.3 (1 floor), Akshaya Apartments, No. 24, Venkatesan Street, T. Nagar, Chennai - 600 017.

CANCER - புற்றுநோய்

ஆரம்ப நிலையில் உள்ள புற்று நோய்க்கு இயற்கையான முறையில், சிறப்பான, பக்க விளைவுகளோ, வலியோ, அசௌகரியமோ இல்லாத வகையில் சிகிச்சை அளிக்கின்றோம். புற்று நோயாளிக்கான பிரத்யேக உணவு வழங்கப்படும். அத்துடன் பிசியோதெரபி, யோகா, பிராணவாயு சிகிச்சை மற்றும் இரத்த ஓட்டத்தை சீராக்கக் கூடிய இயற்கை முறை சிகிச்சை அளிக்கப்படும்.

ரேடியேஷன், கீமோதெரபி எடுத்துக் கொள்ளும் புற்று நோயால் மிகவும் பாதிப்படைந்துள்ளவர்களுக்கு அதன் பக்க விளைவுகளை குறைக்கும்படியான (உதாரணமாக : முடி உதிர்தல், இரத்த சோகை, வாய்ப் புண் போன்றவை) இயற்கை முறை சிகிச்சையும், கேன்சர் வியாதியஸ்தர்களுக்கு தேவையான பாதுகாப்பான உணவு வகைகளும் வழங்கப்படும்.

ASTHMA - ஆஸ்துமா

1. Dyspnea (மூச்சுத் திணறல்) 2. Respiratory difficulties (மேல்மூச்சு வாங்குதல்)
3. Dry cough (வறட்டு இருமல்) 4. Cough with sputum (சளியுடன் கூடிய இருமல்)
5. Running Nose (மூக்கில் நீர் வழிதல்) 6. Nasal Block (மூக்கடைப்பு)

WEIGHT REDUCTION (உடல் பருமன்) for LADIES & GENTS

எங்களிடம் நாள்பட்ட இதர நோய்களுக்கும் ஆலோசனை கேட்கலாம்.

அடையார் இயற்கை வைத்திய மையம்

ADYAR NATURE CURE CENTER(TM) Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Phone:2441 3399, 2440 2470. Tele Fax: 044-2491 6650 (காந்திநகர் பஸ் டெர்மினஸ் எதிரில்)
www.adyarnaturecure.com E-mail: adyarnaturecure@yahoo.com.

குறிப்பு: சாதா, A/c தங்கும் அறைகள் மற்றும் ஜெனரல் வார்டு, கலர் டிவி, போன் வசதியுடன் கிடைக்கும். பிராமணர்களால் தயார் செய்யப்பட்ட சைவ உணவு வசதி மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.

* நந்தகுமார்



பிழைக்கத் தெரியாத சோல்தா!

சோல்தா!

பிரெஞ்ச் மொழியில் சிப்பாய், பட்டாளத்தான் என்று பொருள். பிரான்ஸ் நாட்டில் பணி புரிந்து, பின்னர் ஓய்வு பெற்று பாண்டிக்குத் திரும்பி, பிரெஞ்ச் ஸீனியர் சிட்டிசன்களாக வாழும் ஆயிரக்கணக்கானவர்கள் புதுவையில் உண்டு. பட்டாளத்தில் என்று மட்டுமல்ல; பிரான்ஸ் தேச அரசில் பல்வேறு பதவிகளில் பணியாற்றியவர்களும் இதில் அடக்கம். எல்லோரும் சோல்தாக்கள். இந்த சோல்தாக்கள் -

- காலையில் சோம்பல் முறித்து எழுந்து கொள்ள பத்து மணி ஆகிவிடும்.

- மதியம் மட்டனோடு சாப்பாடு கட்டாயம்.

- தூக்கத்துக்குப் பிறகு ஷார்ட்ஸ் போட்டுக் கொண்டு கடற்கரை வாசம்.


- அப்படியே 'பார்'க்கு சென்று கொஞ்சம் "போட்டுக்" கொண்டு வீடு திரும்புவார்கள், அல்லது வீட்டிலேயே 'பார்' இருக்கும். கார், பங்களா என்று சொகுசான வாழ்க்கை. காரணம் ஆயிரக் கணக்கில் அவர்களுக்குக் கிடைக்கும் பிரெஞ்ச் ஓய்வூதியம். இந்த சோல்தாக்கள் கடைகளுக்குப் போனாலோ, ஆட்டோக்களில் பயணம் செய்தாலோ, பேரம் செய்வதேயில்லை. இதன் காரணமாக வறுமைக் கோட்டிலும், அதற்குக் கீழேயும் இருப்பவர்களின் பாடு திண்டாட்டமாகப் போய் விடுகிறது. சோல்தாக்களைத் தவிர மற்றவர்களை வியாபாரிகள் அற்பப் பூச்சிகளாகப் பார்க்கிறார்கள்.

சோல்தாக்களுள் கொஞ்சம் வித்தியாசமான சோல்தா, நந்தகுமார் செல்வம் பிரான்ஸில் இருபத்தைந்து ஆண்டுகள் பணி புரிந்து, தமிழ் ஆர்வத்தில் தாய் மண்ணுக்குத் திரும்பியவர். புதுவை பிரெஞ்ச் தமிழர்கள் வட்டாரத்தில் ஒரு முக்கியப் புள்ளி. "வளர்க தன்னம்பிக்கை" - என்ற தமிழ் - பிரெஞ்சு இருமொழி மாதப் பத்திரிகையை நடத்திக் கொண்டிருக்கிறார். அகழ்வாராய்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்டவர். புதுவை சிட்டி கேபிள் தொலைக்காட்சியில், தமிழும், பிரெஞ்சும் கலந்து அரிக்கமேடு, காவிரிப் பூம்பட்டினம் போன்ற சரித்திரப் புகழ் பெற்ற இடங்களைப் பற்றிய நிகழ்ச்சிகளை நடத்துகிறார்.

"முன்பு போலல்லாமல் இப்போது சோல்தாக்களும் "முழித்துக்" கொண்டு விட்டார்கள். பர்ஸைத் திறப்பதற்கு யோசனை செய்கிறார்கள்" என்கிறார் நந்தகுமார். ஊரோடு ஒட்டி வாழ்!

- கௌசி

அமரர் கல்கி நினைவு இளமைச் சிறுகதைப் போட்டியில் 5000/- ரூபாய் மூன்றாம் பரிசு பெறும் சிறுகதை.



சிங்கப்பூரின் அந்த மிகப் பெரிய மருத்துவமனையிலிருந்து வெளியே வந்த யுகனேஸ்வரி, விரைவாக நடந்து, நொவீனா நிறுத்தத்தில் எம்.ஆர்.டியில் பயணித்து, தெம்பனீஸில் இறங்கி, ப்ளோக் 320தின் இரண்டாவது தளத்தில் இருந்த அந்த ஈரறை வீட்டில் நுழைந்தபோது, தொலைபேசி மணி ஒலித்தது. உடனே எடுத்துப் பேச,

அவள் அறைத்தோழி அலின் வாங்கின் தந்தை தான். அவரிடம் மரியாதை நிமித்தமாகப் பேசி, அன்று அலினின் ஷிப்ட் நேரம் மாற்றப்பட்டிருப்பதைப் பணிவுடன் தெரிவித்தாள். அவளுக்கு நன்றி தெரிவித்த டேவிட் வாங், "ஹவ் ஆர் யூ மை சைல்ட்?" என்று அவளை விசாரித்துவிட்டு, அவளுடனும் இரண்டு வார்த்தை அன்புடன் பேசிவிட்டுத்தான் தொலைபேசியைக் கீழே வைத்தார்.


அந்தக் கரிசனம் கூட கிஷ்கிந்தனுக்கு இல்லையே. அவனால் தானே நிரந்தரமாக வெளியே வர நேர்ந்தது. அது சார்ஸ், சிங்கப்பூரில் துவக்கத்தில் இருந்த நேரம்.

மருத்துவமனையிலிருந்து கிளம்புவதற்கு முன் தாதியர் (நர்ஸ்) அறைக்குச் சென்று சுத்தமாகக் குளித்து வேறு உடை அணிந்து வந்தாலும், மீண்டும் குளித்தாள். கவலைகளையும் அழுக்குகள் போல் நினைத்துக் கழுவி விட வேண்டும். சூடாக தேனீர் தயாரித்துக் கொண்டு, குடிக்கையில் தன் சொந்த வீட்டில் கூட இல்லாத உரிமை இங்கு இருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது.

சில காலம் முன்புவரை சார்ஸ் பாதிப்பில் இருந்த பிரிவில் அல்லாது வேறு பிரிவில் அவள் பணி செய்து கொண்டிருந்தாள்; இருந்தாலும் பல தாதியர் செய்தது போல் வீட்டில் குழந்தைகள் இருப்பதால், பொறுப்புணர்வுடன் தன்னைத்தானே தனிமைப் படுத்திக் கொண்டு, தாதியர் குடியிருப்பில் தங்கத் துவங்கினாள். பெயருக்குக் கூட கிஷ்கிந்தன் அவளை ஏன் போகிறாய் என்று கேட்கவில்லை. தனக்கு வரும் வருமானத்தில் பெரும்பகுதியை, தங்குமிடம் மற்றும் உணவு முதலியவற்றுக்குப் பெற்றுக் கொண்டவனுக்கு, பாசம் எங்கிருந்து வரும்?

சார்ஸ் நோயாளிகளைக் கவனிக்கும் பிரிவில் தாதியாகப் பணிபுரிந்த மோளி கருவுற்றிருந்ததால், யுகனேஸ்வரி தானாகவே

பெரிதினும் பெரிதுகேள்



மாதங்கி

விருப்பம் தெரிவித்து, அந்தப் பகுதிக்குப் பணிகளை மாற்றிக் கொண்டாள். அன்று மனத்தை உருக வைக்கும் ஒரு நிகழ்ச்சி நடந்தது. சார்ஸினால் தீவிர பாதிப்படைந்த ஓர் அம்மையாருக்குச் சிகிச்சை செய்ய, முதலில் அவரது தொண்டைச் சளியை எடுத்து பரிசோதனைச் சாலைக்கு அனுப்ப வேண்டும். அதற்கு முந்திய நாள்தான் சிகிச்சை அளித்த ஒரு மருத்துவரும், இரு தாதிமார்களும் நோய்த் தொற்று ஏற்பட்டு உயிர் துறந்திருந்தனர் என்ற நாளிதழ்ச் செய்தி, உலகில் அனைவரையும் கலங்கச் செய்தது.

"தொண்டையிலிருந்து சளியை யார் உறிஞ்சு குழாய் மூலம் எடுக்க முன் வருகிறீர்கள்?" என்று தலைமை மருத்துவர் ஜான் டேவிட் லாம் கேட்டபோது, அடுத்த வினாடி கையுயர்த்திய அந்த வார்ட் தாதியர் அனைவரையும் பார்த்து மருத்துவர் லாம் கண்கலங்கிவிட்டார்.

அந்தத் தாதியரில் பலருக்குச் சின்னஞ்சிறு குழந்தைகள் வேறு இருந்தன.

கடமையுணர்வுடன் ஒரு துளி முகஞ் சுளிப்போ அருவெறுப்போ இன்றி செயல்பட்ட அந்தத் தாதியரும், பரிசோதனைச் சாலைப் பணியாளர்களும், துப்புரவுப் பணியாளர்களும், மருத்துவர்களும் எளிதில் மறக்கக் கூடியவர்களா...? நோய் தீவிரமடைந்த அந்த அம்மையாரின் நன்றி காட்டிய முகத்தை மறக்கத் தான் முடியுமா?

"நீங்கள் எல்லோரும் மனிதர்களே அல்ல, கடவுளின் பிரதிநிதிகள்" என்று பல முறை சொல்லி அவர் விட்ட கண்ணீருடன், உயிர் பிரியும் முன் தேங்கியிருந்தது அன்பும் நன்றியும் மட்டுமே.

ஞாயிறு அன்று வீட்டிற்குச் சென்றபோது அம்மாவிடம் மனம் பொங்கிச் சொன்னாள். அண்ணன் கெஷிந்தன் ரௌத்திரமடைந்தான். "யூகி, முட்டாள் பெண்ணே, இந்த மருத்துவமனையில் வேலையை விட்டுவிடு" என்று கடுமையாகக் கூச்சலிட்டான்.

"இதெல்லாம் எதிர்பார்க்காமலா தாதிப் பயிற்சியில் சேர்ந்தேன்" என்ற அவளை அவன் பேச விட்டால்தானே! "என் வீட்டில் நான் சொல்வதைக் கேட்டு கீழ்ப்படியாவிட்டால், வீட்டை விட்டு நிரந்தரமாக வெளியே போ" என்று கூச்சலிட்டான். அப்போது கூட அவளுக்குப் போக வேண்டும் என்ற உந்துதல் வரவில்லை. ஆனால் காரணமேயில்லாமல் உதவி மருத்துவர் அரவிந்தனை, வம்புக்கு இழுத்து அவமானப் படுத்தினான்.

"இவளைத் தாதியர் பயிற்சியில் மேல் படிப்பு படிக்க வைத்துவிட்டானில்லையா,

அந்த அரவிந்தன், அவன் சொல்லுக்குத் தான் இவள் ஆடுவாள். திருமணத்திற்குப் பிறகு இவளை அமெரிக்காவுக்கோ, ஐரோப் பாவுக்கோ வேலைக்கு அனுப்பி, நிறையச் சம்பாதிக்க வைப்பான், இவள் பணத்தை அள்ளிக் கொள்வான். பணத்திற்குத் தானே காதல், கத்தரிக்காய் என்று பேசுகிறான்."

தேசிய பல்கலைக்கழக மருத்துவமனை யின் மருத்துவராகவும், அவள் மனம் கவர்ந் தவனாகவும் இருந்தான் அரவிந்தன்.

தாதியாகச் சேர்ந்து கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் தன் வருமானத்தைப் பெற்றுக் கொண்ட அண்ணன், இன்னும் இரு ஆண்டு கள் கழித்துதான் திருமணம் என்று கூறிய தைக்கூட ஒப்புக் கொண்டிருந்தாள். அரவிந் தனைக் கேவலப்படுத்திப் பேசியதை அவளால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. சற்று நேரத்திலே தன் உடைமைகளை எடுத்து, எஸ்எம்.எஸ்சில் சகக் கூட்டாளி யான அலைனைத் தொடர்பு கொண்டு, அலைன் வீட்டில் இருப்பதை உறுதி செய்து கொண்டு அம்மாவிடம் விடைபெற்றபோது கூட, கிஷ்கிந்தன் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஊடான் ஃபுட்டிலிருந்து பார்வையை விலக்க வில்லையே!

கனத்த மனத்துடன் நடந்து அருகி லிருந்த பேரங்காடிக்கு முன் இருந்த வாட கைகாடி நிறுத்துமிடத்திற்கு வந்து, காடியில் பயணித்து இறங்குகையில், அவள் ஒரு தாதி யாக, சார்ஸ் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்ட அந்த மருத்துவமனையில் பணிபுரிகிறாள் என்பதை அறிந்து கொண்ட அந்த ஓட்டுனர், அவளிடம் அவள் நீட்டிய பத்து வெள்ளியை வாங்க மறுத்தது மட்டு மின்றி, அவள் சேவையைப் பாராட்டினார். அவளும் அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு, காடியில் குறிக்கப்பட்டிருந்த அவரது முழுப் பெயரைப் பார்த்தாள் மகம்மது நசீம் ஹுசைன் என்று அது தெரிவித்தது. அவர் பெயர் மற்றும் காடி எண் குறிப்பிட்டு நன்றி பாராட்டி, மின்மடலில் தேசியப் பத்திரிகை யான தி ஸ்ட்ரெய்ட் டைம்ஸ்க்கு மறுநாள் அனுப்பி வைத்தாள்.

அதற்கு பின் அரவிந்தனிடம் அடிக்கடி தொலைபேசியில் பேச அவளுக்கு நேரம் கிடைக்கவில்லை. எஸ்.எம்.எஸ் அல்லது மின் மடல்தான். அரவிந்தன் அவளது தொண்டிற்கு மிகவும் உற்சாகம் அளித்தான்.

சிரித்த முகத்துடன் பணி புரிபவளுக்கு நோயாளிகளைக் கையாள்வதோ, ஆக்க பூர்வமாகவோ ஆறுதலாகவோ பேசுவதோ புதிதல்ல, ஆனால் கடுமையான தொற்று நோய் என்பதால், மிக நெருங்கிய உறவினர் கூடப் பார்வையாளராக வர இயலாத சூழல். இது மருத்துவர் உலகுக்கே சவாலாக இருந்தது. "நீ என் தாய், என் மகள், என் சகோதரி" என்று ஒவ்வொரு நோயாளியின் கதறலும் கண்ணீரும், அவளுக்குச் சில புதிய சிந்தனைகளைத் தோன்றுவித்தது. பணி களைச் செய்வனே செய்து வந்த அவள் போன்றவர்களுக்கு மனத்தெம்பை அளித் தது. எம்.ஆர்.டி. நிலையத்தில் நன்றி தெரி வித்து பொதுமக்கள் எழுதிக்குவித்த கையெழுத்துக்கள், மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட வாழ்த்துக்கள், மலர்க் கொத்துக்கள். அதிலும் ஒரு ஆறு வயதுச் சிறுமி, தானே தயாரித்த வண்ண அட் டையில் fly fly letter fly for all your service no money can buy என்று தாதியர் படம் வரைந்து, அதில் மருத்துவ உபகரணங்களின் படங்கள் வரைந்து அலங்கரித்து அனுப்பி யதை, அந்த மருத்துவ மனையின் அறிவிப்புப் பலகையிலிருந்து எடுக்க யாருக் கும் மனம் வரவில்லை.


உண்மையில் முதலில் தயங்கிய ஒரு சிலர் கூட, வெகுவிரைவில் மருத்துவத் துறை, மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் சேவையைப் பார்த்து மனம் மாறினர், ஆனால் கூடப்பிறந்த சொந்த ரத்தம்...? ஒரு வினாடிதான் நினைத்தாள், மறுகணம் சிந்

''தலைவரே! உங்களுக்கு 'நன்றி' தெரிவிச்சு எதிர்கட்சித் தலைவர் போஸ் டர் ஒட்டி இருக்காரு...''

''எதுக்காம்...?''

''அவருக்குத் தலைவலி கொடுத்து வந்த வட்டச் செயலாளரை நீங்க கட்சி யில சேர்த்துக்கிட்டீங்கல்ல, அதுக்காக!''

– மலர் சூர்யா



தனையை மாற்றினான். இந்த மூன்று மாதங்களில் சார்ஸ் மட்டுமா உலக நாடுகளை உலுக்கியது? ஈராக் போர், இந்தோனேசியக் கலவரங்கள், அங்கங்கே தீவிரவாதிகளின் தாக்குதல்கள், வெள்ளம், பூகம்பம் என்று இயற்கையின் சீறல்கள், மூன்று மாதங்கள் மூன்று நொடிகளாகப் பறந்தன.

சிங்கப்பூர் சீரடைந்து வந்தது அறிவிக்கப்பட்டது. அரவிந்தன் அன்று அவளைத் தன்னுடன் உணவுக்கு அழைத்திருந்தான். ஏதோ முக்கியமாகப் பேச வேண்டும் என்று வேறு கூறியிருந்தான். எல்லாம் அவர்களது வருங்கால நடவடிக்கைகளைப் பற்றிப் பேசுவதற்காக என்றான்.

அன்று தன்னை எளிமையாக, ஆனால் அழகாக அலங்கரித்துக் கொண்டாள்.


அவளுக்கும் ஒரு முக்கிய நோக்கம் இருந்தது. சார்ஸ் பிடியிலிருந்து நாடு விலகி "கூல் சிங்கப்பூர்", "சிங்கப்பூர் இஸ் ஓகே' என்ற வாசகங்கள் அங்கங்கே முழங்கிக் கொண்டிருந்தன. அதோ, அரவிந்தன் அங்கு ஒரு காலி மேசையருகில் அமர்ந்திருந்தார். இருவரும் சுருக்கமாகப் பேசி உணவு உண்டு முடித்தனர்.

"யூகனேஸ்வரி, வாழ்வின் உச்சகட்டத்தில் நாம் உள்ளோம், இப்போது நம்மிடம் ஒரு பெரிய சொத்து உள்ளது, அது நம் இளமை. கல்வியில் மேம்படுத்திக் கொண்டோம், இதோ இது நம் வாழ்வில் பல பல சாதனைகளுக்கும் புரட்சிகளுக்கும் நம்மை அழைத்துச் செல்லப்போகிறது, இளையரான நமக்கு மிகச் சிறந்த உடல் நிலை, ஆரோக்கியம், மனத்திண்ணம், நினைத்ததைச் செயல்படுத்தும் ஆற்றல், இதெல்லாம் இந்தப் பருவத்தின் உச்சகட்டத்திலிருக்கும், அந்தச் சக்தி வீணாகக் கூடாது. நாளைய உலகை வளமாக, அமைதியாக ஆக்குவது, இளையரான நம் கையில் தான் இருக்கிறது. ஆக்கபூர்வமாகச் செயல்படலாம். இந்தக் கவிதையைப் பார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் எழுதியது,

"தன் பெண்டு தன் பிள்ளை சோறு வீடு,
சம்பாத்தியம், இவையுண்டு தானுண்டு
என்போன்
சின்னதொரு கடுகு போல் உள்ளம்
கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்
கன்னலடா என் சிற்றூர் என்போன்
உள்ளம்
கடுகுக்கு நேர் மூத்த துவரை உள்ளம்
தொன்னையுள்ளம் ஒன்றுண்டு
தனது நாட்டுச் சுதந்திரத்தால்
பிற நாட்டைத் துன்புறுத்தல்."

"மருத்துவமனையில் என் பணியில் இரண்டு ஆண்டு விடுப்பு பெற்றுக் கொண்டு, தொண்டூழியராகப் பதிவு செய்து கொண்டு வியட்நாம் செல்லப்போகிறேன், மருத்துவ உதவிக் குழுவினருடன். அங்கு என் பணி நிரந்தரம் அன்று, கம்போடியா, நேப்பாள், எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கு செல்லும் குழுவில் சேர விருப்பம் தெரிவித்துள்ளேன்." அவன் பேசிக் கொண்ட போனான், யுகனேஸ்வரியின் இரண்டு கண்களிலிருந்தும் தாரை தாரையாகக் கண்ணீர். வாயிலிருந்து ஒரு கேவல் சத்தம் கூட இல்லை, அப்படியே அவன் கையைப் பிடித்துக் கொண்டு எழுந்தாள்.

"பேசு யூகனேஸ்வரி ஏதாவது பேசு, இதோ பார்" என்று அவள் முகத்தை மெல்லத்திருப்ப, அவள் தன் கைப்பையிலிருந்து அதே தொண்டூழியத்திற்கு விருப்பம் தெரிவித்து, தான் கையெழுத்திட்ட விண்ணப்பத்தை எடுத்து, அவன் முகமெதிரில் காட்டிவிட்டு, கண்ணீரோடு சிரித்தாள். அரவிந்தன் அவளுக்காகக் கொண்டு வந்த விண்ணப்பம் அவன் சட்டைப்பையிலிருந்து, மேசைமீது விழுந்தது.



"என்னைப் பத்தி உங்க பிரண்டு கிட்ட என்ன சொன்னீங்க?"
"எதுக்கு கேக்கற மீனா?"
"போன்ல என்னோட குரலைக் கேட்டதும் 'ஸாரி– ராங்கி நம்பர்'னு சொல்லி வெச்சிட்டார்!"
– கொங்கணாபுரம் வே. செந்தில்



கண் சிமிட்டும் கல்யாணப் புடைவைகள்!

ஒரு பெண், தன் வாழ்நாளில் மறக்க முடியாதது தன் மணநாள், மற்றும் அன்று ஸ்பெஷலாக அணிந்து கொண்ட புடைவைகள்! எத்தனை வருடங்களானாலும் பீரோவில் அதற்கென ஒரு தனி இடமிருக்கும்.

திருமணப் பட்டுப் புடைவைகளுக்குத் தனி மதிப்பு இருந்தாலும், இன்று டிஸைனர் ஸாரிகளுக்கு ஏக வரவேற்பு. பெங்களூரிலிருக்கும் அன்ஷு - நீத்தி என்ற இளம் பெண்கள் டிஸைனர் ஸாரி ஸ்டுடியோ (இப்படியொரு ஸ்டுடியோவா?) நடத்துகிறார்கள். இவர்களின் சிறப்பு, மணமகளுக்கான பிரத்யேக டிஸைனர் புடைவைகள்! இந்தப் புடைவைகள் நம் காஞ்சி பட்டுப் புடைவைகளல்ல. ஷிஃபான், க்ரேப், ஜார்ஜெட் மற்றும் கைத்தறி சில்க் புடைவைகள்.



''நாங்கள் மீனாகாரி, ஜர்தோஸி, ஜடாவு போன்ற ரிச்சான வேலைப்பாடுகளை புடைவை மற்றும் அதற்கு மாட்சிங் சோளியில் செய்து தருகிறோம். 'டிஸைனர் ப்ரைடல் பாக்கேஜ்' என்று ஒரு ஆஃபர் தருகிறோம். இதில் சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் தந்தால், ஐந்து க்ராண்ட் புடைவைகளும் ஐந்து டிரஸ்களும் (சல்வார் கமீஸ், பான்ட்...) தருவோம். கூடவே திருமணத்தன்று மேக்கப் ஆர்டிஸ்டை அனுப்பு





"

ஒரு பெண் தன் வாழ் நாளின் முக்கியமான நாளன்று எங்கள் கிரியேஷனை அணிவது பெருமையான விஷயம்.

"

வோம். எங்களிடம் ஏகப்பட்ட டிஸைன்கள். மணமகளின் விருப்பத்திற்கேற்றவாறு கலர் காம்பினேஷனில் ரெடி செய்து தருவோம். வட இந்தியத் திருமணங்களில் லஹங்கா – சோளி, காக்ரா – சோளி அணிந்து கொள்வதுண்டு. அதனால் இந்த பாக்கேஜில் மிக ரிச்சான காக்ரா கொடுப்பதுண்டு. எங்களிடம் ஒரு லட்சம் ரூபாய் வரைக்கும் பாக்கேஜ்கள் இருக்கின்றன'' என்கின்றனர் அன்ஷுவும் நீத்தியும்!

புடைவைகளிலிருந்த வேலைப்பாடுகள் நம்மை ஈர்க்கின்றன. இவர்களிடம் வேலை செய்பவர்கள் அத்தனை பேரும் லக்னோ மற்றும் கல்கத்தாவிலிருந்து வந்திருக்கின்றனர். ஸ்வரோஸ்கி, கற்கள் மற்றும் ஜப்பானிலிருந்து ஸ்பெஷலாக வரவழைக்கப்பட்ட

“சர்வருக்குச் சம்பள பாக்கியா?”
“எதுக்காக கேட்கறீங்க?”
“டிப்ஸ் குடுத்ததும் கையப் புடிச்சுக்கிட்டு எங்க முதலாளிய விட நீங்க நல்லா இருக்கணும்னு சொல்றாரே!”
– அம்பை தேவா



கற்களைக் கொண்டு, ஆடையில் நுணுக்கமான வேலைப்பாடுகள் செய்கின்றனர் இத்தொழிலாளிகள்.

ஓரகத்திகளான அன்ஷுவும் நீத்தியும் முறையாக ஃபேஷன் டெக்னாலஜி படித்து விட்டு இத்துறைக்கு வந்திருக்கிறார்கள்.

“திருமண அலங்காரம் மற்றும் அன்று அணியும் புடைவைகள் குறித்து ஏதேனும் செய்ய வேண்டும் என்பது எங்கள் ஆசை. ஸ்பெஷலாக மணமகளுக்கென்று புடைவைகள் தரும் 'புட்டிக்'கள் அதிகம் இல்லை. அதனால் இதைத் தேர்ந்தெடுத்து சுமார் இரண்டு வருடங்களாகச் செய்து வருகிறோம். ஒரு பெண் தன் வாழ் நாளின் மிக முக்கியமான நாளன்று எங்கள் கிரியேஷனை அணிந்து கொள்வது எங்களுக்குப் பெருமை”– படபடக்கின்றனர்.

திருமணம் மட்டுமல்லாது மற்ற விசேஷங்களுக்கான புடைவைகளும் இங்கு உண்டு. ஆனால் ஆரம்பமே நான்காயிரம் ரூபாயிலிருந்து.

காலேஜ் பெண்களுக்கெனவும் கண்கவர் டிஸைன்களில் நவீன உடைகள் இருக்கின்றன.

“மெரிகோல்ட், பர்பிள், மாண்டரின் ரெட், ப்ளாக்... இதெல்லாம் தான் இப்போதைய ஹாப்பனிங் கலர்ஸ்! டபுள் லேயர் லஹங்கா, அதுவும் கான்ட்ராஸ்ட் கலர் கொண்டதற்குச் செம டிமாண்ட்..'' என தற்போதைய ஃபேஷன் ஸ்டேட்மெண்டைச் சொல்கின்றனர்.

பர்ஸ் கனமாக உள்ளவர்கள், மனைவியிடமிருந்து மாதம் முப்பது நாளும் ஒரே போல் 'கவனிப்பு' எதிர்பார்ப்பவர்கள் வாங்கித் தரலாம்!

மற்றபடி மணமகள் பாக்கேஜ் கண்ணுக்குக் குளிர்ச்சி!

மாடல் : கோமல்

லதா சேகர்,
பெங்களூர்



• சுபா



‘சண்டியர்’ பிரச்னை, பெயர் மாற்றம், அரசியல் விஷயங்கள் இப்படி பல ‘தடார், படார்’ விஷயங்கள் பற்றி விஜய் டீ.விக்கு ஆக்ரோஷ பேட்டிக் கொடுத்திருக்கிறாராம் கமல். ஆகஸ்ட் 15-ல் இதை ஒளிபரப்ப போகிறார்கள்.

ராஜ் டீ.வி.யில் நீ..........ண்ட காலமாக காம்பயர் பண்ணிக் கொண்டிருக்கும் சுபா, ‘ஹோம் பர்னிச்சர்ஸ்’ என்ற கம்பெனியில் மார்க்கெட்டிங் மானேஜர்!

"இரண்டிலும் எப்படி?" என்றோம்.

''என்ன பண்றது? நேரத்தை அட்ஜஸ்ட் பண்ணிட்டுதான் ஷூட்டிங் போறேன். சீரியல்கள்ல நடிக்கவும் ஏகப்பட்ட அழைப்பு. நேரம் இல்லாததாலேயே ‘நோ’ சொல்ல வேண்டியிருக்கு" என்கிற சுபா, அடிக்கடி கம்பெனி விஷயமாக வெளிநாடுகளுக்குப் பறக்கிறார். சமீபத்தில் சென்று வந்தது ஜெர்மனி.

பியூட்டி பார்லரில் ஷூட்டிங் நடத்த வந்தால் அங்கிருப்பவருக்கு நடிக்க வாய்ப்புக் கிடைக்குமா?

''கிடைக்காதா என்ன?'' என்கிறார் வெங்கட். ‘மைதிலி பியூட்டி பார்லரைக்’ கவனித்துக் கொண்டிருந்த இவருக்குச் சிறு வயதிலேயே நடிப்புக் காதல்! ‘சித்தி’க்காக பார்லர் வந்த இயக்குனர் சி.ஜே.பாஸ்கரின்

• விளம்பரம்...



காதில் ஆசையைப் போட, அடுத்த தொடரில் ‘அசத்தல் கேரக்டர் தர்றேன்’ என்றாராம்! சொன்ன வாக்கைக் காப்பாற்றுவதற்காக, ‘அண்ணாமலை’யில் இவரைச் சுப்புவாக்கிவிட்டார்.

"வருங்காலத்தில் ஒரு பெரிய டைரக்டர் ஆகணும்" என்கிற 'சின்ன' ஆசையும் இருக்கிறது வெங்கட்டுக்கு!

'டேக் இட் ஈஸி' நிகழ்ச்சியில் கடந்த சில வாரங்களாக பர்ஸ் பாண்டியாக வந்து கலக்குகிறார் ஊர்வசி. பல்வேறு சானல்களில் வெளிவரும் சினிமா ரேட்டிங் நிகழ்ச்சிகளைக் கிண்டல் செய்யும் விதமாக இந்நிகழ்ச்சி. பர்ஸ் பாண்டி செட்டப், ஊர்வசி பேசும் ஸ்டைல், ஏதோ ஒரு சானலைக் கிண்டலடிப்பதாக இருக்கிறதே!



'ரெக்கை கட்டிய மனசு'க்கு ஊரெல்லாம் வித்தியாசமாக விளம்பரப் பலகை வைத்திருக்கிறார்கள். சீரியல் கேரக்டர்களை விளம்பரத்தில் காட்டுவதுதான் வழக்கம். ஆனால் இலக்கணத்தை மீறி, ஓர் ஐயர் 'டாட்டூ' போட்டிருக்கும் பாடி பில்டர் போலவும், மடிசார் மாமி 'பைக்'கில் சவாரி செய்வது போலவும் வைத்திருக்கிறார்கள். இருவருமே தொடரில் தலை காட்டுபவர்கள் அல்ல! ஏனாம்?

'சும்மா ஒரு சேஞ்சுக்குத்தான்; இலக்கணம் மீறிய சுவாரஸ்யமாச்சே!" என்கிறார்கள்.

புது மின்னல்!

விஜய் டி.வியின் 'ஸ்டார் மின்னல்'லில் மின்னிக் கொண்டிருக்கும் ஷம்ஸத், டி.வி. உலகுக்குப் புது வரவு!

'மிரிண்டா' விளம்பரத்தில் வந்து கொண்டிருந்த இந்த மாடல், ராஜீவ் மேனனின் பல விளம்பரங்களில் நடித்திருக்கிறார். சென்ற ஆண்டின் 'மிஸ் தென்னிந்தியா'வான இந்த ஷம்ஸத், "வாரா வாரம் ஒரு வி.ஐ.பியைச் சந்தித்துப் பேட்டி காணப் போறேன். மாடலிங்ல சுத்திட்டிருந்த எனக்கு இது புது அனுபவம். நிறையப் பேரை மீட் பண்ண முடியுது, நிறையத் தெரிஞ்சுக்க முடியுது. சந்தோஷமா உணர்றேன்" என்கிறார். சினிமா, டி.வி. தொடர் இயக்குனர்களே, இதோ இன்னொரு நாயகி ரெடி!

— ஏக்ஜி



• ஷம்ஸத்



• ஊர்வசி

எளிமையான தோற்றம். அரைக்கைச் சட்டை; வேட்டி. அதிர்ந்து பேசாத அமைதியான குரல். ஆனால் இந்த மனி தரைத் திர்த்துக்கட்ட பல தனிப்பட்டவர் களும் முயன்று தோற்றதுண்டு. காரணம் : இவர் சப்தமில்லாமல் செய்யும் சமூகப் பணிகள்! பெயர் : மாவடியான்.

பெயர் மட்டுமல்ல, ஆளும் வித்தியாச மானவர்தான். தஞ்சையில், கல்லணைக்குப் போகும் வழியில் உள்ள கருப்பூர்வாசி.


"1973ல் காந்திய நல மேம்பாட்டுச் சங்கம் அமைத்து, தொண்ணூற்று ஒன்ப தாம் ஆண்டு வரைக்கும் சமூகப் பணிகள் செய்தோம். மது ஒழிப்புக் குழுக்கள் உரு வாக்கி, சுற்றுப்பட்டு கிராமங்களில் நூற்றி யறுபது இளைஞர் மன்றங்கள் அமைத் தோம். இன்று எழுநூற்றி நாற்பது மகளிர் குழுக்களும் செயல்படுகின்றன" என்கிறார் மாவடியான்.

நூற்று அறுபது இளைஞர் மன்றங்களும் சமூக மாற்றத்துக்காக உழைக்கும்போது, அரசியல்வாதிகள் மட்டுமன்றி, காவல் துறையினர் சிலரும் அதிகமாகவே சிரமப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இளைஞர்கள் அஞ்சவில்லை.


"பண பலமும், பதவியும், அதி காரமும் ஓர் இடத்தில் இருந்தால் அங்கே எதேச்சாதிகாரமும், சர் வாதிகாரமும்தான் நிற்கும் என்றார் காந்தி. எனவே பொதுச் சேவை யில் ஈடுபடும்போது இதை எல்லாம் எதிர்கொள்ளத்தான் வேண்டியிருக்கும். முதலில் முத்தமிழ் இளைஞர் நற்பணி மன்றம் ஆரம்பித்தேன். பிறகு காந்தி கிராமத்துக்கு வயது வந்தோர் கல்வி மேற்பார்வையாளர் பயிற்சிக்குப் போய்வந்த பிறகு பணிகளை விரிவாக்கினோம். என்னைக் கொலை செய்ய வந்தவர்கள்கூட, 'இந்த ஆளின் மீதா கை வைப்பது?' என்று பதறிப் போனார்கள். எந்தத் துன்பம் வந் தாலும் ராமநாமத்தைத்தான் ஜெபிப்பேன். என்மீது பலமுறை கொலை முயற்சிகள் நடந்த போதும் அதைத்தான் செய் தேன்!" என்கிறார் மாவடியான்.

அப்படி என்ன சமூகப் பணிகள்?

முதியோர் ஓய்வூதியத்துக்கு வகை செய்து கொடுப்பது; பள்ளிக் குழந்தைகளை ஊக்குவிக்கப் பரிசுகள் கொடுப்பது, ஆற்றில் பெரிய கேணி போட்டு, தண்ணீர் எடுக்க உதவுவது; தென்னை மரங்களை ஏலம் எடுத்து, வருவாயைப் பொதுச் செலவுக்குப் பயன்படுத்துவது; விளை பொருட்களை விவசாயிகள் கொடுத்தால் விற்றுக் கிடைக்கும் சிறு லாபத்தை மக்களுக் காகச் செலவழிப்பது...



● மாவடியான்.



ஓ, கருப்பூர்

"எங்கள் கருப்பூரிலேயே ஆள் இல்லாத பழக்கடை ஒன்றை, முன் மாதிரியாகத் தொடங்கினோம். எல் லோருமே காசைப் போட்டுவிட்டுத் தான் பழங்களை எடுத்துச் சென்றனர்.

பஞ்சாயத்தா..?'



மக்களுடைய மனப்போக்கை அளக்க ஓர் அளவுகோலாக இந்தக் கடையை நடத்தினோம்!" என்கிறார் மாவடியான்.

நீதி பரிபாலன் கமிட்டிதான் கிராம நடுவர் மன்றம். "அடிச்சவனுக்கும் தண்டனை இல்லே. அடி வாங்கினவனுக்கும் பயன் இல்லே. சமாதானம்தான்! அதுனாலதான் எங்க ஊருக்கு, ஏளனமாக, 'ஓ கருப்பூர் பஞ்சாயத்தா!' என்பார்கள். இப்படி நக்கலாகச் சொல்லுகிறார்களே என்று, இதை மாற்ற, கிராம கோர்ட் அமைத்தோம். எல்லா மக்களும் பங்கு கொள்ளுவார்கள். இளைஞர்களும், பெரியவர்களுமாக முப்பத்திரண்டு பேரைத் தேர்ந்தெடுத்தோம். ஒவ்வொரு சனிக்கிழமையும் மன்றம் கூடும். பாதிக்கப்பட்டவர் ஒரு பெட்டிஷன் கொடுப்பார். எதிர்த் தரப்புக்காரரைப் பார்த்துச் சொல்லுவோம். ஒரு பிள்ளையார் கோயிலில்தான் பஞ்சாயத்து நடக்கும். இதை பலரால் ஜீரணிக்க முடியவில்லை. இடர்ப்பாடு உண்டாக்கினார்கள். தொடர்ந்து பிள்ளையார் கோயிலுக்கு, காளியம்மன் கோயிலுக்கு எல்லாம் ஐம்பது ரூபாய்க்கு எண்ணெய் வாங்கிக் கொடு என்றார்கள்..."

மெல்லச் சிரித்தபடி தொடர்கிறார் மாவடியான் :

"அய்யனார் கோயிலில் விழா நடக்காமல் இருந்தது. சாதிச் சண்டைதான் காரணம். சாமிக்குச் சாதி இல்லை, மதம் இல்லை. எந்தச் சாமிக்கும் சண்டை பிடிக்காது என்று சொன்னோம். மூணு-நாலு வருஷமா எல்லாத் தெருக்களுக்கும் சாமி ஊர்வலம் கொண்டு போனோம். மாவடியானுக்கு பி.ஜே.பி. பணம் கொடுக்கிறது என்றுகூட அவதூறு சொன்னார்கள். நான் போய் விளக்கியதும் புரிந்துகொண்டார்கள். தங்கள் கட்சியில் சேர்த்துவிட, ஒரு கட்சி என்னைத் தொந்தரவும் செய்தது!"

டில்லிக்கு, காந்தி சமாதிக்குப் போகும்போதெல்லாம் ஏதாவது ஒரு பொருளை விட்டுவிடுவார் மாவடியான். கடைசியாக விட்டது. கடிகாரம். ஆம், கடிகாரமே கட்டுவதில்லை.

1986ஆம் ஆண்டு தொட்டு இன்று வரை, சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே வீட்டுச் செலவுக்கு எடுத்துக் கொள்ளுகிறார். இரண்டு பங்கு பொதுத் தொண்டுக்கு! மூன்று ஒன்றியங்களில் இரவுப் பள்ளி நடந்து வருகிறதாம்.

பொருளாதார மேம்பாட்டுக்காக வங்கிகள் இரண்டரைக் கோடி ரூபாயை, விவசாயக் கடன், தொழில் அடிப்படைக் கடன், பால் சொசைடி நடத்தக் கடன் என்று கொடுத்திருக்கின்றனவாம்.

"சேமிப்பை வலியுறுத்துகிறோம். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கணும் என்பதைப் பழக்கமாக்குகிறோம். அதனால் திருப்பிக் கொடுக்கிற பண்பாடு உருவாகியிருக்கிறது" என்கிறார்.

ஜான் பவுல்ராஜ் என்ற இளைஞர்தான் (பை-லாஸ் எனப்படும்) சட்ட திட்டங்களை உருவாக்கிக் கொடுத்தாராம். பரமசிவம் என்பவர் 'வாட்டர் எய்டு' நிறுவனம் மூலம் சுகாதாரம், தூய குடிநீர், கழிப்பறைகள், தெருத் தூய்மை எனத் தூண்டினாராம். "நான் பட்டுப் போகாமல் காத்தவர்!" என்கிறார் மாவடியான்.

ஒரு காதல் திருமணத்துக்கு உதவி செய்து, தம்பதிக்கு குடிசை கொடுத்து, இரண்டாயிரம் ரூபாய் பணமும், மூன்று மாதங்களுக்கு உணவு முதற்கொண்டு கொடுத்து வந்தார்களாம் மாவடியானின் நண்பர்கள்.

ஒரு விபத்து, பிரசவம் என்றால் ஒரு தொகை தயாராக வைத்திருப்பார்களாம். வட்டியில்லாக் கடனாகக் கொடுத்து உதவுவார்களாம். மகளிர் நலநிதிக்காக ஆறு லட்ச ரூபாய் சேர்த்துக் கொடுத்திருக்கிறார் மாவடியான்.

மாவட்டத்துக்கு ஒரு மாவடியான் இருந்தால் நன்றாகத்தான் இருக்கும்.

- சாருகேசி

தோஷ நிவர்த்தி ஸ்தலமான இராமேஸ்வரத்தில் மஹாளயபக்ஷ அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

மூதாதையருக்கு திதி செய்ய மறந்தவர்களுக்கும் திதி-தர்ப்பணம் செய்யத் தவறியவர்களுக்கும் பித்ருகடன் நிறைவேற்ற ஏற்ற காலம் மஹாளயபக்ஷ அமாவாஸையே! மஹாளயபக்ஷ அமாவாஸையில் அன்னதானம் செய்வதால் பித்ருக்களுக்குப் பூரண திருப்தி ஏற்பட்டு அவர்கள் தம் சந்ததிகளுக்கு பூரண ஆயுள், நல்ல ஆரோக்கியம், தர்மசிந்தனையும் ஆரோக்கியமும் உள்ள சந்ததிகள், செல்வ வளம், நிம்மதி, குறைகளில்லாத வாழ்க்கை ஆகியவற்றை அளிக்கிறார்கள். பல பிறவிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் வினைகளும் இப்பிறவியில் ஏற்பட்ட வினைகளும் விலகி ஆனந்தமும் நல்வாழ்வும் கிடைக்கின்றன. ஆகவே இராமேஸ்வரம் போன்ற புனித ஷேத்திரங்களில் அன்னதானம் செய்து மகத்தான பலனைப் பெறலாம்.

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ஸ்ரீ இராமனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், முனிவர்கள் பலரும் இங்கு வந்து நீராடியதால் இராமேஸ்வரம் க்ஷேத்ரத்திற்கு மென்மேலும் பெருமை உண்டு. இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் என்றென்றும் அழியாத பலனைக் கொடுக்கும்.

இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக வடை, பாயசத்துடன் அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறிய தொகை மற்றும் அரிசி போன்ற உணவுப் பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000, ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் (அ) பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

இராமேஸ்வரத்தில் பிறந்தநாள், திருமணநாள் என நீங்கள் நினைக்கும் நாளில் அன்னதானம் செய்ய எமது அறக்கட்டளை சிறப்பான ஏற்பாடுகள் செய்துள்ளன. ஆகவே, நீங்கள் நினைக்கும் நாளில் அந்தணர்கள், சாதுக்கள், ஏழைகளுக்கும் அன்னதானம் செய்யலாம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது ஒத்துழைப்பை நாடுகிறோம்.



CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR,
THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA

☎: (044) 24900303, 24900603, 24416122 Mobile : 94441 16300

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

சிவகாமியின் சபதம்

இருபதாம் அத்தியாயம்

நிலவில் நண்பர்கள்

வானக்கடலில் மிதந்த பூரண சந்திரன் பால் நிலவைப் பொழிந்து இந்த மண்ணுலகத்தை மோகனப் பொன்னுலகமாகச் செய்து கொண்டிருந்த இரவில் வட பெண்ணை நதியானது அற்புதக் காட்சியை அளித்துக் கொண்டிருந்தது.

முதல் நாளிரவு அதே நேரத்தில் இந்த நதியைப் பார்த்திருந்தோமானால், சலசல வென்று இனிய ஓசையோடு அம் மாநதியில் ஓடிய தண்ணீர்ப் பிரவாகம் உருக்கிய வெள்ளியைப் போல் தகதக வென்று பிரகாசிப்பதையும், நாலாபுறமும் ககனவட்டம் பூமியைத் தொட்டு ஒன்றாகும் வரம்பு வரையில் பூரண அமைதி குடி கொண்டிருப்பதையும் கண்டிருப்போம். அந்த இயற்கை அமுதக் காட்சியின் இன்பத்தில் மெய்மறந்திருப்போம். பிரவாகத்தையொட்டி விரிந்து பரந்து கிடக்கும் வெண்மணலிலே படுத்துக் கொண்டு "ஆகா! இது என்ன அற்புத உலகம்? இவ்வுலகத்திலே ஒருவன் அடையக் கூடிய ஆனந்தம் சொர்க்கலோகத்திலேதான் கிடைக்குமா?" என்று வியந்திருப்போம்.

ஆனால், இன்றிரவோ, அந்த வடபெண்ணை நதித் துறையானது மகத்தான அல்லோலகல்லோலத்துக்கு உள்ளாகி

அமரர் கல்கி

யிருந்தது. கணக்கற்ற யானைகளும், குதிரைகளும், ரதங்களும், வண்டிகளும் அந்த நதியை அப்போது கடந்து கொண்டிருந்தன. யானைகள் அணிந்திருந்த தங்க முகபடாங்களும், அவற்றின் தந்தங்களுக்கு அணிந்திருந்த வெள்ளிப் பூண்களும், இயற்கையிலேயே அழகுடைய புரவிகளுக்குப் பூட்டியிருந்த நானாவித ஆபரணங்களும், ரதங்களின் தங்கத் தகடு வேய்ந்த விமானங்களும் வெண்ணிலவில் பளபளவென்று ஜொலித்தன.

யானைகள், குதிரைகள் எல்லாம் வரிசை வரிசையாக ஏககாலத்தில் நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் நதியை அடைத்துக் கொண்டு நீர்ப்பிரவாகத்தைக் கடந்த போது ஏற்பட்ட ஓசை, பெருங் காற்று அடிக்கும் போது அலைவீசிக் குமுறும் சமுத்திரத்தின் பேரிரைச்சலை ஒத்திருந்தது.

அக்கரையில் கண்ணுக்கெட்டிய மட்டும் காலாட் படையைச் சேர்ந்த வீரர்கள் காணப்பட்டனர். அவர்களுடைய கையிலே பிடித்திருந்த கூரிய வேல்கள் அசைந்த போதெல்லாம் மின்வெட்டின் ஒளி தோன்றிக் கண்ணைப் பறித்தது. அந்த வீரர் கூட்டத்துக்கு இடையிடையே ஆயிரக் கணக்கான ரிஷபக் கொடிகள் இளங் காற்றில் பறந்து படபடவென்று சப்தித்துக் கொண்டிருந்தன.

இந்தக் கரையில் நதித் துறைக்குச் சற்றுத் தூரத்தில் ஒரே ஒரு கூடாரம் மட்டும் காணப்பட்டது.

கூடாரத்துக்குப் பக்கத்தில் புல் தரையில் விரித்திருந்த ரத்தினக் கம்பளத்தின் மேல் யாரோ நாலு பேர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கையைத் தட்டிக் கூப்பிட்டால் கேட்கக் கூடிய தூரத்தில் பத்துப் பன்னிரண்டு வீரர்கள் கையில் நீண்ட வேல்களுடனும், இடையில் செருகிய வாள்களுடனும் சர்வ ஜாக்கிரதையுடன் காவல் புரிந்து கொண்டிருந்தார்கள். இதிலிருந்து ரத்தினக் கம்பளத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் பெரிய அந்தஸ்து படைத்த முக்கியஸ்தர்கள் என்று ஊகிக்கலாம்.

அருகில் சென்று பார்த்தோமானால், நமது ஊகம் உண்மை என்பதைக் காண்போம். அந்த நால்வரும் மாமல்ல சக்கரவர்த்தி, சேனாபதி பரஞ்சோதி, வேங்கி அரசன் ஆதித்த வர்மன், ஒற்றர் தலைவன் சத்ருக்னன் ஆகியவர்கள்தான்.

வேங்கி அரசன் ஆதித்தவர்மன் மாமல்லருடைய தாயாதி சகோதரன். அதாவது சிம்ம விஷ்ணு மகாராஜாவின் சகோதரன் வம்சத்தில் வந்தவன். இந்த வம்சத்தினர் வேங்கி சாம்ராஜ்யத்தின் வடபகுதியில் கோதாவரிக்கு அப்பாலுள்ள பிரதேசத்தைச் சுதந்திரச் சிற்றரசர்களாக ஆண்டு வந்தார்கள்.

சளுக்க சக்கரவர்த்தி காஞ்சியின் மீது படையெடுத்து வந்தபோது, ஆதித்த வர்மன் பல்லவ சக்கரவர்த்தியின் உதவிக்கு வர முடியாதபடி இடையில் புலிகேசியின் சகோதரன் விஷ்ணுவர்த்தனனால் வழி மறிக்கப்பட்டான். விஷ்ணுவர்த்தனன் வேங்கியின் புராதன இராஜவம்சத்தை நிர்மூலம் செய்து, தான் சிம்மாசனம் ஏறியதும், ஆனால், புலிகேசி தென்னாட்டிலிருந்து வாதாபிக்குத் திரும்பி வருவதற்குள் விஷ்ணுவர்த்தனன் உயிர் துறக்க நேர்ந்ததும் நேயர்கள் அறிந்தவை.

விஷ்ணுவர்த்தனனுடைய ஆட்சியையும் ஆயுளையும் அகாலத்தில் முடிவு செய்யக் காரணமாயிருந்தவன் ஆதித்த வர்மன்தான்.

ஆனால், சில வருஷத்துக்குப் பின்னர் மீண்டும் புலிகேசியின் பெருஞ் சைனியம் வேங்கியைக் கைப்பற்ற வந்தபோது, ஆதித்தவர்மன் தன்னுடன் மிச்சம் இருந்த வேங்கிச் சைனியத்துடனே தென் திசை நோக்கிப் பின்வாங்கி மீண்டும் தாக்கச் சந்தர்ப்பத்தை நோக்கிக் காத்திருந்தான்.

மாமல்லர் மாபெருஞ் சைனியத்தோடு வாதாபியின் பேரில் படையெடுத்த போது, ஆதித்தவர்மனும் அவரோடு சேர்ந்து போருக்குப் புறப்பட்டான்.

சேனாபதி பரஞ்சோதி, பன்னிரண்டு வருஷத்துக்கு முன்னால் தாம் இதே வடபெண்ணையின் அக்கரையில் புலிகேசியின் சேனா சமுத்திரத்தைப் பார்த்துப் பிரமிப்

படைந்தது பற்றியும், மகேந்திர பல்லவர் மாறுவேடம் பூண்டு தன்னைப் பின் தொடர்ந்து வந்து புலிகேசியின் கண்ணெதிரே தன்னை விடுதலை செய்தது பற்றியும் விவரமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

மற்ற மூவரும் அதிசயத்தோடு கேட்டுக் கொண்டிருந்தனர். மூவரிலும் ஆதித்தவர்மன் மிகவும் அதிசயப்பட்டான். அவனுக்கு அந்த விவரங்கள் எல்லாம் புதியனவாக இருந்தன.

"ஆகா! அந்த விசித்திர சித்தரை நேரில் பார்க்கும் பாக்கியம் இந்தக் கண்களுக்குக் கொடுத்து வைக்கவில்லையே?" என்று வருந்தினான்.

அப்போது மாமல்லர் சொன்னார்:

"இலங்கை இளவரசன் கூட அடிக்கடி இவ்விதம் கூறி வருத்தப்படுவான். என் தந்தை என்பதற்காக நான் பெருமையடித்துக் கொள்ளவில்லை. ஆனாலும் அவரைப் பார்ப்பதே ஒரு பாக்கியந்தான். அவருடன் நெருங்கிப் பழகுவதற்கோ பல ஜன்மங்களிலே பாக்கியம் செய்திருக்க வேண்டும். மூன்று வருஷ காலம் அவர் என்னை அழைத்துக் கொண்டு தென் தேசமெங்கும் யாத்திரை செய்தார். இந்த மாதிரி வெண்ணிலவு பொழிந்த இரவுகளிலே நானும் அவரும் வெட்ட வெளியில் உட்கார்ந்து ஆனந்தமாகக் காலம் கழித்திருக்கிறோம். அவர் பிரயாணம் கிளம்பும்போது பரிவாதினி வீணையையும் உடன் எடுத்து வருவார். வீணைத் தந்திகளை மீட்டி அவர் இசை வெள்ளத்தைப் பெருக்கும் போது, வானமும் பூமியும் நிசப்தமாய், நிச்சலனமாய் நின்று கேட்பது போலத் தோன்றும். அந்த நாத வெள்ளத்தைத் தடை செய்யப் பயந்து காற்றும் நின்று விடும். மரங்களின் இலைகள் அசைய மாட்டா. பட்சி ஜாலங்களும் மௌன விரதம் பூண்டிருக்கும்."


"அண்ணா நிறுத்துங்கள்! இப்படி நீங்கள் பேச ஆரம்பித்தால் எனக்குச் சித்தம் கலங்கி விடுகிறது. யுத்தமும் இரத்தக் களரியும் என்னத்திற்கு _ வீணை வாசிக்கக் கற்றுக் கொண்டு வாழ்க்கையை ஆனந்தமாகக் கழித்து விட்டுப் போகலாமென்று தோன்றி விடுகிறது!" என்றான் ஆதித்தவர்மன்.

மாமல்லர் கலகலவென்று சிரித்து விட்டுச் சொன்னார்: "மகேந்திர பல்லவர் இதே மாதிரி வார்த்தைகளை ஒரு காலத்தில் சொன்னதுண்டு. 'உலகத்தில் மன்னர் குலத்தில் பிறந்தவர்களுக்கு மண்ணாசை என்பது போய் விட்டால் இந்த பூவுலகமே சொர்க்கமாகி விடும்!' என்று சொல்வார். உலகத்தில் யுத்தம் என்பதே உதவாது. வேல், வாள் முதலிய போர்க் கருவிகளையே யாரும் செய்யக் கூடாது. கொல்லர் உலைகளிலே பூமியை உழுவதற்கு ஏர்க் கொழுக்களும் சிற்பக் கலைஞர்களுக்கு வேண்டிய சிற்றுளிகளுந்தான் செய்யப்பட வேண்டும்' என்று என் தந்தை அடிக்கடி கூறுவார். ஆனால், என்றைய தினம் சளுக்கன் பல்லவ நாட்டின் மீது படையெடுத்ததாகச் செய்தி வந்ததோ, அன்றைய தினமே அவருடைய மனம் அடியோடு மாறி விட்டது. ஆயிரம் சிற்பிகள், பதினாயிரம் சித்திரக்காரர்களைக் காட்டிலும் மதயானை மீது வேல் எறிந்த இளைஞன் அவருடைய மனத்தை அதிகமாகக் கவர்ந்து விட்டான்...!" என்று கூறிவிட்டு மாமல்லர் சேனாபதி பரஞ்சோதியைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்

"நமது சேனாபதி காஞ்சி நகரில் பிரவேசித்த அன்று நடந்த சம்பவத்தைத் தானே குறிப்பிடுகிறீர்கள்? அதைப் பற்றி ஒரு நாள் அவரிடம் நானே விவரமாகக் கேட்க வேண்டுமென்றிருந்தேன்" என்று கூறினான் ஆதித்தவர்மன்.

"என் தந்தையின் அபிமானத்தை நமது சேனாபதி கவர்ந்தது போல் வேறு யாரும் கவர்ந்ததில்லை. ஒவ்வொரு சமயம் எனக்கு அவர்மேல் பொறாமை கூட உண்டாயிற்று. மகேந்திர பல்லவர் என்னைப் புறக்கணித்து விட்டுச் சேனாபதிக்கே முடிசூட்டி விடுவாரோ என்று கூடச் சில சமயம் சந்தேகித்தேன். ஆனால், அதற்கு நானும் ஆயத்தமாகயிருந்தேன். இன்றைக்குக் கூடச் சேனாபதி ஒப்புக் கொண்டால்..." என்று மாமல்லர் சொல்லி வந்தபோது தளபதி





பரஞ்சோதி குறுக்கிட்டார்.

''பிரபு! இப்படியெல்லாம் பேச வேண்டாம். சாம்ராஜ்யம், சிம்மாசனம் எல்லாம் எனக்கு என்னத்திற்கு? பட்டிக் காட்டில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன் நான். என் தாயாரிடம், 'கல்வி பயின்று வருகிறேன்' என்று வாக்குக் கொடுத்து விட்டுக் காஞ்சிக்கு வந்தேன். பன்னிரண்டு வருஷத்துக்கு மேல் ஆகியும் அந்த வாக்கை நிறைவேற்றியபாடில்லை. இன்னும் நிரட்சர குட்சியாகத்தான் இருக்கிறேன். இந்த யுத்தம் முடிந்ததும் என் தாயாருக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்றப் போகிறேன். சிம்மா சனத்தை யாருக்காவது கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்றால் இலங்கையிலிருந்து ஒருவர் வந்து காத்துக் கொண்டிருக்கிறாரே அவருக்குக் கொடுங்கள்!'' என்றார்.

மாமல்லர் உடனே ஆதித்தவர்மனையும், சத்ருக்னனையும் பார்த்துக் கண்ணினால் சமிக்ஞை செய்ய, அவர்களும் விஷயம் தெரிந்து கொண்டதற்கு அடையாளமாகப் புன்னகை புரிந்தார்கள்.

மாமல்லர் மானவன்மனிடம் அதிகப் பிரியம் வைத்திருக் கிறார் என்னும் விஷயம் சேனாபதி பரஞ்சோதியின் மனத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. இதை மாமல்லர் நன்கு அறிந்திருந்தார். வாதாபி யுத்தத்துக்கு மானவன்மனை வர வேண்டா மென்று காஞ்சியில் நிறுத்தி விட்டு வந்ததற்கே இதுதான் முக்கியமான காரணம்.

எனவே மாமல்லர் மற்ற இருவரையும் பார்த்து, "பார்த்தீர்களா, நான் சொன்னது சரியாய்ப் போயிற்று" என்று சொல்வதற்கு அறிகுறியாகச் சமிக்ஞை செய்து விட்டு, தலைகுனிந்த வண்ணமிருந்த பரஞ்சோதி யைப் பார்த்து "அழகாய்த்தானிருக்கிறது! போயும் போயும் அந்த மூடனிடமா மகேந்திர பல்லவர் ஆண்ட ராஜ்யத்தை ஒப்புவிக்கச் சொல்கிறீர்? அவனை நான் வரவேண்டாம் என்று கண்டிப்பாகச் சொல்லியிருந்தும் அவன் பாட்டுக்குப் புறப் பட்டு வருகிறான். அவனுக்கு என்ன தண் டனை கொடுக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு அவன் மேல் வரும் கோபத்துக்கு அளவேயில்லை. இலங்கைக்கே திருப்பி விரட்டி விடலாமா என்று தோன்றுகிறது. சேனாபதி உம் முடைய அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டார்.

சேனாபதி சற்று யோசனை செய்து விட்டு, "போர்க்களத்துக்கு வரவேண்டு மென்று அவ்வளவு ஆவல் உள்ளவரை எதற்காகத் தடுக்க வேண்டும்? மானவர்மர் வந்தால் நல்லதுதான்; நமது யானைப் படைக்கு அவர் தலைமை வகித்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்" என்று சொன்னார்.

''எனக்கு என்னவோ சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. மானவன்மன் நம்முடைய உதவியைக் கோரி வந்து அடைக்கலம் புகுந்தவன். இப்போது அவனுடைய உதவி யினால் நாம் ஜயித்தோம் என்று எதற்காக ஏற்பட வேண்டும்?..." என்றார் மாமல்லர்.

அதுவரை ஏறக்குறைய மௌனமா யிருந்த சத்ருக்னன் கூறினான்:

''சக்கரவர்த்தி! தாங்கள் அவ்விதம் எண்ணவே கூடாது. இந்த யுத்தத்தில் ஜயிப்பதற்குத் தங்களுக்கு யாருடைய ஒத்தாசையும் தேவையில்லை. தங்களிடம் இல்லாத போர்த்திறமை வேறு யாரிடம் இருக்கிறது? சேனாபதியும் ஆதித்தவர்மரும் இல்லாவிட்டாலும் தாங்கள் வாதாபியை அழித்து விட்டு வெற்றி வீரராய்த் திரும்பு வீர்கள். இந்தப் படையெடுப்பில் கலந்து கொள்வதற்குக் கொடுத்து வைத்தவர்கள் பாக்கியசாலிகள். மானவன்மர் இந்தப் படையெடுப்பிலே கலந்து கொண்டால் அவரால்தான் தாங்கள் ஜயமடைந்தீர்கள் என்ற பெயர் ஒருநாளும் ஏற்பட்டு விடாது. அதனால் அவருக்குக் கௌரவம் ஏற்படும் என்பதுதான் உண்மை."

சத்ருக்னன் கூறியதைச் சேனாபதி, ஆதித்தவர்மன் இருவரும் பூரணமாக ஆமோதித்தார்கள்.

"மேலும், நமது யானைப் படைக்குப் பயிற்சி அளிக்கும் காரியத்தில் மானவன்மர் மிக்க சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். அவரைப் போருக்கு வர வேண்டாம் என்று சொல்வது நியாயமல்ல" என்றார் சேனாபதி.

"யானைப் படைக்கு ஏதோ புதுவிதமான

பயிற்சி இலங்கை இளவரசன் அளித்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது என்ன புதுப் பயிற்சி?" என்று ஆதித்த வர்மன் கேட்டான்.

"அது உண்மைதான். முன்னெல்லாம் கோட்டை வாசல் கதவுகளை உடைப்பதற்கு யானைகளை முட்ட விடுவது வழக்கம். காஞ்சிக் கோட்டை முற்றுகையின் போது மகேந்திர பல்லவரின் முன் யோசனையினால் அந்தப் பழைய முறை பலிக்காமல் போயிற்று. கோட்டைக் கதவுகளிலே ஈட்டி முனைகளைப் பொருத்தியிருந்தபடியால், ஒரு தடவை மோதியதுமே யானைகள் வெறி கொண்டு திரும்பி ஓடிப் போயின. இப்போது மானவன்மர் நமது யானைகளுக்கு, இரும்பு உலக்கைகளால் கதவுகளைப் பிளக்கவும், கோட்டைச் சுவர்களைக் கடப்பாரைகளைக் கொண்டு இடிக்கவும், தீவர்த்திப் பந்தங்களைத் தூக்கி வீசிக் கோட்டைக்குள் எறியவும் கற்பித்திருக்கிறார்."

"ஆஹா, இதுவரை இம்மாதிரி யானைப் படையை உபயோகித்ததாக நான் கேட்டதே இல்லை!" என்றான் ஆதித்த வர்மன்.

சேனாபதி பரஞ்சோதிக்கு மானவன்மரிடம் தனிப்பட்ட முறையில் விரோதம் எதுவும் கிடையாது. அவரிடம் மாமல்லர் அதிக அன்பு வைத்திருக்கிறார் என்பதிலே தான் அதிருப்தி. எனவே, இப்போது மாமல்லர் அவரைப் பற்றி அலட்சியமாகப் பேசியதும், இவரே மானவன்மருடைய கட்சி பேச ஆரம்பித்தார்.

"ஆசையினால்தான் மானவன்மரைத் திருப்பி அனுப்புவது நியாயமல்லவென்று நான் சொல்லுகிறேன். யானைப் படைக்கு இப்பேர்ப்பட்ட புதிய பயிற்சி அளித்து ஆயத்தப்படுத்தியவருக்கு, அந்த யானைப் படை யுத்தத்தில் தானும் கலந்து கொள்ள வேண்டுமென்று ஆசையாயிராதா?" என்றார் சேனாபதி பரஞ்சோதி.

இந்தச் சமயத்தில், அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த பிரம்மாண்டமான அரச விருட்சத்தில் ஒரு பெரிய சலசலப்பு ஏற்பட்டது. அந்த மரத்தின் அடர்த்தியான கிளைகளில் இரவு நேரத்தைக் கழிப்பதற்கென்று அடைக்கலம் புகுந்திருந்த ஆயிரக்கணக்கான பறவைகள் சடசடவென்று இறகுகளை அடித்துக் கொண்டும் பற்பல சுருதி – ஸ்வரங்களில் கூச்சலிட்டுக் கொண்டும் மரத்திலிருந்து வெளிவந்து வட்டமிட்டு மறுபடியும் கிளைகளுக்குள் புகுந்து, ஆரவாரம் செய்தன.

"அந்த மரத்துக்குத் திடீரென்று என்ன வந்து விட்டது? மரம் ஏறக்கூடிய காட்டு மிருகம் ஏதாவது அதில் ஏறி விட்டதா? பறவைகள் இப்படி அலறுகின்றனவே!" என்று மாமல்லர் கேட்டதற்கு, அந்தத் திசையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த சத்ருக்னன், "பிரபு! காட்டு மிருகம் எதுவும் அந்த மரத்தில் ஏறவில்லை, வீட்டு மிருகம் – இரண்டு கால் மிருகம் ஒன்று அந்த மரத்திலிருந்து இறங்கிக் கொண்டிருக்கிறது!" என்றான்.

உடனே அவன் கையை ஓங்கித் தட்ட, சற்றுத் தூரத்தில் ஆயுதபாணிகளாகக் காவல் புரிந்த வீரர்களில் ஒருவன் அவர்கள் இருந்த இடத்துக்கு விரைந்து ஓடி வந்தான்.

"அதோ பார்! அந்த அரசமரத்திலிருந்து யாரோ ஒருவன் கீழே இறங்கிக் கொண்டிருக்கிறான். அவனைப் பிடித்துக் கொண்டு வாருங்கள்!" என்று சத்ருக்னன் கட்டளையிட்டான்.

அவ்விதமே மேற்படி வீரர்கள் விரைந்து அரச மரத்தை நோக்கிச் சென்று, அதிலிருந்து கீழே இறங்கியவனைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டு வந்தார்கள்.

வீரர் தலைவன், "பிரபு! இதோ வாதாபி ஒற்றன்!" என்று கூறித் தலை வணங்கினான்.


மாமல்லரும் பரஞ்சோதியும் கலீரென்று சிரித்தார்கள்.

ஏனெனில், அந்த வீரர்களால் கொண்டு வரப்பட்டவன் வேறு யாருமில்லை. நமது பழைய சிநேகிதன் குண்டோதரன்தான்.

"குண்டோதரா? இது என்ன? எதற்காக நீ வாதாபி ஒற்றன் என்று சொல்லிக் கொண்டாய்?" என்று பரஞ்சோதி கேட்டார்.

"ஆம் சேனாபதி! நான் சொன்னது உண்மைதானே! 'வாதாபி ஒற்றன்' என்றால், 'வாதாபிக்குப் போய் வந்த ஒற்றன்' என்ற





அருள்வாக்கு

சப்தமும் அசைவும் சேர்ந்து சேர்ந்தே, ஒன்றாகவே உண்டாகின்றன. இப்படி உண்டான அப்புறம் அந்த அசைவிலிருந்து ஒரு ஸ்தூலமான வஸ்து அல்லது மனோ பாவம் உண்டாகிறது. ஆகக் கூடி சப்தத்திலிருந்தே சிருஷ்டி ஏற்படுகிறது. இந்தப் பிராசீனமான தத்துவம் ஸயன்ஸ். பகுத்தறிவுப்படியும் கூட சரியானதுதான் என்று தெரிகிறது.

சிருஷ்டி, அதிலே நடக்கிற பல காரியங்கள், எண்ணங்கள், இவற்றின் மூலமான சப்தங்கள் ஆகாசத்தில் (Space) அப்படியே நிறைந்துதான் இருக்கின்றன. நாம் கையைத் தட்டினால் ஒரு சப்தம் உண்டாகிறது என்றால், அது என்ன ஆகிறது? அது அப்படியே ஆகாசத்தில்தான் தங்கி விடுகிறது. நல்ல காரியங்கள், கெட்ட காரியங்கள் எல்லாவற்றிற்கும் ஒவ்வொரு சலனம், சப்தம் இருக்கிறது. இந்த சப்தத்தை உண்டாக்கி விட்டால் அந்த நல்லது அல்லது கெட்டது வந்துதான் ஆக வேண்டும். நல்லெண்ணங்கள் ஜனங்களுக்கு உண்டாகிறது என்றால், அப்படி உண்டாக்குகிற சலனங்கள் இருக்க வேண்டும். அவற்றிற்கான சப்தங்கள் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட சப்தங்களை நாம் உண்டாக்க முடியுமானால் லோகத்தில் ஜனங்களுக்கு நல்ல எண்ணங்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். ஜனங்களுக்கு உயர்ந்த எண்ணங்கள் இருப்பதை விட லோகத்துக்குப் பெரிய க்ஷேமம் என்ன இருக்கிறது? அப்படி எண்ணுவதற்கு அவர்களைத் தூண்டுகிற சக்தியைப் பெற்ற சப்தங்கள்தான் வேத மந்திரங்கள்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்.

அர்த்தத்தில் சொன்னேன். உடனே அந்த வீரர்கள் என்னை ஒரே பிடியாய்ப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து விட்டார்கள். அப்பா! அவர்கள் பிடித்த இடங்களில் இன்னும் வலிக்கிறது!" என்றான்.

"ஆமாம், ஆனால் அந்த மரத்தின் மேலேறி என்ன செய்து கொண்டிருந்தாய்? எத்தனை நேரமாய் அங்கு உட்கார்ந்திருக்கிறாய்?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"பிரபு! நேற்றிரவே இங்கு வந்து விட்டேன். காலையில் எழுந்து பார்த்தால் நமது சைனியம் வந்து கொண்டிருக்கிறது. உடனே மரத்தின் மேல் ஏறியவன்தான். இத்தனை நேரமும் நமது சைனியத்தின் கணக்கு எண்ணிக் கொண்டும், வாதாபி புலிகேசியை ஜயிப்பதற்கு இந்தச் சைனியம் போதுமா என்று யோசித்துக் கொண்டும் இருந்தேன்."

"என்ன முடிவு செய்தாய்? சைனியம் போதுமா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"சுவாமி! அதைப் பற்றி எனக்குச் சந்தேகமே இல்லை. ஆனால் வாதாபிக்கு நாம் போய்ச் சேருவதற்குள்ளே, அஜந்தா குகைக்குப் போயிருக்கும் புலிகேசிச் சக்கரவர்த்தி வாதாபிக்குத் திரும்பி வர வேண்டுமே! அவர் வெளியில் தங்கி விட்டால் என்ன செய்கிறது என்றுதான் கவலைப்படுகிறேன்!" என்றான் குண்டோதரன்.

(தொடரும்)

புக் பேங்க்



கொக்குகள் பறந்துவிட்டன
- ஜி.காசிராஜன்

சாரல் விழுந்ததும் குப்பென்று எழுகிற மண்ணின் மணம் போல, வாசிக்கத் தொடங்கியதும் கரிசல் மண்ணின் மணம் மனத்தில் எழுகிற நெல்லைச் சீமையின் கிராமத்து நிகழ்வுகள். சிலவற்றில் வார்த்தைகள் விரயங்களாகத் தோன்றினாலும், வாசித்த பின்பே அவை விரயங்களல்ல, நிகழ்வுகளைக் கிரயங்களாக்கும் யதார்த்தங்கள் என்பது புரிகிறது.

'தரிசாகிப் போன காடுகள், மல்லியும், அவுரியும், சீமைக் கருவேலனும், எல்லாம் ஊர்த் தெய்வங்களின் கோபம்' என்று வருத்தப்பட்டுப் பறந்து விடும் கொக்குகள், 'காலேசு பெயிலானவருக்கு இருவத்தஞ்சி பவுனா?' என்று நொடித்துக் கொண்டே சம்மதிக்கும் 'களையெடுப்பு சாந்தா', 'தேவமார்க நெதம் மயிலப்புடிச்சி, கொக்கப் புடிச்சித் திம்பாக. அழிச்சாட்டியம் பண்ணுவாங்க. நா கோழிய அடிக்கக் கூடாதா?' - என்று பொங்கும் முத்து மகன் - மனத்தில் பதிந்து போகிற கிராமத்து நடைமுறைகளின் அழுத்தமான குணசித்திரங்கள்; ஆற்றில் துளைந்து ஆடிவிட்டு, எழுந்து வர மனமில்லாத சிறுவன் போல மனத்தில் நீந்துகிற பாத்திரங்கள்.

மனிதர்களின் வாழ்க்கைகளில் ஆழ்ந்து போய் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிற வட்டாரச் சிறுகதைகளின் தொகுப்பு.

வெளியீடு : நிழல், 31/48, இராணி அண்ணா நகர், கே.கே.நகர், சென்னை-78. விலை ரூ.45/-

இரவுப் பாடகன்
- ஈரோடு தமிழன்பன்

சுடர்மிகு இருள் : இருளிடமிருந்து விடுதலையான சூரியனின் விளக்கமே பகல்; என இருளுக்குப் புதிய பரிமாணங்களை, கதைகதையாய்க் கூறுவது போல் கவிதைகளாய்த் தொகுத்திருக்கிறார். முரண்பாடுகளின் மொத்தமும் பகலில்தான் பிறந்து இரவில் தீர்வுகளைப் பெறுகின்றன என்னும் இரவுப் பாடகன், கம்பனும் இளங்கோவும் பாரதியும், இருள் கவிந்த பின் கவிதையைவிட்டு வெளியே வந்து காலார நடக்கக் கூப்பிடுகிறார்கள்; இருளின் கனம் தாளாமல் இரவு மேலே விழும்போது கவிதை வந்து காப்பாற்றுகிறது; காற்று கறுப்பு உடை அணிந்து நடக்கும் - என்று இரவை, இருளை வர்ணித்துக் கொண்டே போகிறான்.

கவிதைத் தெருவின் கரடுமுரடான பாதையில் முரணான பொருளை விளக்க, உரைநடையின் வடிவம் கவிதைப் படிவம் தந்து நன்றாகவே உதவுகிறது. 'உலகில் ஒன்றுமேயில்லை' என்பதே உண்டாக்கும் தத்துவம் என்னும் இரவுப் பாடகன் ஒவ்வொரு கவிதையிலும் ஒரு கதையைக் கூறுகிறான். ஹைக்கூ கதைகளைச் சொல்லும் கவிதைகளின் தொகுப்பு.

பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை, சென்னை - 17. விலை ரூ.60/-

ஐயாற்று நதிக்கரையில்
- த.நா. மதிவாணன்

சாமகானம் இசைத்து கயிலையையே அசைத்துப் பார்த்த இலங்கேஸ்வரன் முதல், இசையே உயிராய், வாழ்வாய், தவமாய் லயித்துவிட்ட இசை வாணர்களைப் பற்றியும், அவர் இசைபட வாழ்ந்த விதத்தையும் கூறும் நூல். இசைத் தமிழின் புகழ் மாலையில் இன்னுமொரு பூங்கொத்து.

திரு பதிப்பகம், 18-ஏ, கபாலி நகர், மயிலை, சென்னை - 4. விலை ரூ.150/-

- விஷ்வக்



— கலைஞருக்கு
பா.ஜ.க.கேள்வி

தமிழக பாரதீய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், (சி.பி.ஆர்.) தலைவர் பொறுப்பு ஏற்ற சில நாட்களுக்குள்ளேயே தமிழகத்தை வலம் வரத் துவங்கி விட்டார். குமரி முனையில் உள்ள விவேகானந்தர் பாறையிலிருந்து ஜூன் 25ம் தேதி புறப்பட்ட அவரது ரத யாத்திரை வருகிற 25ம் தேதி சென்னை கடற்கரை விவேகானந்தர் இல்லத்தில் முடிவடைய இருக்கிறது. அன்று துணைப் பிரதமர் அத்வானி தலைமையில், பொதுக் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் நரேந்திர மோடியின் வருகை காரணமாக, ரத யாத்திரைக்கு இடைவேளை விட்டிருந்தது. அந்த இடைவேளையில் சென்னை வந்திருந்த ராதாகிருஷ்ணனைச் சந்தித்தோம்.

"உங்கள் ரத யாத்திரையில் பல ஊர்களில் பேசும் போது தி.மு.க., கூட்டணி தர்மத்தை மீறி விட்டதாகப் பேசியிருக்கிறீர்களே?"

சி.பி.ஆர்: சட்டமன்றத் தேர்தலில் நாங்கள் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டோம். அதற்குக் காரணம் இரு கட்சிகளும் மத்தியில் தே.ஜ.கூவில் அங்கம் வகிப்பது தான். ஆனால் தமிழக தே.ஜ.கூவின் தலைமைப் பொறுப்பிலிருந்த தி.மு.க., தேர்தல் முடிந்தவுடன் ஒரு முறை கூட தமிழக தே.ஜ.கூ. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி, யுக்தி வகுக்கவில்லை. சட்டமன்ற நடவடிக்கைகளில் கூட, வெளிநடப்பு செய்யும் போது எங்களோடு கலந்து பேசுவதில்லை. கலைஞர் கைதான போது, கிருபாநிதி மற்றும் லட்சுமணன் ஆகியோர் மறியல் நடத்திக் கைதானார்கள். ஆனால் தி.மு.க. புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்துத் தீர்மானம் போட்டது. மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் பங்கெடுத்துக் கொண்டு, அதே மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையை

"தமிழகத்தில் தி.மு.கவால் முதுகில் குத்தப்பட்டும் நாங்கள் பீடு நடை போடுகிறோம் என்பதுதான் நிஜம்."






"லட்சுமண ரேகையைத் தாண்டியது யார்?"

எதிர்த்து என்றைக்கு தி.மு.க. தீர்மானம் போட்டதோ, அன்றே அவர்கள் கூட்டணி தர்மத்தை மீறி விட்டார்கள். அதன் பிறகு பல்வேறு பிரச்னைகளில், குறிப்பாக மதமாற்றத் தடைச் சட்ட விவகாரத்தில் கம்யூனிஸ்ட், காங்கிரஸோடு தி.மு.கவினர் மேடையைப் பகிர்ந்து கொள்கிறார்கள். பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள், சில பிரச்னைகளுக்காக ஒன்று சேருவது தவறில்லை. ஆனால், "மதமாற்றத் தடைச்சட்டம்" அரசியல் பிரச்னை. அந்தப் பிரச்னையில் தி.மு.க; தே.ஜ.கூ.அரசியல் எதிரிகளோடு கைகோத்துக் கொண்டது கொஞ்சமும் சரியல்ல. நாங்கள் முதல்வரின் அன்னதான திட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம். எங்கள் மனதுக்குவந்த திட்டம் அது. அந்த நிகழ்ச்சி அரசு நிகழ்ச்சி. அதில் சம்பந்தப்பட்ட தொகுதி உறுப்பினர் கலந்து கொள்வதில் என்ன தவறு? பா.ஜ.கவின் உயிரோட்டமான சில கொள்கைகளை முதல்வர் செயல்படுத்தும் போது, அவற்றை ஆதரிக்கிறோம். அ.தி.மு.க.வுடன் அரசியல் பிரச்னை தொடர்பான எந்தக் கூட்டத்திலும் பா.ஜ.க. கலந்து கொண்டதில்லை. எனவே லட்சுமண ரேகையைத் தாண்டியவர்கள் தி.மு.க.வினர் தான். தமிழக பா.ஜ.க. எந்த விதத்திலும் இடைவெளியை அதிகப்படுத்தியதற்கு பொறுப்பல்ல.

"வைகோ கைது விவகாரத்தில் மத்திய அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காதது குறித்து, கலைஞர் சலிப்புடன் பேசியிருக்கிறாரே?"

சி.பி.ஆர்: வைகோ கைது விவகாரத்தில் 'பொடா' தவறாக கையாளப்பட்டிருக்கிறது என்பது தான் பா.ஜ.க.நிலை. விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசிய வைகோவின் பேச்சுக்கு, 'பொடா' போன்ற கடுமையான சட்டத்தை அமல்படுத்தியிருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆனால் அதற்காக நாங்கள் புலிகளை ஆதரிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. கலைஞர் எட்டு, பத்து மாதங்களுக்குப் பேசாமல் இருந்து விட்டு, இப்போது பிரதமருக்குக் கடிதம் எழுதுவதும் கண்டனம் தெரிவிப்பதும் அவரது நோக்கத்தைக் குறித்து சந்தேகத்தை உண்டாக்குகிறது.


"இப்படி தமிழக பா.ஜ.கவுடன் தற்போதைய நிலை காரணமாக, பாராளு



''இந்த 'கண்டக்டர்' எல்லாருக்கும் கொஞ்சமா சில்லறை பாக்கி வைக்கறாரே... ஏன்?''

''அவர் மினி பஸ் கண்டக்டராச்சே!''

— அம்பை தேவா



''தம்பி... உங்க வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற பெண் பவித்ராவைத் தான் என் பையனுக்குக் கேட்கலாம்னு இருக்கிறேன்... பெண் எப்படி?''

''நான் காதலிச்சவரையில், அவ நல்ல பெண்ணாத்தான் இருக்கிறாள்!''

— எம். அசோக்ராஜா



''உங்களை ஏன் கட்சியிலிருந்து வெளியேற்றிட்டாங்க?''

''நம்ம கட்சி, இன்னிக்கு எந்த கூட்டணியில் இருக்குன்னு தெரியாத்தனமா தலைவர்கிட்டே கேட்டுத் தொலைச்சுட்டேன்!''

— லீலா ஜெயபாண்டியன்

மன்றத் தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணியில் தொடரும் வாய்ப்பிருக்கிறதா?''

சி.பி.ஆர்: கூட்டணி என்பதென்ன? இடங்களைப் பகிர்ந்து கொள்வதுதான் இப்போது கூட்டணி. உண்மையான கூட்டணி என்றால், தேர்தலுக்கு முன்பே ஒரு குறைந்த பட்சத் திட்டத்தை உருவாக்கிப் போட்டியிட வேண்டும். அதெல்லாம் சாத்தியமில்லாத நிலையில் கூட்டணி என்பதற்கே பொருள் இல்லை. ஆனால் பா.ஜ.க.வைப் பொறுத்த வரை, எந்த ஒரு கூட்டணி கட்சியையும் தானே வெளியேற்றுவதில்லை. பல தே.ஜ.மு. கட்சிகள், அவர்களே செல்கிறார்கள்; மீண்டும் வருகிறார்கள்; செல்கிறார்கள், வருகிறார்கள். ஆனால் பா.ஜ.க.வின் பாரம்பரியம், இணைந்து வேலை செய்பவர்களை என்றும் முதுகில் குத்தியதில்லை என்பதுதான். மாறாக தமிழகத்தில் தி.மு.க.வால் முதுகில் குத்தப்பட்டும் நாங்கள் பீடு நடை போடுறோம் என்பதுதான் நிஜம்.

''மத்தியில் பா.ஜ.க.வுடன் கூட்டணியில் தொடர்வதும், மாநிலத்தில் அதே கட்சியுடன் தோழமை இல்லாமல் இருப்பதும் முரண்பட்ட நிலை அல்லவா?''

சி.பி.ஆர்: இதற்குக் காரணம் தி.மு.க.தான். கலைஞர் அவரது அரசியல் வாழ்வில் எடுத்த பல முடிவுகளுக்கு, குறைந்த பட்சம் ஒரு ராஜதந்திரத் தோற்றத்தையாவது தருவார். இப்போது அவர்கள் கையாண்டு கொண்டிருக்கும் அரசியல் நடைமுறை என்பது சரியான கேலிக் கூத்து.

''அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்டியே தீருவோம்'' என்ற பிரதமர் உடனடியாக பல்டியடித்து கோர்ட் தீர்ப்பு அல்லது பேச்சுவார்த்தை மூலமாகத் தான் தீர்வு காண்பது என்பது மத்திய அரசின் நிலை என்று கூறியுள்ளாரே!''

சி.பி.ஆர்: அயோத்தியில் பிரதமர் பேசியது, பா.ஜ.க.வின் செயல்திட்டத்தை அடியொட்டியது. என்.டி.ஏ. அஜண்டா என்பது வேறு. எனவே பிரதமர் முதலில் பேசியதற்கும், அடுத்து மத்திய அரசின் நிலை பற்றித் தெளிவு படுத்தியதும் முரண்பாடு அல்ல! இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்பவர்கள் விமர்சனம் செய்து கொண்டுதானிருப்பார்கள்.

சந்திப்பு : **ப்ரியன்**

படம் : **ராஜன்**



விகடன்

தமிழ்த் திரைக்கதாசிரியர்களுள் நிறையவே முன்னேறிவிட்டார்கள்! ஹாலிவுட்டிலிருந்து வெளியாகிற படங்களை அவ்வப்போது, உலகத் தொலைக்காட்சிகளில் பார்த்து விடுவதன் மூலம், ஹாலிவுட் திரைக்கதை உத்திகளை உடனடியாகக் கிரகித்து, கோலிவுட்டில் கறிவேப்பிலை, புதினா லெவலுக்குக் கச்சிதமாய்ப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். சமீபத்து சிறந்த தாளிப்பு விகடன்.

நிக்கோலஸ் கேஜ், ஜான் டிரேவோல்டா நடித்து உலக சினிமாச் சந்தையைக் கலக்கிய கமர்ஷியல் திரில்லரான 'ஃபேஸ் ஆஃப்' படத்தின் மையக் கருதான் விகடன். இதை இருக்கை நுனியில் இருந்து கொண்டு ரசிக்கிற மாதிரி, திகட்டாத ஃபேமிலி திரில்லராய்த் தமிழ்ப் படுத்தியிருக்கும் விதம், பிரமாதம்!

நெற்றி நிறைய குங்குமமும், தலை நிறைய மல்லிகையும், தழையத் தழையப் புடைவையும் அணிந்திருக்கும் புது மனைவியை அதே கோலத்தில் எதிர் பார்த்து, முதலிரவு அறைக்குள் ஆவலாய் நுழைகிற கலாசார விரும்பி ஹரிஸ் ராகவேந்திராவுக்கு ஏற்படுகிற முதல் அதிர்ச்சியில் தொடங்கி, ரசிகனுக்கும் ஒரே நேர்க்கோட்டில் அடுத்தடுத்து அதிர்ச்சிகள். படம் கனஜோராய் நகர்கிறது. சமூகத்தில் அதிக மரியாதையுடன் போற்றப்படும் தனது குடும்ப கௌரவத்தைக் காப்பாற்ற, குற்றத்தை மறைத்து, தடயங்களை ஒளித்து, நொடிக்கொருதரம் மரித்து உயிர்க்கும் பணக்கார இளைஞராக ஹரிஸ் கச்சிதம்.

எதிர்மறையான வேடம் என்றாலும் ஹரிஸ் மீது கடைசிவரை எரிச்சலோ, கோபமோ வராதது, அவரது பாத்திரப்படைப்புக்குக் கிடைத்த வெற்றி. விடுப்பில் வீட்டுக்கு அனுப்பப்பட்ட சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர், உயரதிகாரியின் குறுக்கீடு, சக அதிகாரியின் பொறாமை இரண்டையும் மீறி, கிடைக்கிற சின்ன நூலின் முனையைப் பிடித்துக் கொண்டு போய், குற்றத்தைக் கண்டு பிடித்த ஹீரோவை அமுக்கிவிடும் ஃபார்முலா பாத்திரம் என்றாலும், அருண் பாண்டியன் எக்ஸ்பிரஸ் வேகத்தில் திரைக்கதை விரைய உதவுகிறார். நிஜமாகவே முள்கொடியில் சிக்கிக் கொள்ளும் ஸ்வெட்டர் நூலின் ஒரு முனையைப் பிடித்து கொண்டு போய் தடயத்தை அவர் கண்டுபிடிப்பது, நல்ல திருப்பம்.

பின்னணி இசையில் பின்னியெடுக்க வாய்ப்புள்ள கதையென் பதைப் புரிந்து அசத்தியிருக்கும் ஜெரோம் புஷ்பராஜ் அறிமுக இசையமைப்பாளராக நிறைவு தருகிறார். ஆனால் பாடல்களுக்குப் பொருத்தமான சூழ்நிலை இல்லாததால், ஆங்காங்கே அவை அந்தரத்தில் தொங்குகின்றன. படம், தியேட்டரில் தூங்க வருகிறவர்களை, பயத்தில் தலைகீழாய்த் தொங்க வைத்துவிடுகிறது.

- விஷ்ணுவல்தாசன்

● ஆவரெஜ்

வணக்கத்துக்குரிய வயிறே...

அந்த இளம் பெண்ணுக்குப் பதினாறு வயதிருக்கும். பள்ளி மாணவி. பெயர் சுதா. அடி வயிற்றின் வலப்புறம் கடுமையான வலி, வாந்தி, ஜுரம் போன்ற பிரச்னைகளோடு துவண்ட கொடி போலச் சோர்ந்து போய் வந்தாள். அடிப்படைப் பரிசோதனைகள் செய்தபோது, 'அப்பன்டிசைடிஸ்' பிரச்னையாக இருக்குமோ என்ற சந்தேகம் வந்தது. உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்து பார்த்தபோது, சிறு அதிர்ச்சி. அப்பன்டிக்ஸில் (குடல் வால்) ஒரு பிரச்னையுமில்லை. சிறு குடலில்தான் கோளாறு. அதில் 'டைவர்டிகுலம்' பிரச்னை காணப் பட்டது.

வழக்கமாக உணவு செல்லும் பாதையில், சிறு குழி போல ஏற்பட்டு, அதில் ஆகாரம் தங்கிவிடும். வெளியே போக வழியில்லாததால், நாளடைவில் செப்டிக் ஆகி கடுமையான வலி ஏற்படுத்தும். இதைத்தான் 'டைவர்டிகுலம்' என்போம்.

சுதாவுக்கு, உடனடியாக 'மெக்கல்ஸ் டைவர்டிகுலைடிஸ்' என்ற அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. சீழ் கோத்திருந்த குழிப் பகுதியை வெட்டி எடுத்து, சிறுகுடல் பாதையைச் சீராக்கினோம்.

லேப்ராஸ்கோபிக் முறையில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டதால், மூன்றே நாளில் குணமடைந்து, அந்த வாரமே பள்ளிக்கும் சென்றுவிட்டாள் சுதா.



இனி, சிறுகுடல் பகுதிக்கு ஒரு ஷார்ட் விஸிட் அடிப்போமா? மனித உறுப்புகளிலேயே அதிசயப் பிறவிகள் சிறுகுடலும் பெருங்குடலும். இப்படிச் சொல்வதற்கு அவை செரிமான மண்டலத்தின் சிறப்பு உறுப்புகள் என்பது மட்டுமே காரணமில்லை. இன்னொரு ஸ்பெஷல் காரணமும் உண்டு.

தாயின் வயிற்றில், கருவானது உருவாகும் போது, கண் இமை முதற் கொண்டு, கால்நகம் வரை, எல்லா உறுப்புகளும் அந்தச் சின்னஞ்சிறு உடம்புக்குள்ளேயே உருவாகி விடுகின்றன. ஆனால் சிறுகுடலும் அதை அடுத்த பெருங்குடலும் மட்டும் விதிவிலக்கு. அவை, கருவின் தொப்புளுக்கு வெளியே உண்டாகி, வளர்ச்சியடைகின்றன. பின்னர், கருவின் இயல்பான வளர்ச்சியின்போது, தொப்புள் வழியாகக் குழந்தையின் வயிற்றுக்குள் சென்று, தம்மைத் தாமே அழகாய்ப் பொருத்திக் கொள்கின்றன!

மற்ற உறுப்புகளைப் போல, சிறுகுடலும் பெருங்குடலும் குழந்தையின் உடம்புக்குள்ளேயே உருவாகி வளராததற்குக் காரணம், அவற்றின் படுவேகமாக வளரும் தன்மை தான்.

இந்த உறுப்புகளின் வளர்ச்சி வேகத்தை சமாளிக்கக் கூடிய அளவுக்கு, குழந்தையின் சிறு வயிற்றுக்குள் போதிய இடமிருக்காது. எனவே, இந்த அட்ஜெஸ்ட்மெண்ட்!

குழந்தை உருவாகி சுமார் ஐந்தாவது வாரத்திலிருந்து, பத்தாவது வாரத்துக்குள் இக்குடல்கள் தொப்புளுக்கு வெளியே வந்து வளர்கின்றன. குடல்கள் நன்றாக வளர்ச்சி அடைந்ததும், தொண்ணூறு டிகிரி கோணத்தில் திரும்பி, லாகவமாய் வயிற்றில் புகுந்து நிலை கொள்கின்றன.

இந்தச் சுழற்சிக்கு Intestinal Rotation என்று பெயர். இந்த இயக்க நிலையில், ஏதாவது கோளாறு ஏற்பட்டால், 'மால் ரொடேஷன்' ஆகி, குடல் அடைப்புப் பிரச்னை

6

உண்டாகும்.

இன்னும் சில குழந்தைகளுக்கு, குடல்கள் முழுவதும் உள்ளே போகாமல், ஒரு சின்ன துணுக்கை மட்டும் நினைவுப் பரிசு போல தொப்புளுக்கு வெளியே வைத்துவிட்டுச் சென்றுவிடும். அப்போது தொப்புள் பலூன் போல வீங்கி 'அம்பிளிக்கல் ஹெர்னியா' ஏற்படும்.

சிறுகுடல், தன்னிடம் உள்ள குடல் உறிஞ்சிகள் மூலம் உணவில் உள்ள சத்துப் பொருட்களை உறிஞ்சி, செரிமான வேலைகளைச் சீராகச் செய்வது பற்றி ஏற்கெனவே மிகச் சுருக்கமாகச் சொல்லி விட்டதால், இனி, சிறுகுடலில் உண்டாகும் நோய்களைப் பற்றிப் பார்ப்போம்.

அதிசயப் பிறவிகள்!

சிறுகுடலில் மிக அதிகமாக ஏற்படுவது, வலி இல்லாத, தீங்கு விளைவிக்காத கட்டிகள். இவற்றில் ஐந்து விதமான கட்டிகள் பரவலாகக் காணப்படுகின்றன.

1. சிதப்படலக் கட்டி, (Adenoma) *2.* விழுதுகள் போன்ற சிதப்படலக் கட்டி, (Polypoid adenoma) *3.* தசைத் திசுக்கட்டி, (Leiomyoma) *4.* கொழுப்புக் கட்டி, (Lipoma) *5.* இரத்தக் குழாய்க்கட்டி (Angioma)



சிறுகுடலில் கட்டிகளைத் தவிர, காசநோய், டைபாய்டு புண், குடல் அடைப்பு, குடல் பிதுக்கம், புற்றுநோய் போன்றவையும் ஏற்படுகின்றன, என்றாலும் குடல் அடைப்பு, குடல் பிதுக்கம், புற்றுநோய் போன்றவைதான் மிக மிக அதிகம்.

குடல் அடைப்பு ஏன் ஏற்படுகிறது?

முதல் காரணம், 'ஸ்பாஸம்' எனப்படும் கடும் தசைச் சுருக்கக் கோளாறு. திடீர் வலியுடன் திடீர்ப் பிடிப்பு ஏற்பட்டு, குடல் அடைப்பு ஏற்படும்.

'ஸ்ட்ரிக்சர்' எனப்படும் குடல்பாதைச் சுருக்கத்தாலும், குடல் பாதையில் நெரிசல் ஏற்பட்டு, குடல் அடைப்பு ஏற்படும். குடலுக்கு வெளியே உள்ள நிணநீர்க் கட்டிகள் வீங்கிப் போய், அதன் பாதிப்பாக, குடலின் மீது அழுத்தம் உண்டானாலும் குடல் அடைப்பு ஏற்படும்.

சொல்லாமல் கொள்ளாமல், திடீர் என்று ஓர் அசுப வேளையில் வயிற்று வலி ஏற்பட்டு, வாந்தி, உப்புஸம், வயிறு வீக்கம் என வெறுப்பேற்றுவது திடீர் அடைப்பு (அக்யூட்) வகை.

அதற்கு நேரெதிராக, சின்ன முன்னறிவிப்போடு, மிதமான வலி தந்து, நாள் கிழமை பார்த்து, அவ்வப்போது வந்து, மிரட்டி விட்டுப் போவது கிரானிக் வகை. இவர்களுக்கு வாயு பிரிந்ததும் கொஞ்சம் ஆறுதலாகவும், மலம் கழிந்ததும் 'அப்பாடா!' என்றும் இருக்கும்.

இவை மட்டுமன்றி, சிறு குடலுக்கு வரும் ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டாலும், சிறு குடல் அழுகிப் போகிறது. ஆகாரம் செல்லும் பாதையின் தொடர்பு துண்டிக்கப்படுவதால், ஏகப்பட்ட சிக்கலாகிவிடும். அந்தச் சமயத்தில் அழுகிப் போன பகுதியைத் துண்டித்து நீக்கிவிட்டு, நல்ல பகுதிகளைச் சேர்த்து இணைத்தால், நோயாளியைக் காப்பாற்ற முடியும். இந்தப் பிரச்னைக்கு, உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்யாவிட்டால், குடல் முழுவதும் அழுகி, நோயாளியின் உயிருக்கே ஆபத்தாகிவிடும். இந்த எமர்ஜென்ஸி ஆபரேஷனுக்கு 'சுப்பீரியர் மெஸன்ட்ரிக் த்ரோம்போஸிஸ்' என்று பெயர்.

குடல் ஓட்டை ஏன்? அடுத்த வாரம் வரை காத்திருங்க!

டாக்டர் எஸ். அஷோக்

கு.கவை இப்படித் திணிக்கலாமா!

● ஆர்.கமலா, பெங்களூர் - 7

? தமிழுக்கு இதுவரை ஒரே ஒரு ஞானபீட விருதுதான் வந்துள்ளது. காரணம் நமக்கு சரியாய் lobbying செய்யத் தெரியவில்லை என சிவசங்கரியும்; நம்மை நாமே மதிக்கக் கற்றுக் கொள்ளவில்லை என வைரமுத்துவும் சொல்கிறார்களே... தராசு என்ன சொல்கிறார்...?

! நான் வைரமுத்து கட்சி. காரணம், நல்ல நூல்களைச் சிபாரிசு செய்யக்கோரி ஞானபீடம் இங்குள்ளவர்களைத்தான் கேட்கிறது. அந்தப் பிரமுகர்களில் எத்தனை பேர் அக்கறை எடுத்துக் கொண்டு சிறந்த நூல்களைத் தேர்வு செய்து, சிபாரிசு செய்கிறார்கள்...? ஞானபீடத்தின் தலைமைக்கே தெரிந்த சிதம்பர ரகசியம் அது!

● கே.எஸ். வெங்கடேஷ், மதுரை - 12

? இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாலம் கட்ட முதல்வர் ஜெ. எதிர்ப்புத் தெரிவிப்பது ஏன்...?

! உன்நாட்டில் கட்டப்பட வேண்டிய பாலங்கள் எவ்வளவோ இருக்க, பாரதியின் கனவுகள் வேறு எவ்வளவோ மெய்ப்பட வேண்டியதிருக்க, சிங்களத் தீவுக்கு ஒரு பாலம் அமைக்க இப்ப என்ன அவசரம்னேன்!

● டி.ஜே. ரகுராமன், சென்னை - 73

? முதல்வரின் ராமர் கோயில்-சிவில் சட்டம் போன்றவை குறித்த கருத்துகளைக் கண்டித்து கி. வீரமணி கூறியது அதிசயம்தானே...?

! இல்லை. இதைச் சொல்லாவிட்டால் அவர் கோழைமணி ஆகிவிடுவாரே!

● வீ. முத்தையா, திருநெல்வேலி ★

? டெர்மினேட்டர் போன்ற ஹாலிவுட் படங்கள் மிகையான கற்பனையாக இருந்த போதிலும் சீரியஸாக சீட்டில் அமர்ந்து பார்க்க வைக்கிறதே... எதனால்...?

! தொழில்நுட்பம் கை கொடுப்பதால்.



• வரவேண்டும் மாற்றம்



• அதிசய கண்டனம்!



• நியாயமான கவலை!

● எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி

? கன்னத்தில் முத்தமிட்டால் படத்துக்கு ஆறு தேசிய விருதுகள் கிடைத்துள்ளனவே...?

! ஆறு எழுத்துக்காரர் எடுத்த படத்துக்கு ஆறு விருதுகள் கிடைத்ததில் மகிழ்ச்சிதான். தகுதியான படம்தான். ஆனால், 'அழகி' ஒரு விருதுகூட பெறாதது கொஞ்சம் ஏமாற்றமே.

● கே.வி.ராமன், சென்னை - 73

? ஹரியானாவில், இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்கள் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் பதவியை வகிக்கக் கூடாது என்பதற்கு உச்சநீதி மன்றம் அனுமதி வழங்கிவிட்டதே? இப்படி கு.க.வைத் திணிக்கலாமா?

! அப்படிப் பார்த்தால் சாலை விதி முறைகள் கூட மக்கள்மீது திணிக்கப்படுவதுதான்! ஹரியானா மாநிலம் என்ன.. இந்தியா முழுதுமே கூட இந்த விதிமுறை, விதி விலக்கின்றி அனைத்து மட்டங்களிலும் அமல்படுத்தப்படுமானால் வரவேற்கலாம். கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களை மட்டும்

☐ ரூ.100 பரிசு பெறுபவர்
கே. ரஜினி ராம்கி,
16, ஜி.வி.எம். நகர்,
மயிலாடுதுறை - 609 001

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
வீ. முத்தையா,
35, பாரதியார் தெரு,
திருநெல்வேலி - 627 006.

நீங்கள் கேட்டவை-தராசு

குறி வைப்பானேன்!

● கு. கணேசன், மறைமலைநகர்

? அருணாசலப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் குறித்து...?

! வழக்கமான, காலை வாரி விடும் கீழ்த்தர அரசியல்தான்.

● பெ. பொன்ராஜ் பாண்டி, மதுரை - 10

? சோனியா பிரதமராகும் நாள்தான் நம் வாழ்க்கையில் மிகவும் துரதிர்ஷ்டமான நாள் என பாரதிய ஜனதா வர்ணித்துள்ளதே...?

! அதிசயமில்லை. இது போன்ற தனி நபர் தாக்குதலுக்கு இடங்கொடாது, தாம் கட்சித் தலைமையோடு நிறுத்திக் கொள்ளப்போவதாக அறிவிப்பதுதான் சோனியாவுக்கும் காங்கிரசுக்கும் நல்லது. அவ்வாறு செய்தால், ஆட்சி மாற்றம் உறுதியாகும். இல்லாவிட்டால் இந்தப் பிரசாரமே பா.ஜ.க.வின் வலிமையான ஆயுதமாகி விடும்.

● த. குமரேசன், காவல் கிணறுபுதூர்

? தீவுகளாகச் சிதறிக் கிடக்கும் இந்திய மதங்களை அன்பாலும் கருணையாலும் இணைக்க வேண்டும் என்று அப்துல் கலாம் கூறியிருப்பது பற்றி...?

! அன்பு, கருணை இவற்றோடு பொது சிவில் சட்டம் என்ற அனைவருக்கும் பொதுவான தர்ம நியாயத்தையும் இணைத்தால் தான் அவரது ஆதர்சக் கனவு மெய்ப்படும்.

● வீ. பாலகிருஷ்ணன், மதுரை - 4

? 2001- 2002ம் ஆண்டில் 414 ரயில் விபத்துகள் நடந்தன; ஆனால் 2002 - 2003ம் ஆண்டு, 351 விபத்துகள்தான் நடந்துள்ளன என்று ரயில்வே அமைச்சர் கூறியிருப்பது பற்றி..?

! 'எண்ணி'ப் பேசும் அமைச்சர், இது குரூரத்தின் உச்சமான கமெண்ட் என்று எண்ண மறந்துவிட்டார்!

● எம்.பாஸ்கர், திண்டுக்கல்

? இந்தியாவிலேயே காந்திய கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் ஒரே கட்சி அ.தி.மு.க.தான் என்று அமைச்சர் பாண்டுரங்கன் கூறியுள்ளாரே...?

! ஜெய ஜெய விட்டல்!

● ஜே.ரஜினி ராம்கி, மயிலாடுதுறை

? மோடியின் வருகை சொல்லும் செய்தி என்ன...?

! தேர்தல் பற்றிய விழிப்புணர்வுடன் ஹிந்துத்வா சுறுசுறுப்பாக இருக்கிறது. அந்த சிந்தனையே இன்றி, மதச் சார்பற்ற பிரிவுக் கட்சிகள் உட்கட்சிப் பூசல்களில் காலத்தை விரயம் செய்கின்றன.

● மன்னை நாகபா கண்ணன், சென்னை

? தாய் மடியில் சேய் தூங்குவது; காதலி மடியில் காதலன் உறங்குவது; சலூனில் முடிவெட்டிக் கொள்ளும்போது கண்ணைச் செருகி வரும் தூக்கம்... எது 'டாப்'?

! தாய் மடியில் சேய் தூங்கிவிட்டுப் போகட்டும். நீங்களும் நானும் நல்ல பொழுதைத் தூங்கிக் கழித்தால் நாடும் கெடும், வீடும் கெடும். போதும் ஆராய்ச்சி, விழித்துக் கொள்ளும்.

* கிடைக்காதது ஏமாற்றம்





* கிடைத்தது மகிழ்ச்சி...

மெல்லினம்

அன்றிரவு ஜக்கு ஒரு கனவு கண்டான். கனவில், அவன் குட்டியுடன் ஒரு பாராசூட் ஏறி அண்டார்டிகாவுக்குப் போய்க் கொண்டிருந்தான். உற்சாகமான, வலிகளற்ற, மிகவும் சுகமான பயணமாக இருந்தது அது. காற்றின் திசையில் பாராசூட் தன்னிஷ்டத்துக்கு மிதந்து கொண்டிருந்தது. அவன் டிஸ்கவரி சேனலில் பார்த்திருந்த பேராசூட்களில் இல்லாதவாறு அந்த பாராசூட்டில் மட்டும் அழகாக, குட்டியாக இரண்டு நாற்காலிகள் இருந்தன. சௌகரியமாக உட்கார்ந்தபடி பாராசூட்டில் பறப்பது எத்தனை பரவசமானது. எப்படி இந்த பாராசூட் கிடைத்தது என்பது தான் அவனுக்குத் தெரியவில்லை. ஓர் அமெரிக்காவுக்கோ, ஐரோப்பாவுக்கோ போகாமல், தான் ஏன் அண்டார்டிகாவுக்குப் போகலாம் என்று முடிவு செய்தோம் என்றும் புரியவில்லை.

''இப்ப நாம எதுக்கு அண்டார்டிகா போறோம்?'' பக்கத்தில் அமர்ந்திருந்த குட்டிக்குத் திடீரென்று சந்தேகம் வந்துவிட்டது.


''சும்மாத்தான். அந்த இடம் ஒரே வெள்ளைவெளேர்னு இருக்கும். ஃபுல்லா ஸ்நோ தான். மெத்துமெத்துன்னு நடக்கவே சுகம்மா இருக்கும்! பெங்குயின்ஸ் நிறைய இருக்கும். மனுஷங்களே இருக்க மாட்டாங்க. ரிசர்ச் பண்ண வந்த சயின்டிஸ்ட்ஸ் மட்டும் ரெண்டு மூணு பேர் இருப்பாங்க. அநேகமா அவங்க நமக்கு மத்தியானம் லஞ்ச் குடுப்பாங்க'' என்று ஜக்கு சொன்னான்.

''குளிருமே'' என்றாள் குட்டி.

''ஒன் அவர் தான். சுத்திப் பார்த்துட்டுத் திரும்பிடலாம். எனக்கு நிறைய ஹோம் ஒர்க் இருக்கு.''

அவன் கையிலேயே நோட்டுப் புத்தகமும் வைத்திருந்தான்.

''இதை எதுக்கு எடுத்துக்கிட்டு வந்



திருக்கே ஜக்கு?"

"வழில போரடிச்சா நாலு சம் போட்டுப் பார்க்கலாம் இல்லியா? வி ஷுட் நாட் வேஸ்ட் அவர் டைம்."

"இந்த பாராசூட் கவிழ்ந்து விழாதே?"

"பயப்படாதே" என்றான் ஜக்கு. பாது காப்பாக அவளது முதுகுப் பக்கம் தன்



8

கையைக் கொடுத்து மறுபுறமிருந்த கயிறைப் பிடித்துக் கொண்டான்.

"கீழ குனிஞ்சு பார்த்தா பயமாத்தான் இருக்கு" என்றாள் குட்டி.

"குனியாதே. வேணா ஒண்ணு பண்ண றியா?" எனறவன் தன் நோட்டுப் புத்தகத்தை அவளிடம் கொடுத்து, "படிச்சிண்டே இரு. பயம் தெரியாது" என்று சொன்னான்.

"ஐயோ, மேத்ஸ் நோட். எனக்கு வேணாம். உவ்வே" என்றாள் குட்டி.

"கடைசிலேருந்து புரட்டிப் பாரு."

அவள் ஒரு வினாடி அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, அந்த நோட்டுப் புத்தகத் தைப் பின்னட்டையிலிருந்து பிரித்துப் புரட்டத் தொடங்கினாள்.

"ஹை! என்னைப் பத்தி எழுதியிருக்கே!"

"அட, வெங்கடாஜலபதி நேத்து சாப் பிடமாட்டேன்னு அடம் பிடிச்சதா? ஏன்? உங்கம்மாவுக்கும் பாட்டிக்கும் சண்டையா? அச்சச்சோ!"

புரட்டிக் கொண்டே வந்த குட்டி ஒரு பக்கத்தில் சட்டென்று தாம தித்தாள். அவனும் அந்தப் பக்கம் வருவதற்காகத்தான் காத்திருந்தான்.

"வாட் இஸ் திஸ்?" என்றாள் குட்டி.

அவன் சொல்ல நினைத்து, சொல்ல முடியாமல் உள்ளுக்குள் பூட்டி வைத்திருந்த விஷயம் அது. அப்பா. அவரது காதல்.

தான் படித்ததை, தன் மனத்தில் அது பதிந்தவிதத்தில் ஜக்கு தன் கணக்கு நோட்டில் எழுதி வைத்திருந்தான். ஒரு கோர்வை யாகக் குட்டியிடம் தன்னால் அந்த விவரங்களைச் சொல்ல முடியாது என்று தோன்றியதுமே, அவன் தன் கணக்கு நோட்டின் பின்பகுதியை தன் டைரியாக பாவித்து எழுதத் தொடங்கி விட்டான்.

"குட்டி, நீ அதைப் படி. எங்கியாவது புரியலைன்னா கேளு. ஆனா காட் ப்ராமிஸ், நீ இது பத்தி யார்கிட்டயும் சொல் லக் கூடாது. சொல்லுவேன்னா, நான் இப்படியே கீழ குதிச்சி செத்துப் போயிடுவேன்."

"ஐயோ! நான் ஏன்

சொல்றேன்? நீ இப்படியெல்லாம் பேசாதே" என்று அவன் வாயைப் பொத்தினாள் குட்டி. நீ செத்துப் போயிட்டா, நானும் செத்துப் போயிடுவேன். அப்புறம் எங்கம்மா அழுவா."

அவன் அவளைச் சில கணங்கள் சமாதானப்படுத்த வேண்டியதானது. நிலப் பரப்பு மறைந்து இப்போது கீழே நீலக்கடல் தன் தோகையை விரித்துவிட்டிருந்தது. அலையற்ற கடல். வெறும் நீலம். இள நீலம். கருநீலம். பச்சை கலந்த நீலம். வெறும் பச்சை. நீரின் விதவிதமான வர்ணஜாலங்கள். திடீர் திடீரென்று துள்ளிக் குதிக்கும் டால்பின்கள். பாய்விரித்து மிதக்கிற ஒற்றைப் படகில் ஒரு மீனவன் தலையில் உயர்ந்த குல்லாய் அணிந்திருக்கிறான். அவனுக்கரு கில் ஒரு டிரான்ஸிஸ்டர் இருக்கிறது.

"கடல்லே ரேடியோ பாடுமா?" என்று குட்டி கேட்டாள்.

"தெரியலை. நீ படி."

அவனுக்கு அவள் மனத்துக்குள் அந்த விஷயத்தை ஏற்றிவிட வேண்டும் என்று மிகவும் ஆவலாயிருந்தது. அச்சச்சோ என்று வருத்தப்படுவாள். நீ கவலைப்படாதே ஜக்கு என்று ஆறுதல் சொல்லுவாள். கண்ணைத் துடைத்துவிடுவாள். அந்தச் சமயம் இரண்டு சொட்டு அழுகை வந்தால் எத்தனை நன்றாக இருக்கும்?

குட்டி படிக்கத் தொடங்கினாள். அவளுடனேயே அவனும் தான் எழுதிய வரிகளை மீண்டுமொரு முறை வாசிக்கத் தொடங்கினான்.

"...இன்று வீட்டை க்ளீன் பண்ண ஆரம்பித்தோம். அப்பாவின் புத்தக அல மாரியிலிருந்து புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கீழே வைத்து, தூசு தட்டினோம். பரணிலிருந்து அட்டைப் பெட்டியை நான் இறக்கினேன். அதில் அப்பாவின் பழைய டைரிகள் மூன்று கிடைத்தன. விளையாட் டாகப் படிக்க ஆரம்பித்தேன். அப்பா யாரோ ஒரு பொம்பளையை லவ் பண்ணி யிருக்கிறார் என்கிற விஷயம் அதில் இருந்தது.

எனக்கு மிகவும் அழுகை வந்தது. என் அப்பா ரொம்ப நல்லவர் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். உலகத்திலேயே ரொம்ப ரொம்ப நல்லவர் என்று என் ப்ரெண்ட் ஸிடம் சொல்லுவேன். என்னை அடிக்கவே மாட்டார் என் அப்பா. எப்போதாவது அம்மா நான் வெங்கட்டுடன் விளையாடும் போது திட்டினாலும் திட்டாதே என்று சொல்லுவார். ராத்திரி பத்துமணி குல்பி யெல்லாம் வாங்கிக் கொடுப்பார். தாத்தா வுடன் நைட்ஷோ சினிமாவுக்குக் கூட போய்வர அனுமதி கொடுப்பார்.

அந்த அப்பா யாரோ ஒரு பொம்ப ளையை சினிமாவில் வருவது மாதிரி லவ் பண்ணியிருக்கிறார். அந்தப் பொம்பளையின் பெயர் நிர்மலா. சிவப்பாக, அழகாக இருப்பாளாம். ஒரு மேட்டர் விஷயமாக அப்பா அவளை முதல் முதலில் போய்ப் பார்த்திருக்கிறார். பிறகு அவளது அப்பாவுடன் ஃப்ரெண்டு ஆகிவிட்டார். வாரத்துக்கு ரெண்டு வாட்டி அவள் வீட்டுக்குப் போயிருக்கிறார். ஜர்னலிசம் படித்துக் கொண்டிருந்த அந்தப் பொம் பளைக்கு, அப்பா நிறைய ஒத்தாசை பண்ணியிருக்கிறார்.

அதற்கப்புறம் ரெண்டு பேரும் லவ் பண்ண ஆரம்பித்திருக்கிறார்கள். உதயம் தியேட்டரில் புதுப்புது அர்த்தங்கள் என்ற சினிமா பார்த்திருக்கிறார்கள். ஒரு நாள் ராத்திரி சினிமா பார்த்துவிட்டு வரும்போது, அப்பாவின் ஸ்கூட்டர் பஞ்சராகிவிட்டது. நடுரோடில் அவர் வண்டியைத் தள்ளிக் கொண்டு அவளுடன் நடந்து போய் வீட்டில் விட்டுவிட்டு, அப்புறம் குரோம்பேட்டை வந்திருக்கிறார். 'ஏன் லேட்டு' என்று தாத்தா கேட்டார். 'ஆபீசில் வேலை ஜாஸ்தி' என்று அப்பா பொய் சொன்னார்.

அப்பா லவ் பண்ணி ஒரு தப்பு, பண் ணார். பொய் சொல்லி ஒரு தப்பு பண்ணார். இதனால் எனக்கு என் அப்பாவைப் பிடிக்கவில்லை. நிஜமாவே பிடிக்கவில்லை. எனக்கு அழுகை அழுகையாக வருகிறது. என் அம்மா ரொம்ப நல்லவள். அவளுக்கு இது இன்னும் தெரியாது. நான் அப்பாவின் டைரியை எடுத்து என் ஸ்கூல் பேகில் ஒளித்து வைத்திருக்கிறேன். அதை அம்மா



பாதையைப்
பின்பற்றி, அது எங்கு
செல்கிறதோ, அங்கு
சொல்லாதே. பாதையே
இல்லாத இடத்தில்
சென்று ஒரு சுவட்டை
அமைத்து வா!
- யாரோ

பார்த்துவிடக் கூடாது... சில பேப்பர்களைக் கிழித்துப் போட்டுவிடலாமா என்று நினைக்கிறேன். ஆனால் வேற யாராவது எடுத்துப் படித்துவிட்டால் என்னைத் திட்டுவார்கள். அதுவும் சந்திரா டீச்சர் பார்த்துவிட்டால், என்னை பெஞ்சுமேல் நிற்க வைத்து அடிப்பாள். மேலும் என் எனிமியான பிரபுவுக்கு இது தெரிந்தால், என்னைக் கிண்டல் செய்வான். கடவுளே, என்னைக் காப்பாற்று..."

"அச்சச்சோ" என்றாள் குட்டி.

"என்னடா ஜக்கு இது? இப்படியெல்லாம் எழுதியிருக்கே?"

"எல்லாமே அப்படித்தான் இருக்கு. நான் என்ன பண்ணட்டும்?" என்றான் ஜக்கு.

"எனக்கு ஒரே பாவம், பாவமா இருக்கு."

"என் மேலயா?" என்று அவன் கேட்டான்.

"இல்லே... உங்கம்மா மேல."

சட்டென்று அவன் அவளை நிமிர்ந்து, உற்றுப் பார்த்தான். அவன் துளியும் எதிர்பாராத பதில் அது. தன்னால் மட்டுமே உணர முடியும் என்று அவன் வெகு நிச்சயமாக நம்பியிருந்த விஷயம் அது. தன் மனத்தைப் பிரதியெடுப்பது போல் குட்டி சொன்னதும், அவன் உணர்ச்சிகள் உதடுகளைக் கிழித்துக் கொண்டு பீறிட்டன.

அம்மா! ஆம். அவள் தான் பாவம். இந்த விஷயம் அவளுக்குத் தெரியவே தெரியாது. தெரிந்தால் என்னாகும் என்று அவனால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. உட்கார்ந்து அழுவாளா? அப்பாவுடன் சண்டை போடுவாள். அது நிச்சயம். பாட்டி சமையலறையிலிருந்தபடி இரண்டு பேரில் யாராவது ஒருத்தருக்கு ஆதரவாகப் பேசக் கூடும். அப்பாவின் அம்மாவாக இருந்தாலும், பெரும்பாலும் பாட்டி அம்மாவைத்தான் சண்டைகளின் போது ஆதரிப்பது வழக்கம்.

ஒரு வேளை இந்த விஷயம் பாட்டிக்குத் தெரிந்திருக்குமோ? தாத்தாவுக்கு? தெரிந்திருந்தால் அம்மாவிடம் சொல்லாமலா இருப்பார்கள்? மறைத்திருப்பார்களா? லவ் பண்ணுவது. எத்தனை கெட்ட செயல். அது ஏன் அப்பாவுக்குத் தெரியவில்லை? தண்டபாணி மாஸ்டர் அந்தப்பத்தாம் வகுப்புப் பையனை கிரவுண்டில் முட்டி போடச் சொன்னதுபோல் அப்பாவை யார் போடச் சொல்லுவார்கள்?

அப்பா, முட்டி போட்டபடி மொட்டை மாடியில் அழுது கொண்டிருப்பது போன்றதொரு காட்சி, அவன் மனத்துக்குள் உண்டானது. அதுவும் கஷ்டமாகத்தான் இருந்தது. பார்ப்பதற்கு. எத்தனை நல்ல அப்பாவாக இருந்தவர்! எதற்காக அந்த நிர்மலாவை லவ் பண்ணினார்?

அவனுக்குத் தாங்கவே முடியவில்லை. ஏதாவது செய்து இந்த விஷயத்தை முற்றிலும் மறந்துவிட மிகவும் விரும்பினான். ஆனால் நினைவின் அத்தனை அடுக்குகளிலும் இது ஒன்று மட்டுமே ராட்சஸன் மாதிரி வியாபித்திருந்தது.

கடவுளே!

நிச்சயம் அவன் ஓவென்று அலறியிருக்க வேண்டும். "என்னாச்சுடா கண்ணா?" என்று உடனே அம்மா அவனைப் பிடித்து உலுக்கி எழுப்பினாள்.

அண்டார்டிகாவுக்கு இனி தான்போகப் போவதில்லை என்று அவனுக்குத் தெரிந்து விட்டது.

(தொடரும்)



"பிச்சைக்காரன் வேஷத்தில் நகர்ச் சோதனை வேணாம்னு எவ்வளவோ சொல்லியும் மன்னர் கேட்கவேயில்லை... பாருங்க..."

"என்ன ஆச்சு...?"

"வேற ஏரியாக்காரன் நம்ம ஏரியாவுல பிச்சை எடுக்க வந்துட்டான்னு அந்த ஏரியா பிச்சைக்காரனுங்க நையப் புடைச்சுட்டாங்க!"

- டி.கே. சுப்பிரமணியன்



புலிவளர்க்க எட்டாயிரம் டாலர்!

வரவர யார்தான் 'மஞ்சள் கடிதாசி' கொடுப்பார்கள் என்றே யூகிக்க முடியவில்லை. பிரபல பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் திவாலாகிவிட்டார் என்று ஒரு செய்தி அடிபட, இப்போது பிரபல குத்துச் சண்டை சாம்பியன் மைக் டைசன்! வதந்தி, யூகம் என்றில்லாமல் மான்ஹாட்டனில் உள்ள நீதிமன்றத்துக்கு நேரடியாகவே சென்று தாம் திவாலாகிவிட்டதாக எழுதிக் கொடுத்திருக்கிறார் மைக் டைசன்.

கற்பழிப்புக் குற்றத்துக்காக மூன்று வருடம் சிறையில் இருந்தார். போட்டியாளரான 1997ல் ஹோலிபீல்ட்டின் காதைக் கடித்துத் துண்டாக்கியதற்காக மூன்று வருடங்களுக்குச் சர்வதேச குத்துச் சண்டை போட்டிகளிலிருந்து விலக்கிவைக்கப்பட்டார் என்றெல்லாம் செய்திகளில் அடிபட்டாலும் கூட (சில வருடங்களுக்கு முன்புகூட) முன்னூறு மில்லியன் டாலர்களுக்குமேல் சொத்து சேர்த்தவர் என்று அறியப்பட்டவர் டைசன். இப்போது அந்தத் தொகையையும் தாண்டிவிட்டது அவரது செலவுகளும் கடன்களும்!

அப்படியென்ன செலவு என்று கேட்பவர்கள் மைக் டைசனின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளாதவர்கள். புதிது புதிதாக எஸ்டேட்டுகள், லேட்டஸ்டான கார்கள், புதிய நாகரிக நகைகள் என்று வாங்கிக் குவித்ததோடு நிறுத்திக் கொள்ளாமல் பூனைகளிலிருந்து புலிகள் வரை தமது தோட்டத்தில் செல்லப் பிராணிகளை வளர்த்தவர் அவர்.

டைசனின் மனைவி மோனிகா டர்னர் அவரிடமிருந்து விவாகரத்து பெற்றபோது, பத்து மில்லியன் டாலர் தொகையை டைசன், ஜீவனாம்சமாக வழங்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது நீதிமன்றம். இந்த வழக்குக்காக மைக் டைசன் செலவழித்தத் தொகை மட்டுமே ஒன்பது மில்லியன் டாலர்களாம்! தமது பிறந்தநாள் விழாக்களை மிக மிக ஆடம்பரமாகக் கொண்டாடுவது டைசனின் வழக்கம்.

புலிகளை வளர்ப்பதற்கு மட்டும் வருடத்திற்கு எட்டாயிரம் டாலர்களுக்கு மேல் தேவைப்பட்டிருக்கிறது. போதாக்குறைக்கு அவ்வப்போது இழுத்துவிட்டுக் கொள்ளும் வம்படிகளுக்காக நஷ்டஈடு கொடுத்து வேறு சமாளிக்க வேண்டும். போனவாரக் கடைசியில்தான் டைசன் மீது மற்றொரு கிரிமினல் குற்றச்சாட்டுப் பதிவானது. உணவகம் ஒன்றிலிருந்து வெளியே வந்தபோது ஒருவர் டைசனிடம் ஆட்டோக்ராஃப் கேட்டதாகவும், கேட்டவர் முகத்தில் டைசன் குத்தியதாகவும், தொடர்ந்து கைகலப்பு நடந்ததாகவும் செய்தி. டைசன் தரப்பினரோ வந்தவர்தான் முதலில் தாக்கினார் என்கிறார்கள்.

"இந்த கிரகத்தின் மிக மோசமான மனிதன் நான்தான்" என்று ஒரு பேட்டியில் பெருமையாகக் கூறிக் கொண்ட டைசன் இந்த நிலையிலாவது தமது தவறுகளை உணர்ந்திருப்பாரா? இல்லை என்றுதான் தோன்றுகிறது. தமது பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாக டைசன் கருதுவது டான் கிங் என்பவரை. இவர்மீது நூறு மில்லியன் டாலர் நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தொடுத்திருக்கிறார்! 1995ல் சிறையிலிருந்து வெளிவந்த பிறகு டான் கிங்தான் டைசனின் பிரமோட்டராகப் பணியாற்றினார். அதாவது டைசன் கலந்துகொண்ட போட்டிகள் தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யும் இணைப்பாளராக டான் கிங் செயல்பட்டார். அவரது தவறான வழிகாட்டலில்தான் இன்று நடுத்தெருவுக்கு வந்துவிட்டதாகக் கூறியிருக்கிறார் டைசன்!

- குல்லூ



• வள்ளலார் அணிந்த பாதரட்சைகள்

வள்ளலார் பாதரட்சை!



• கந்தசாமிப் பிள்ளையின் சமாதிக் கோவில் முன் கிராம வாசிகள்

புதுவை - தமிழக எல்லையில் இருக்கிறது காரணப்பட்டு கிராமம். புதுவையிலிருந்து செல்லஞ்சேரி என்ற சிற்றூர் வரை பேருந்து வசதியுண்டு. பிறகு ஒரு கிலோ மீட்டர் தூரம், கரடு முரடான கப்பிச்சாலை வழியே நடந்துதான் காரணப்பட்டை அடைய முடியும்.

ஒரு கிலோமீட்டர் என்ன?! நூறு கிலோமீட்டர் தூரம் நடந்துதான் அந்த ஊருக்குப் போக முடியும் என்றாலும் கஷ்டத்தைப் பார்க்காமல் அந்தப் பகமை கிராமத்திற்குப் போய்விட்டு வரலாம். அதற்கான தகுதி அந்த ஊருக்கு இருக்கிறது. திருவருட் பிரகாச வள்ளலார் அணிந்த பாதரட்சைகள் இந்தக் கிராமத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. வடலூர் வள்ளலார் அறக்கொடையிலிருந்து பலமுறை மன்றாடிக் கேட்டுக்கொண்டும், இந்தப் பாதரட்சைகளைத் தரமறுத்து விட்டனராம் கிராம மக்கள். ''இந்த ஊரில் பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள் போல ஒற்றுமையோடு வாழ்கிறோம். இங்கே பசியென்று பிச்சைகேட்டு யாரும் வந்ததில்லை. முப்போகம் நெல்விளைகிற செழிப்பான நிலங்கள். நிலத்தடி நீர் கொஞ்சமும் குறையாத பூமி. குயில்களின் கூவலும்



கிளிகளின் சந்தோஷக் கூச்சலும் மட்டுமே கேட்கும் எங்கள் கிராமத்தில், யாரும் அதண்டு (அதட்டலாக) கூடப் பேச மாட்டார்கள். இத்தனைச் சிறப்புக்கும் வள்ளலாரின் பாதம் இங்கே பள்ளி கொண்டிருப்பதுதான் காரணம். அதை இழக்க எங்களுக்கு எப்படி மனம் வரும்?" என்கிறார் அந்தக் கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவி திருமதி ஜெயந்தி.

இந்தக் கிராமத்திற்கு வள்ளலாரின் பாத ரட்சைகள் எப்படிக் கிடைத்திருக்கும்? "வள்ளலாரின் அணுக்கத் தொண்டர் (நேரடி சீடர்) ச.மு. கந்தசாமிப் பிள்ளை பிறந்து, வளர்ந்தது இந்தக் காரணப்பட்டு கிராமத்தில்தான். 1838ல் செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்த - கந்தசாமிப் பிள்ளை, படித்து முடித்து, புதுவை பாகூர் கொம்யூனில் (பஞ்சாயத்து அலுவலகம்), பிரெஞ்சு ஆட்சியில் அரசு வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, வள்ளலாரின் பெருமைகளைப் பற்றிக் கேள்விப்பட்டு முப்பது வயதில் அவரைச் சந்தித்தார். முதல் சந்திப்பில், கந்தசாமிப்பிள்ளையின் முகத்தைப் பார்த்த வள்ளலார். "உனக்குத் தக்க உத்யோகம் தருவோம்." என்று அருளாசி வழங்க, அரசு வேலையை விட்டுவிட்டு, வள்ளலாரின் பாதங்கள் போகும் பாதையிலேயே சீடராய்ப் பயணப்பட்டார் பிள்ளை. வள்ளலார் சித்தி அடைந்த பிறகு, முப்பத்தோரு ஆண்டுகள் உயிருடன் இருந்து, சமரச சுத்த சன்மார்க்கத்தை பரப்பும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். வாழும் காலத்திலேயே அருட்பாவைத் தொகுத்த கந்தசாமிப் பிள்ளை 1924-ல் தமது சொந்தக் கிராமத்திலேயே வந்து சமாதி அடைந்துவிட்டார்'' என்று சுருக்கமாய்ச் சொல்கிறார், வள்ளலாரின் பாதணிகள் பாதுகாக்கப்படும் கந்தசாமிப் பிள்ளை சமாதி நிலையத்தில் அருட்பாவை ஓதி வரும் எஸ்.பழனிச்சாமி சன்னியாசி,

"வள்ளலார் சுவாமிகள், சிலகாலம் முன்புறம் வளைந்த ஆர்க்காடு சுவடுகள் அணிந்திருந்ததாகவும், பிறகு பாதணிகள் துறந்த காலகட்டத்தில், தாம் வேண்டி கேட்டுக் கொண்டதன் பேரில், இந்தப் பாதரட்சைகளை ஒரு நாள் முழுதும் அணிந்துவிட்டு வள்ளலார் தந்ததாகவும், கந்தசாமிப் பிள்ளை மெய்சிலிர்த்துக் குறிப்பிட்டிருக்கிறார். இவை சந்தன மரத்தாலானவை. கால் பெருவிரல் இடுக்கில், அழுத்திப் பிடிக்கும் பாதரட்சையின் இரும்புக் குமிழ்களின் வடிவம் பதினெட்டாம் நூற்றாண்டைப் பிரதிபலிப்பவை'' என்கிறார் பழனிச்சாமி.

கந்தசாமிப் பிள்ளையின் சமாதி நிலையத்தில் வள்ளலார் உருவப்படங்கள் பொருத்தப்பட்டு, கருவறை மாடத்தோடு இருப்பதால், ஒரு கோவிலாகக் கருதப்பட்டு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. பொது மக்கள் இந்த ஊருக்கு வந்து, வள்ளலாரின் பாதரட்சைகளைத் தரிசித்து, தியானித்துச் செல்ல வேண்டும் என்று காரணப்பட்டு மக்கள் விரும்புகிறார்கள்.

- ஜெய்

படங்கள : **டி.ஜி. சண்முகம்**



வைணவர்கள் நெற்றியில் இட்டுக் கொள்ளும் திருமண் எனப்படும் நாமக்கட்டி மைசூரில் உள்ள மேல்கோட்டைப் பகுதியில் கிடைக்கும் ஒரு வகை மண். இதிலுள்ள அசுத்தங்களை நீக்கிக் கட்டியாகத் தயாரிக்கிறார்கள். இந்த மண்ணைக் கண்டுபிடித்து வைணவர்கள் இட்டுக் கொள்ள வேண்டும் என்று விதித்தவர் ராமானுஜர்.

தகவல் : கே. ராஜேஸ்வரி

விதைக்குள் மரம்

கிருட்டினம்மாவை மறக்க முடியுமா?

எங்கள் வீட்டில் பத்துப் பாத்திரம் தேய்க்க என்று வந்து போனாள் கிருட்டினம்மா. ஒரு நேரம் சும்மாவிருக்க முடியாது அவளால், சதா எதாவது செய்து கொண்டிருக்கப் பிரியம் கொண்டவள்.

என் தாய்க்கு அந்த விவரம் தெரியும். அவள் தினசரி வேலைக்கு என்று வருகிறது அந்தக் காலை ஆறரை மணிக்கு. சற்று வேகவேகமான நடை. அந்த ஆறரை மணிக்கு எதற்கு இந்த வேகம்? அவள் நடையே அப்படி, குணமே அப்படி, என்று பிறகு தெரிந்து கொண்டோம்.


அவள் மனசில் இயங்கிக் கொண்டிருந்தது கடிகாரம். அவள் வரும் நேரத்தை அம்மா அறிவாள். அவளுக்கு ஒத்தாசையாக, பத்துப் பாத்திரங்களை முற்றத்தில் கொண்டு போட்டிருக்கலாம்; அம்மா செய்திருக்க மாட்டாள். கிருட்டினம்மா வந்து நிற்பாள். "இன்னும் பாத்திரம் போடலியாம்மா... எனக்கு நேரமாவுதும்மா" என்பாள் பொறுமையில்லாமல். "கொஞ்சம் இரு கிருட்டினம்மா. கைவேலையா இருக்கேன்ல..."

கிருட்டினம்மா காத்திருக்க மாட்டாள். அவளே பாத்திரங்களை எடுத்து முற்றத்தில் போட்டுக் கொண்டு, விறுவிறுவென்று நிமிடங்களில் தேய்த்துக் கவிழ்த்தி விடுவாள்.

தோசைக்கல்லைக் குப்புறப் போட்டுக் கொண்டு, செங்கல்பொடி தூவி, தண்ணீர் விட்டுக் கொண்டு காலால் சுழற்றி அழுத்தித் தேய்த்து கரி போக்குவாள். அம்மாவால் நினைத்தே பார்க்க முடியாத சுத்தம் அது. வந்த ஜரூரில் வேலையை முடித்துக் கிளம்புவது அவள் சாமர்த்தியம். ஆனால் சம்பளம் கொடுக்கிற வேலைக்காரியை அத்தனை சீக்கிரம் அனுப்பி விடுகிறதா?

காபி தராமல் அம்மா தாமதப்படுத்துவாள் திரும்பவும். "காபி வேணாம்மா. பரவால்ல, நான் கிளம்பறேன்" என்று கிளம்பி விடுவாள் அவள். "இரு இரு" என்று காக்க வைத்தால் கிருட்டினம்மா 'சரி', என்று ஒரு பக்கமாய் மூலைப்பையில் இருக்கிற நொய்யரிசியை தானே எடுத்து வைத்துக் கொண்டு, அரிசி வேறு, குருணை வேறெனப் புடைத்துத் தருவாள். அதற்குத் தனிக்காக எனத் தர வேண்டியதில்லை! அம்மாவின் கணக்குகளே தனி.

சின்னச் சின்னதாய் அவசரச் செலவுக்கு என்று வாங்குவாளே தவிர, சம்பளம் என்கிற நூற்றைம்பது ரூபாயை அவள் பெற்றுக் கொள்ள மாட்டாள். பின்னால் பெரிய செலவுன்னா வாங்கிக்கறேம்மா. உங்ககிட்டியே இருக்கட்டும்" என்று





கொடுத்து வைத்திருந்தாள். அதேபோலவே இன்னும் ஓரிரு வீடுகளிலும் சேர்த்துக் கொண்டிருந்தாள் பணம், என எங்களுக்குத் தெரியும்.

அவள் கணவன் தம்பித்துரை குடிகாரன். குடிக்காமல் அவனால் நிற்கவே முடியாது. குடித்தாலும் நிற்க முடியாது. அது வேறு விஷயம். சதா பணம் பணம், என நச்சரித்துக் கொண்டிருந்தான் அவன்.

எங்கள் வீட்டு வாசல் தொழுவத்தின் பக்கமாய் நின்று, பீடி குடித்தபடி பெரிய பெரிய மூச்சுகளாய் வெளியேற்றியபடி கிருட்டினம்மாவுக்குக் காத்திருப்பான். ஒரு காலத்தில் பால்மாடு கட்டியிருந்த தொழுவம் அது. பால்மாடு பராமரிப்பது போல இம்சை வேறில்லை. நாங்கள் முயன்று, தோற்று, விட்டுவிட்டோம்.

அவள் வெளியே வந்த நிமிடத்தில் அவளது இடுப்பு முடிப்பில் கைவைத்துத் துட்டெடுக்க முயல்வான் தம்பிதுரை.

"காசு இல்லைய்யா" என்று வெட்கம் கலந்த சிரிப்புடன் அவன் கையை உதறுவாள் கிருட்டினம்மா. அதில் அவன் தட்டி அவன் விழுந்துவிடாத கவனம் இருக்கும். அவளால் புருஷனை ஏன் கோபித்துக் கொள்ள முடியவில்லை?

கிருட்டினம்மாவுக்குக் கோபமே வராது. அது அவளது சுபாவம்.

பாவம் கிருட்டினம்மாவுக்குக் குழந்தைகள் இல்லை. குழந்தைகள்

எஸ்.ஷங்கரநாராயணன்

என்றால் அவளுக்கு அலாதிப் பிரியம். அக்காவின் குழந்தை ஊரிலிருந்து வந்த போது, அவள்தான் அதைத் தன் முழங் காலில் குப்புறப் போட்டு, சுடச்சுட வெந்நீர் விட்டுக் குளிப்பாட்டியது. அம்மாவின் வேலைகள் அவை அல்லவா?

கிருட்டினம்மா எங்கள் வீட்டில் அம்மாவின் பாதி வேலைகளைத் தானே விரும்பிச் செய்தாள் என்று தோன்றுகிறது. அவள் வேலையைவிட்டு நின்றபோது அம்மா திகைத்துப் போனாள்...

குடித்துக் குடித்தே தம்பிதுரை குடல் வெந்து செத்துப் போனான்.

அப்பா போயிருந்தார் சாவுக்கு. உறவு, சனம் என்று யாருமே இல்லாத கிருட்டினம்மா. ஊரோதுக்குப் புறமாய்ச் சிறு சந்து. அந்தச் சந்துக்குப் பெயர் கூட இல்லை.

வீட்டுக்குள் இடம் இல்லாமல் தம்பி துரையை வாசலில் கட்டிலில் போட்டு, மாலை சார்த்தி வைத்திருந்தது. அருகில் கிருட்டினம்மா அழுதபடி. இருக்கும்வரை ஓயாத இம்சை தந்த கணவன். என்றாலும் அவள் அவனை வெறுக்கவேயில்லை. அவள் அழுகை கல்லையும் கரைப்பதாய் இருந்தது.

"என்னிய இப்பிடித் தனியா விட்டுட்டுப் போயிட்டியேய்யா..." என்று கணவனைப் பார்த்துப் பார்த்து, நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதாள் கிருட்டினம்மா.

ஆனால் அந்தத் திகைப்பில் இருந்து அவள் எழுந்து கொண்ட வேகம்... அதுதான் கிருட்டினம்மா.

குருவிபோல் சிறுகச் சிறுக பணம் சேர்த்து வைத்திருந்த கிருட்டினம்மா ஒரு பால்மாடு வாங்கினாள். கனத்த மடி சுமந்த எருமை. மாடு கட்ட இடமில்லாத நெருக்கடியான கூட்டுச் சந்து அது.

பால் மாடு பராமரிப்பு அபாரமாய் வேலை வாங்கும். வேளை பார்த்துக் கூளம் பிரித்துப் போட வேண்டும். வீட்டின் இடத்திலேயே தொழுவம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

மாட்டின் சாணம் அள்ளி சிறுநீரைத் தண்ணீர் விட்டுச் சுத்தம் செய்ய வேண்டும். கூளம் நனைந்து விட்டால் மாடு தின்னாது. மாட்டை அடிக்கடிக் குளிப்பாட்டி, உண்ணி கிண்ணி கழுத்தில் சேரா மல் பார்த்துக் கொள்கிற பிரத்யேக கவனம் வேண்டும். பால்மடியைக் கழுவி புண்ணாகாமல் எண்ணெய் தடவி வைத்துக் கொள்ளுதல் பெரும் பாடு.

கிருட்டினம்மாவிடம் இருந்தது கடும் உழைப்பு, பொறுமை. தவிரவும் அந்த மாடுகளை அவள் எத்தனை நேசித்தாள். பால்மாடுகள் தாய்மையின் பேரம்சம் அல்லவா?

மாட்டுக்குக் காலந் தவறாமல் சினையாகும் வழிமுறைகளைக் கைக் கொண்டாள் கிருட்டினம்மா.

தொழுவம் பெரிசாகிவிட்டது இப்போது. முன் வளாகமே பெரிய தொழுவம். அந்தச் சந்தே விசாலமாகிவிட்டது. இரவுகளில்கூட விளக்கெரியும் தொழுவம். ஐந்தாறு மாடுகள். அக்கிரகாரமே அவளைப் பாலுக்கு நம்பியது. அந்தத் தெருவை ஜனங்கள் கிருட்டினம்மா சந்து என்றுதான் அடையாளங் காட்டுகிறார்கள்.

நாங்கள் இன்னும் அதே வீட்டில் இருக்கிறோம். வேலைக்காரிதான் சரிவர அமையவேயில்லை. ●



"சைக்கிள் பஞ்சராயிடுச்சு. ஆபீஸுக்கு எப்படிப் போறதுன்னு தெரியலை!"


"வேலைக்காரிகிட்டே நான் பெர்மிஷன் சொல்லிக்கறேன். அவளுடைய ஸ்கூட்டியை நீங்க எடுத்துட்டுப் போங்க!"

ஞா. ஞானமுத்து



சந்திரசேகருக்குச் சிறந்த துணை நடிகர் விருது பெற்றுத் தந்துள்ள 'நண்பா நண்பா' திரையரங்குக்கு வராமலே போன நல்ல சினிமா. இது குறித்து அப்பட இயக்குனர் ஜெய பாரதி கூறுகிறார்:

கை நழுவிய விருது!



"சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, என் சகோதரர் சொன்ன விஷயம் தான் கதையின் கரு. அதைக் கதையாக்கி, திரைக்கதை ஸ்கிரிப்ட் எழுதி, தேசிய திரைப்பட வர்த்தகக் கழகத்துக்கு நிதி உதவி கோரி விண்ணப்பித்தேன். சென்னையில் உள்ள பிராந்திய போர்டு, என் ஸ்கிரிப்டை ஓ.கே. செய்து, மத்தியக் குழுவின் பரிசிலனைக்கு மும்பைக்கு அனுப்பி வைத்தது.

ஸ்கிரிப்டைச் சமர்ப்பித்து நாலரை வருஷங்கள் கழித்து, தொழில் நுட்பக் காரணங்களின் அடிப்படையில் என் ஸ்கிரிப்ட் நிராகரிக்கப்பட்டுவிட்டது என்று கடிதம் வந்தது. பேப்பரில் எழுதப்பட்ட ஒரு கதையை, எந்தத் தொழில் நுட்பக் காரணம் காட்டி நிராகரித்தார்கள் என்பது அந்த என்.எஃப்.டி.சிக்கே வெளிச்சம்!

படம் எடுக்க நான் கணக்கிட்ட பட்ஜெட் இருபது லட்சம் ரூபாய்தான். அந்தத் தொகையை 'குடிசை' படத்தை நான் எடுத்தபோது செய்ததுபோல, தமிழில் நல்ல சினிமா எடுக்கப்பட வேண்டும் என்று நினைக்கும் ஆர்வலர்களிடமிருந்து நன்கொடை திரட்டி எடுக்கலாமா என்று நினைத்துக் கொண்டிருந்தேன், நடிகர் எஸ்.வி.சேகரின் தம்பி ராஜா வைத்தியநாதன், படத்தைத் தாமே முதலீடு செய்து தயாரிக்க முன் வந்தார்.

நடிகர் சந்திரசேகர், சார்லி இருவருக்கும் சப்ஜெக்ட் மிகவும் பிடித்துப்போய், பணமே வாங்கிக் கொள்ளாமல் நடிக்க முன் வந்தார்கள். மிக நுணுக்கமாய்த் திட்டமிட்டு, பதினோரு கால்ஷீட் மட்டுமே பயன்படுத்தி, பதினாறு எம்.எம்.பிலிமில் படமெடுத்து, அதை முப்பத்தைந்து எம்.எம்.முக்கு மாற்றினோம். நிச்சயம் தேசிய அளவில் அல்லது, குறைந்த பட்சம் மாநில அளவிலாவது சிறந்த படத்துக்கான விருது கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் டெல்லிக்கு அனுப்பி வைத்தோம்.

மொத்தம் வந்த நூற்றிநான்கு படங்களிலிருந்து, சிறந்த படத்துக்கென்று இறுதியில் தேர்ந்தெடுக்கப் பட்டவை நாலே நாலு படங்கள்தான். அதில் 'நண்பா நண்பா'வும் ஒன்று. மற்ற மூன்று படங்களில் ஒன்றுக்கு தேசிய அளவிலும், இரண்டுக்கு மாநில அளவிலும் சிறந்த படங்களுக்கான விருதுகள் கிடைத்துவிட்டன. சிறந்த துணை நடிகருக்கான விருது மட்டுமே 'நண்பா நண்பா' படத்துக்குத் தரப்பட்ட தகவல் அறிந்த போது வருத்தமாக இருந்தது'' என்றார் ஜெய பாரதி.

— கௌதம்ராம்

“ஏழாவது படிக்கும்போது, ராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றி நானே ஒரு பாட்டு இயற்றி, பாடினேன். ஆனால் வெளியே சொல்ல பயமாய் இருந்தது. சுவாமியைப் பற்றி எல்லாம் பாட்டு எழுதலாமா, கூடாதா என்ற பயம்தான். ‘சுவாமி மேல யார் வேணுமானாலும் பாட்டு எழுதலாம்’ என்றார் என் தந்தை. இது என்னைச் சிந்திக்க வைத்தது. பிறகு பாபநாசம் சிவன் கீர்த்தனைகள் எல்லாம் கேட்க ஆரம்பித்தேன். என் அம்மாவும் பாடுவாள்!” என்கிறார் ரமேஷ் விநாயகம். ‘யூனிவர்சிடி’க்குப் பிறகு ‘நளதமயந்தி’யிலும் அவர் இசையமைத்த பாடல்கள் ரசிகர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கின்றன.



கல்லூரியில் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைடியின் செயலராக இருந்தபோது, கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகளிளெல்லாம் கலந்து கொண்டு, நிறையப் பரிசுகள் வாங்கியிருக்கிறார் ரமேஷ். “எம்ஜி.ஆரிடம் கூட ஒரு தடவை பரிசு வாங்கினேன்!”

சற்றே நிறுத்திவிட்டு, “எனக்கு நானி என்றொரு நண்பன் இருந்தான். ,வெகு அருமையாகப் பாடல்கள் எழுதிக் கொண்டிருந்தான். அவன் இப்போது இல்லை. இசையமைப்பது எங்களுக்கு ஒரு ஜாலியான வேலையாக இருந்தது. ஒரு கிரிக்கெட்டராக வர வேண்டும் என்ற ஆசையும் எனக்கிருந்தது. ஆனால் இசையில் நம்பிக்கை ஊட்டியவர்கள் என் நண்பர்கள்தாம்!” என்றார்.

சினிமா இசை முழுக்க முழுக்கக் கர்நாடக இசையை அடிப்படையாகக் கொள்ளாவிட்டாலும், ராகம் தெரிந்து இசை அமைப்பதுதான் இவருக்கு ஆசையாக இருந்தது.

“இரண்டு வருடங்கள் ருக்மிணி ரமணியிடம் (பாபனாசம் சிவன் மகள்) கர்நாடக இசை கற்றுக் கொண்டேன். நம் இந்திய இசையானராக வழி முறை, உலகில் வேறு எந்த இசை முறையிலும் காணக் கிடைக்காதது!”

ரமேஷின் வீட்டில் அவர் சினிமாத் துறைக்குப் போவதில் எதிர்ப்பு இருந்தது. ‘நீ கெட்டுப் போவேன்னு சொல்லலே. ஆனா ஜாக்கிரதையா இரு!’ என்றாராம் அப்பா.

ஆரம்பம் முதலே கிரேஸி மோகனின் எல்லா டீவி. நாடகங்களுக்கும், டைட்டில் சாங் ரமேஷ் விநாயகம்தான் அமைத்து வந்திருக்கிறார். பிறகு சென்னை ஃபிலிம் இன்ஸ்டிட்யூட் மாணவ - இயக்குனர்களின் படங்களுக்கு இசையமைத்த அனுபவம் உண்டு. உண்ணிகிருஷ்ணன் அப்போது ரமேஷுக்காகப் பாடிய பாடல் ‘வான் மேகமே’.

“முதல் ஆல்பம் எப்போது வெளியிட்டீர்கள்?”

“பிரதித்வனி ஆல்பம் வெளியானது 1986ல். எல்லாப் பாட்டுக்களையும் எஸ்.பி.பி.தான் பாடினார். நானே அந்தப் பாடல்களை எல்லாம் எழுதினேன். பிறகு 1989ல் முதல் தெலுங்குப்படம். அப்போதுதான் எஸ்.பி.பி. என்னிடம், ‘ரமேஷ், உனக்கு வெஸ்டர்ன் மியூசிக் நாலட்ஜும் இருந்தால் நல்லது,’ என்றார். அவர் சொன்னதை வேத வாக்காக எடுத்துக் கொண்டேன். ஜேக்கப் ஜான்தான் மேற்கத்திய இசைக்கு என் குரு. பியானோ சொல்லிக் கொடுத்தார். தியரியும் கற்றுக் கொண்டதால், நானே பல இடங்களில்



தொட்டுத் தொட்டு ஓடிவிடும்!

பியானோ ஆசிரியராகவும் இருந்திருக்கிறேன்!''

''தெலுங்குப் பட வாய்ப்புக் கிடைத்தது எப்படி?''

''மௌலி சார்தான் என்னைத் தெலுங்குப் படங்களுக்கு அறிமுகப்படுத்தினார். 'பஹ்லா பச்சீஸ்' (முதல் இருபத்தைந்து) படத்தின் பெயர். எனக்கு அப்போது இருபத்தியாறு வயது. ராமோஜி ராவ் தயாரிப்பாளர். ஆறு பாடல்களுக்கு இசையமைத் தேன். அடுத்தது 'ஆன்ட்டி'. அதுவும் தெலுங்குதான். ஆனாலும் வாய்ப்புகள் தொடர்ந்து வரவில்லை. இத்தனைக்கும் பாட்டுக்கள் எல்லாமே ஹிட். நான் சோர்ந்து போகவில்லை. இசையில்தான் என் வாழ்க்கை இருக்கிறது என்று உறுதியாக இருந்தேன். ''சார், எனக்கு ஒரு சான்ஸ் கொடுத்துப் பாருங்க!'' என்று ஒவ்வொரு டைரக்டரிடமும் போய்க் கேட்டுக் கொண்டிருந்தேன். ஏமாற்றம், டிப்ரஷன் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டே முயன்றேன். தோற்றுப் போனால் கூட, முயற்சி பண்ணி விட்டுத் தோற்றுப் போவோமே என்று தீர்மானமாக இருந்தேன். யாரிடமும் போய் குறைப்பட்டுக் கொள்ளவும் இல்லை. நான் பார்க்காத இயக்குனர்கள் கிடையாது!''

பிறகுதான் ரமேஷ் விநாயகத்துக்கு டைரக்டர் வசந்தின் நட்பு கிடைத்தது. ''இதுவரை என் பாட்டை யாரும் இருந்து கேட்டதில்லை. கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் போல நான் போட்ட இசையைக் கேட்டார். ஜிவி. பிலிம்ஸ் படத்துக்கு ஒரு பாட்டைக் கொடுத்தார். இருபத்தைந்து ட்யூன்களுக்கு மேல் போட்டுக் காட்டினேன். கடைசியில், ''தொட்டுத் தொட்டு...'' அவருக்குப் பிடித்திருந்தது. பிரபலமும் ஆயிற்று!''


அடுத்து வந்தது 'யூனிவர்சிடி'. வைரமுத்து, வாலி போன்றவர்களுடன் வேலை செய்யும்போது உற்சாகமாக இருந்தது. ராஜ்கமலின் 'நளதமயந்தி'க்கு கமல் சார் என்னைக் கூப்பிட்டதும் சந்தோஷம் நிறைய என்கரேஜ் பண்ணினார். நல்ல மியூசிக் சென்ஸ். நிறைய ஐடியாக்கள் கொடுத்தார். 'என்ன இது, என்ன இது, என்னைக் கொல்வது' (பாடல் : வாலி) பிரபலமாகி, டாப்-டூவில் இருப்பதும் எனக்கு த்ரில்லிங் அனுபவம்.

ஒரு பாடல் பிரபலமாகி, மூன்று - நான்கு மாதங்கள் ரசிகர்களைத் தொட்டுவிட்டு ஓடிவிடும். அதற்குள் அடுத்த படம் அடுத்த பாடல்... இதுதான் திரையிசை...''

சந்திப்பு : **சாருகேசி**

படங்கள் : **வெங்கடேஷ்**

சிரிக்க வைக்கிறவங்க சிரிச்ச கதை!



எல்லோரையும் சிரிக்க வைக்கிற ஜோக் எழுத்தாளர்கள், தங்கள் வாழ்வில் நடந்த 'காமெடி' சம்பவத்தைச் சொல்கிறார்கள்.




• எஸ். பொன்னுசாமி

உடுமலை எஸ். பொன்னுசாமி

உடுமலையில் இருந்து ஓர் அவசரக் காரியமாக கோவைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த போது ஒருவர் வேகமாக வந்தார். இலேசாக தலையைச் சொறிந்தார். "கொஞ்சம் பேனா கொடுங்க. அட்ரஸ் எழுதிட்டுத் தருகிறேன்." என்று ஒரு இன்லேண்ட் கவரை எடுத்தார்.

நான் முன் ஜாக்கிரதையாக பேனாவின் மூடியைக் கழற்றி வைத்துக் கொண்டு பேனாவைக் கொடுத்தேன். அவர் அருகில் இருந்த தபால் பெட்டியின் மேலேயே கவரை வைத்து, அவசர அவசரமாக விலாசத்தை எழுதினார். அவசரகதியில் விலாசத்தை எழுதி முடித்தவுடன் 'டக்'கென்று பேனாவைத் தபால் பெட்டிக்குள் போட்டுவிட்டு, அந்தத் தபாலை என்னிடம் நீட்டியபடியே ''தேங்க்ஸ்' என்றார்.

பிறகு அவரே தன் தவறை உணர்ந்து, "ரொம்ப சாரி... உங்க பேனாவை தபால் பெட்டிக்குள் போட்டுட்டேன்...!" என்றார் பயத்துடன். "சரி... போகட்டும்" என்று சொல்லிவிட்டு அந்தத் தபாலையும் பெட்டிக்குள் போடச் சொன்னதுடன், பெட்டிக்குள் இருக்கும் பேனாவை எடுக்கும் தபால் ஊழியர் மூடியில்லாமல் திண்டாட வேண்டாம், என்று என் கையிலிருந்த பேனா மூடியையும் தபால் பெட்டிக்குள்ளேயே போட்டுவிட்டு வந்தேன்.



• செ.ஆசைத்தம்பி


தாரை செ.ஆசைத்தம்பி

நான் மிக நன்றாகப் பாட்டுப் பாடுவேன் (குளியலறையில் மட்டும்). ஒருநாள் காலை 'நான் உன்னை அழைக்கவில்லை... என் உயிரை அழைக்கிறேன்' எனப் பாடிக் கொண்டிருந்தேன்.

திடீரென பாத்ரூம் கதவை என் மனைவி தட்டினாள். ''என்னம்மா?'' என்றேன். "சீக்கிரம் குளிச்சிட்டு வாங்க... உங்களப் பாக்க பவளத்தானூர்ல இருந்து நாலு பேர் வந்திருக்காங்க!" என்றாள். "அப்படியா? உள்ளே வந்து உட்காரச் சொல்லு. வந்திடறேன்!" என்றவுடன், "சொன்னேங்க. அவங்க வாலை ஆட்டிக்கிட்டு நின்னுக்கிட்டே இருக்காங்க!" என்றாள்.

நான் அழகாகப் பாடுவதைப் பொறுத்துக் கொள்ளாத என் மனைவி அதை நிறுத்தச் சொல்லி, சூசகமாக, வாலை ஆட்டிக் கொண்டு கழுதை நிற்பதாகக் கூறியது அப்போதுதான் எனக்குப் புரிந்தது. 'பவளத்தானூரிலிருந்து வந்திருக்காங்க'ன்னு சொன்னப்பவே நான் புரிஞ்சிட்டிருக்கணும். ஏனென்றால் எங்கள் ஊருக்கு அருகிலிருக்கும் பவளத்தானூரில் கழுதைகள் அதிகம்.

இப்போதுகூட நான் பாட ஆரம்பித்தால் என் மனைவி, "ஏங்க பவளத்தானூர்ல இருந்து.." எனக் கூறி என்னை கப்சிப்பாக்கிவிடுவாள்!





* த. இந்திரஜித்




த. இந்திரஜித்

வீட்டில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தேன். அருகில் ஏழாம் வகுப்பு படிக்கும் எனது அக்கா மகனும். திரையில் தோன்றும் நடிக, நடிகைகளைப் பற்றி அவனிடம் தான் கேட்டுத் தெரிந்து கொள்வேன். அவனுக்கு நடிகர், நடிகை, பாடல் அத்தனையும் அத்துபடி!

புதிய படத்திலிருந்து பாடல் ஒன்று ஒளி பரப்பினார்கள். அதில் நடித்த நடிகர் யார் என்று அறியும் பொருட்டு, டி.வியோடு ஒன்றிப் போயிருந்த அவனிடம் "டேய்... அது யாருடா



* ஜே. ஏ.பாரி



அது யாருடா...?" என்று கேட்டேன்.

அடுத்த கணம் எழுந்து வெளியே ஓடினான். திரும்பி வந்து "யாருமில்லை மாமா. ஒருத்தரையும் காணமே?" என்றானே பார்க்கலாம்.

பாக்யப்ரியன் ஜே. ஏ.பாரி

நண்பரின் புதுவீடு கிரஹப்பிரவேசம் அடுத்த நாள் நடக்க இருக்க, முதல் நாளே சமையல் செய்ய ஒருவரை ஏற்பாடு செய்திருக்கிறார். உறவினர்களுக்கு இரவு உணவு சமைத்தபின், இரவில் சாப்பாடு வேண்டாமென்றும், அந்தச் சமையல்காரர் தனக்கு மட்டும் உப்புமா தயாரிக்க ஆரம்பித்திருக்கிறார். அந்த நேரம் பார்த்து மின்சாரம் போய்விட்டது. ஒருவழியாக உப்புமா கிளறி, பசி அவசரத்தில் அனைத்தையும் சாப்பிட்ட பின்தான் அவருக்கே புரிந்திருக்கிறது. உப்புமா செய்ய விளக்கெண்ணெயை ஊற்றியிருந்தது. வயிற்றைப் பிடித்தபடி 'இதோ வந்திடறேன்' என்று போனவர் போனவர்தான். என்ன ஆனாரென்றே தெரியவில்லை. காலை கிரஹப்பிரவேசத்திற்கு வேறு சமையல்காரரைத் தேடி ஓடியதை என் நண்பர் விவரித்தபோது ஆரம்பித்த சிரிப்பு இன்று நினைத்தாலும் மறக்க முடியவில்லை.

சு. கணேஷ்குமார்

சாரதி என்றொரு முதியவர். எப்போதும் தனது நிழல் போலவே ஓட்டை சைக்கிளை வைத்திருப்பார். எங்கே சென்றாலும் தள்ளிக் கொண்டே தான் செல்வார். அவர் அதை ஓட்டிக் கொண்டு சென்றதை நாங்கள் பார்த்ததே இல்லை. அன்றும் அப்படித்தான் தனது ஓட்டை சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்தார். நாங்கள் 'சைக்கிளை ஓட்டத் தெரியாத சாரதி மாமா வர்றாருடோய்...!" எனக் கோரஸாகக் குரல் எழுப்பினோம்.

இப்படி நாங்கள் கிண்டலடிப்பதும், அவர் திரும்பிப் பார்த்து உக்கிரமாய் முறைத்துவிட்டுச் செல்வதும் வழக்கமானவை. அன்று அவருக்கு ரோஷம் வந்து விட்டது. சட்டென சைக்கிளில் தாவி ஏறியவர் நான்கடி தூரம்தான் ஓட்டியிருப்பார். அந்தப் பழைய சைக்கிள், பாவம், கடகடவென சப்தத்துடன் தன் பாகங்களைப் பொல பொலவென உதிர்ந்துவிட்டது. அவர் விழுந்து எழுந்து தலை மேலிருந்த துண்டை விரித்து உதிர்ந்த பாகங்களைச் சேகரிக்க, நாங்கள் சிரிப்பை அடக்க முடியாமல் கொல்லென சிரித்துவிட்டோம்.

அன்று விடலைத்தனமாகச் சிரித்தாலும், இன்று அது எவ்வளவு தவறு என்பது விளங்குகிறது.

சு. கணேஷ்குமார்



தொகுத்தவர் :
தாரமங்கலம்
ஆ. அருண்ராஜ்



காட்சி : 54

மாலை நேரம் / வீடு

பாத்திரங்கள்: கீதா, அம்சா.

அம்சா, அலுவலகத்திலிருந்து ஸ்கூட்டரில் வந்து இறங்குகிறாள். வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு, படி ஏறி, தன் வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே போகிறாள். முகம் கழுவிக் கொள்கிறாள். காபி போட்டுக் கொண்டு சோபாவில் வந்து உட்கார்ந்து, காபி சாப்பிடுகிறாள். பக்கத்திலிருந்த போனை எடுத்து எண்ணைச் சுழற்றுகிறாள்.


கீதாவின் வீட்டுத் தொலைபேசி ஒலிக்கிறது. கீதா, படித்துக் கொண்டு இருந்தவள், தொலைபேசியை எடுக்கிறாள். *(தொலைபேசியில்...)*

அம்சா: கீதா. நான் அம்சா பேசறேன்.

கீதா: *(கிண்டலுடன்)* அறுபத்துநாலு அம்சா மேடமா?

அம்சா: அது என்னடி அறுபத்து நாலு?

கீதா: ஆய கலைகள் அறுபத்து நான்கும் அத்துபடி அம்சாம்மான்னு அர்த்தம்.



ஜீவநதி

பிரபஞ்சன்

அம்சா: என்னடி கிண்டலா? இருக்கட்டும். என்ன பண்றே?

கீதா: போது போகலை, படிச்சதையே படிக்கிறேன்.

அம்சா: வாயேன், வீட்டுலதான் இருக்கேன். காபி சாப்பிடு, அப்புறம், காலாற பார்க்கிலே நடக்கலாம்.

கீதா: வர்றேன்.

(அம்சா தொலைபேசியை வைத்து விட்டு எழுகிறாள்...)

காட்சி : 55

பூங்கா, சிமெண்ட் பெஞ்ச்சில் அமர்ந் திருக்கிறார்கள் இருவரும். பழங் காலத்து விளக்குக் கம்பத்து விளக்கு அழுது வடிகிறது.

அம்சா: இப்படியே எத்தனை நாளைக்கு இருப்பே...?

கீதா: உயிரும் உடம்பும் அனுமதிக்கிற வரைக்கும், மாமி.


அம்சா: சூ. விளையாட்டு வேணாம். ரெண்டு இடத்துல வேலைக்குப் போனே. வாரக் கணக்குல வெளியே வந்துட்டே. வந்தது சரி. பிடிக்கலைன்னா, எதையும் விட்டு வெளியேற வேண்டியதுதான். ஆனா, ஏதானும் ஒரு வேலையைத் தேடிக்க வேணாமோ?

கீதா: என்ன அவசரம், மாமி. தேடிக்குவோம்.

அம்சா: இல்லை. அவசரம்தான். உனக்கு உன் மேல மரியாதை இருக்கணும்னா, வேலை அவசியம். இப்போ, நண்பர்களோட பேசறது, கடிகாரத்துக்குக் கட்டுப் படாமே, காலத்தோட சண்டை போட்டுக் கிட்டுத் திரியறது, எல்லாம் சந்தோஷம் தரும். எத்தனைக் காலம்? கொஞ்ச காலம், தேவி. நண்பர்கள் எல்லாம், ஏதேதோ காரணத்தில் பிரிஞ்சுடுவாங்க. காலம் பிரிச்சுடும். நீ மட்டும் தனியா நிப்பே. உடம்பில வலு குறைஞ்சுடும். மனசிலயும். வேலைக்குப் போற மனநிலை இல்லாமல் போயிடும். ஒரு வகையான விரக்தி மனசுக்குள்ள புகுந்திடும். ரொம்பக் கஷ்டமா இருக்கும் கீதா.

கீதா: *(கீதாவுக்கும் இந்த உண்மை உறைக்கிறது. தடுமாற்றத்துடன் சொல்கிறாள்)*

நான் முயற்சி பண்ணாமே இல்லை, மாமி.



19

அம்சா: உன்னைக் குறை சொல்றதா நினைக்காதே, சீதா. என் பெண்ணாட்டம் சொல்றேன்.

(அவர்கள் நடக்கிறார்கள். நிலவும் உடன் வருகிறது.)

எனக்கு என்ன வயசு இருக்கும், சீதா?

சீதா: இருபத்திரெண்டு.

அம்சா: அடி விழும். ரெண்டு அதிகப் படுத்திட்டே... *(இருவரும் சிரிக்கிறார்கள்.)*

வயசு அம்பத்தாறு. நிஜமான வயசு. எங்க பெற்றோர் செஞ்ச புண்ணியம், உடம்பு நல்லா இருக்கு. உனக்குத் தான் தெரியுமே. எனக்கு ஆபீஸ் போதும் போதும்னு ஆயிடுத்து. எங்க சிங்ஜி, என்னை விடமாட்டான். ஆனாலும், எப்போதான், நான் நானா இருக்கிறதடி? நாங்க ரெண்டு பேர், கிழமும் நானும். ரெண்டு பேருக்கும் சேர்த்தியே வெள்ளமா பென்ஷன் வருது. போறுமே. என்ன, ரெண்டு புடைவையா கட்டிக்க முடியும், பணம் அதிகம் இருந்துட்டா? சரி... நாளைக்கு என் கூட வர்றே.

சீதா: எங்கே, மாமி.

அம்சா: மணவறைக்கு. தழையத் தழையச் சீவி, பட்டு கட்டிக்கிட்டு என்கூட வர்றே. கேக்கிறியா.

சீதா: ஆகட்டும் மாமி. உங்களுக்குத் தோழியா...

அம்சா: கிழம் கேட்டுச்சு, அட்டாக்கே வந்துடும்... ஆபீசுக்கு வா... காலைலே என் கூடவே வந்துடு. அப்புறம், சீதா, உன் சொந்த விஷயத்துல தலையிடறதா நினைக்காதே. அதப் பற்றி யோசிச்சியா?

சீதா: எதைப் பத்தி மாமி?

அம்சா: அதாண்டி. கல்யாணத்தைப் பத்திதான்.

சீதா: இப்போ, வேணாம்னு தோணுது. நானே, இன்னும் ஸ்திரமாகலை. இன்னொருத்தரோட எப்படி இணையறது. மாமி?

அம்சா: சரி. சந்தர்ப்பம், எப்பவோ ஒரு முறைதான் வருண்டி. அப்போ, கதவைத் திறந்து வக்கலைன்னா, அது வேற எங்கயோ போயிடும்.

சீதா: சந்தர்ப்பம்னு எதையாவது குறிப்பா சொல்றீங்களோன்னு தோணுது. அதைச் சந்தர்ப்பமா நானும் நினைக்கலை, மாமி. அங்கயும் அப்படித்தான். அது ஒரு நிகழ்ச்சி. சந்திக்க நேர்ந்தது. பிடிச்சது. சினேகம் தொடர்ந்தது. எல்லா நதியும் கடல்லே சேரணும்னு விதியா என்ன? காதல்லையும் சேர வேண்டியதில்லை. இது சந்தோஷமா இருக்கு. அது போதுமே மாமி.

> ''எங்க மானேஜருக்குக் கொஞ்சம் கூட சப்தமே பிடிக்காது; ரொம்ப கொய்ட்டா இருந்துருவோம்!''
>
> ''நிஜமாவா... அவ்வளவு ஒத்துழைப்பா!''
>
> ''ஆமாம்! ஆபீஸ்ல ஒரு குண்டூசி கீழே விழுந்தா கூட உடனே முழிச்சிக்கிட்டு இழுவெடுப்பாரே!''
>
> — வீ. சாரதி டேச்சு

அம்சா: அது....சரி....

(இருவரும், அமைதியாகிறார்கள்... கீழே சிந்திக்கிடக்கும் பூக்களைத் தேர்ந்தெடுத்து சிலவற்றை எடுக்கிறாள் சீதா.)

சீதா: நான் சந்தோஷமாகத்தான் இருக்கேன் மாமி.

அம்சா: யார் இல்லேங்கறா? அது நம்பிக்கைதானே? எதையுமே கூட்டிக்கிறது தானே மனித இயல்பு? சந்தோஷத்தையும் கூட்டிக்கலாம் என்கிறதுக்குத்தான் கல்யாணம் எல்லாம்.

சீதா: கல்யாணம், சந்தோஷத்தைக் கூட்டுதா?

அம்சா: சில பேருக்கு. நான் 'ஸ்போர்ட்சில' பெரிய ஆளா வருவேன்னு நினைச்சேன். உஷா மாதிரி இந்திய அளவில பெரிசா வந்திருப்பேன். கல்யாணம் பண்ணிக்கிட்டேன். சூப்பரா, வத்தக் குழம்பு வக்கிறான்னு பேர் கிடைச்சுது. கல்யாணம், லாட்டரிச் சீட்டு விழுற மாதிரிதான். லட்சத்துல ஒருத்தருக்குச் சந்தோஷம் கிடைக்குது.

சீதா: அந்த ஒருத்தியா நான் இருக்க முடியும்னு நம்பறீங்களா, மாமி.

அம்சா: *(யோசித்துவிட்டு)* யோசிக்க வேண்டித்தான் இருக்கு... ஆனா, பயந்துகிட்டுக் கல்யாணம் பண்ணிக்காமே இருக்கிறது சரியா? நம் மூத்த தலைமுறை சிந்திக்கலையே இப்படி? நம்ம அம்மாவும் அப்பாவும் வாழ்ந்தாங்களே! நல்லாத்தானே வாழ்ந்தாங்க. என்ன பிரச்னை?

சீதா: நம்ம அம்மாவும் அப்பாவும் சம்சாரம் பண்ணாங்க. வாழ்ந்தாங்கன்னு சொல்ல முடியுமா? நமக்கு இப்படியெல்லாம் குறைந்த பட்சம் பேசச் சுதந்திரம் கிடைச்சிருக்கு மாமி. அவங்க காலத்துல, இப்படி யோசிக்கக் கூட முடியாதே. தெய்வக் குத்தம்னு நினைச்சாங்க. இப்ப,



என் துணையைத் தேர்ந்தெடுக்கிறதுக்கு எனக்குச் சுதந்திரம் இருக்கே. அந்த வகையில, நான் அதிர்ஷ்டக்காரிதானே, மாமி?

அம்சா: உன் அப்பா, என்ன சொல்றாரு?

கீதா: அவர், என் அதிர்ஷ்டம் மாமி. இல்லேன்னா, நான் இப்படிச் சௌக்யமா இருக்க முடியாது...

காட்சி : 56

காலம்: பகல் / அலுவலகம்

பாத்திரங்கள்: கீதா, அம்சா, அலுவலக அதிகாரி, கண்ணன்.

காலை வேலைகளில் அலுவலகம் ஆழ்ந்திருக்கிறது. அம்சாவும், கீதாவும் அலுவலகத்துக்குள் நுழைகிறார்கள். கண்ணன் எதிர்ப்படுகிறான்.

கண்ணன்: என்ன கீதா, எங்க இப்படி?

கீதா: மாமி வரச்சொன்னாங்க. கையோடு அழைச்சுக்கிட்டு வந்துட்டாங்க.

அம்சா: எல்லாம் நன்மைக்கே. நாங்க சிங்கைப் பார்த்துட்டு வந்துடறோம்... இரு...

கண்ணனைப் பார்த்துத் தலையசைத்துவிட்டு, நகர்கிறாள் கீதா. சிங்கின் அறைக்குள் நுழைகிறாள். அம்சாவும் நுழைகிறாள். சிங், தமிழ் பேசுபவராக வைத்துக் கொள்ளலாம். நீண்ட காலமாகத் தமிழ்நாட்டிலே இருப்பவர். சில தடங்கலோடு பேசுபவராக இருக்கலாம்.

சிங், தலை நிமிர்கிறார்.

சிங்: ஜீ... வாங்கோ... *(அமர்கிறார்கள்)*

அம்சா: இது கீதா. நேற்று பேசிக்கிட்டு இருந்தோமே... இந்தப் பெண்தான் அது. ரொம்பப் புத்திசாலி. தர்மத்துக்கு விரோதமா எதையும் செய்ய மாட்டா. சண்டை போடுவா... மத்தபடி ரொம்பக் கெட்டிக்காரி.

சிங்: ஓ.கே. அம்சாஜி. எல்லாம் சரி. கீதா, இருக்கட்டும். அதனால, நீங்க போகணும்கிற அவசியம் என்ன? பழுத்த அனுபவம் உள்ள அம்மா நீங்க. எனக்கு நிறைய லாபம் சம்பாதிக்கக் கொடுத்தவர் நீங்க. உங்களை இழக்க எனக்கு மனசு இல்லை.

(கீதா புரியாமல் அம்சாவையும், சிங்கையும் பார்க்கிறாள்.)

கீதா: போறீங்களா? வேலையை விட்டா?

அம்சா: எனக்குச் சேவகம் போதும்னு தோணிப்போச்சு. நான் எனக்குன்னு எப்பத்தான் வாழறது?

சிங்: வேலையை விட்டுட்டு என்ன பண்ணப் போறீங்க?

அம்சா: பார்க்கப் போறேன். காலை நேரத்தோடு சாவகாசமாகக் காபி சாப்பிட்டுக்கிட்டு அனுபவிக்கப் போறேன். என்னைத் தேடிச் சிட்டுக்குருவிங்க வருது. அதுங்களோட பேசிக்கிட்டு இருக்கப் போறேன். பைத்தியக்காரத்தனமா இருக்கில்லையா? அப்படிப் பைத்தியமா குறை வாழ்க்கையையும் வாழப் போறேன். *(சிரிக்கிறாள்)*

கீதா: எனக்காக வேலையை விடறீங்களா, மாமி?

அம்சா: இல்லை. இங்க ஏராளமா வேலை இருக்கடி. அதுக்காக இல்லை. எனக்குத் தோணிடுச்சு.

சிங்: எனக்குச் சம்மதம் இல்லை. உங்களை மாதிரிப் பட்டவங்களை இழக்கிறதுக்கு எந்தக் கம்பெனிக்கும் சம்மதமா இருக்காது. நீங்க உங்க முடிவை மறுபரிசிலனை செய்யவே முடியாதா, ஜி?

அம்சா: இல்லை, சிங்ஜி. நான் சண்டை போட்டுக்கிட்டு போகலை, ஜி. ரொம்ப நாளா, ஒரு ஏக்கம்; என் மனசுக்குள்ள, இதைச் செயல்படுத்தணும்னு ஒரு புள்ளியை எதிர்பார்த்துக்கிட்டு இருந்தேன். இப்போ, அந்தப் புள்ளி தெரிஞ்சுடுத்து.

கீதா: எனக்கு என்னமோ கஷ்டமா இருக்கு.

அம்சா: சும்மா இரு. ஜி. கீதாவை இன்னும் நீங்க விசாரிக்கலையே.

சிங்: தேவையில்லை. 'ரெகமண்ட்' பண்ணியது நீங்க. சரியான நபரைத்தான் நீங்க சொல்லுவீங்க. உங்க 'கேன்டிடேட்டை' விசாரிக்க முடியாது. கூடாது. ஒரு வேண்டுகோள். நீங்க ஒப்புக் கொண்டேதீரணும்...

அம்சா: சொல்லுங்க.

சிங்: ஒரு மூணு மாசம், எங்களோட இருங்கோ. புது ஆபீசர்களுக்கு வேலையைக் கத்துக்குடுங்கோ. அவர்கள் தயாரான பிறகு நீங்க போகலாம்.

அம்சா: *(கீதாவைப் பார்க்கிறாள்... அவள்*

தலையசைத்து ஒப்புக் கொள்ளச் சொல்கிறான். அவன் கண்களில் வேண்டுகோள் தெரிகிறது.)

சரி ஜி. இத்தனைக் காலம் என்னைக் காப்பாற்றியவர்கள் நீங்கள். ரொம்பவும் கிராக்கி காட்டி உங்களை அலைக்கழிக்கக் கூடாது. ஒப்புக்கறேன்.

சிங்: ஓ... ஃபென்டாஸ்டிக்...

(என்று எழுந்து அம்சாவின் கையைக் குலுக்குகிறான்...) சீதாவைப் பார்த்து.

என்ன சாப்பிடறீங்க, உம்...?

சீதா: சீதா.

சிங்: நான் உங்களை என்னன்னு கூப்பிடணும்? மிஸ் அல்லது மிஸஸ் அல்லது...?

சீதா: நான் சீதா மட்டும்தான். சீதான்னு கூப்பிடலாம்.

சிங்: நைஸ்... என்ன சாப்பிடறீங்க, சீதா? காபி அல்லது குளிர்பானங்கள்?

சீதா: காபி.

அம்சா: எனக்கும் காபி.

(போனில் காபிக்கு ஆர்டர் கொடுக்கிறார்.)

சிங்: அம்சா, அந்த பிரைட் கம்பெனி வேலையைச் சீக்கிரம் முடிக்க வேண்டி இருக்கு. அந்த புரோகிராமை எடுத்துக்கிட்டு நான் ஸ்டேட்ஸ் போகணும். அந்த மல்டி நேஷனலுக்கு, நாம் தான் இந்தியப் பிரதிநிதியாகப் போறோம். அவங்க சமாச்சாரங்களுக்கு முன்னுரிமை கொடுங்க. பையன்களை முடுக்கி விடணும். சீதாவை எல்லா டிபார்ட்மென்ட்டிலும், சில சில நாள் உக்கார வையுங்க. எல்லாத்தையும் அவங்க தெரிஞ்சுக்கிடட்டும்.. வெல்?

(அம்சா சீதாவைப் பார்க்கிறாள். காபி வருகிறது. அருந்துகிறார்கள்.)

சீதா: ரைட் சார்.

காட்சி : 57

(மேல் காட்சியின் தொடர்ச்சியாக இதைக் கொள்ள வேண்டும்.)

காலம், சூழல், அதே.

பாத்திரங்கள் அவர்களே.

(சீதா, அறையை விட்டு வெளி வந்ததும் கண்ணனிடம்)

சீதா: தெரியுமா, கண்ணன்? மாமி, வேலையை விட்டுட்டாங்க. மூணு மாசம், நமக்காக இருக்காங்களாம்.

கண்ணன்: கேள்விப்பட்டேன். ஆபீஸ்ல அது தான் பேச்சு. ஏன் மாமி?

அம்சா: கழுத்தைப் பிடிச்சு, 'போடி கிழம்'னு தள்ளற வரைக்கும் உக்காந்திருக்கணும் கிறியா? அதை விடடி. வேலை கிடைச்சாச்சு. என்னோட பெரிய கவலை. தீர்ந்துச்சி. சரி. எப்போ எங்களுக்கு பார்ட்டி தரப் போறே?

சீதா: இன்னிக்கே... சரியா.

(அம்சாவும், கண்ணனும் 'சரி' என்று தலயசைக்கிறார்கள்.)

(தொடரும்)

திருப்தி தந்த பதினாறு செல்வங்கள்!

● காவிரியைக் கமண்டலத்தில் அடைக்க முயன்ற அகத்தியர் போல மாபெரும் இந்து மத சமுத்திரத்தைக் கோடிகாட்ட முயன்றிருக்கிறார் டாக்டர் சுதா சேஷய்யன். சிறுவனாக வந்து பிள்ளையார் காவிரியை ரிலீஸ் செய்தது போல, டாக்டரின் எழுத்தாணி இந்து மதத்தின் சாரத்தைத் தொட்டுச் சென்றுள்ளது. பதினாறு அத்தியாயங்களில் பதினாறு செல்வங்களைப் பெற்ற திருப்தி ஏற்பட்டது.

சென்னை - 92. கிருஷ்ண. ராஜ்கோபால்

● பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் விளங்குவது தான் இந்து மதத்தின் சனாதன தர்மம், என்று 'இந்த நூற்றாண்டில் இந்து மதம்' தொடரில் சொல்லியுள்ள பாங்கு, அருமை.

சென்னை - 73. கே.வி. ராமன்

● கடலில் மூழ்கி முத்தெடுப்பதற்கு இணையான ஒரு சாகசம் இந்து மதத்தில் கருத்துகளைத் தொகுப்பது. அதில் ஜெயித்து விட்டார் டாக்டர் சுதா சேஷய்யன்.


சென்னை - 61. ஆர். நாகராஜன்

● 'எந்த நூற்றாண்டிலும் இந்து மதம்' ஆத்திகர்களுக்கு ஓர் அர்த்தமுள்ள கட்டுரை என்றால் நாத்திகர்களுக்கோ சிந்திக்க வைத்திடும் மனமாற்றக் கட்டுரை!

பெங்களூர் - 72, ப. மூர்த்தி



நடக்குமென்பார்; நடக்கும்!



மேஷம் : 'ஆடியிலே அதிர்ஷ்டக் காற்று' உங்க பக்கம்தான் வீசுதுங்க. தாராளமான பண நடமாட்டம். எடுத்த காரியங்களில் எல்லாம் அனுகூலம் வரும்போது அதிர்ஷ்டத்துக்குக் கேட்கவா வேணும்? நீங்க யாருக்கும் கட்டுப்பட்டு இருக்க வேண்டிய தில்லை. சுதந்திரமாகச் செயல்படலாம். கணவன் - மனைவியிடம் இனிமையான சூழல் நிலவும். பெற்ற பிள்ளைகளால் பெருமை தேடி வரப் போகுதுங்க.



ரிஷபம் : எத்தனை எதிர்ப்புகள், விமர்சனங்கள் வந்தாலும் 'அம்மா' எடுத்த காரியத்தில் எவ்வளவு உறுதியாக இருக்கிறாங்க பாருங்க! அத்தகைய மன உறுதி உங்களுக்கு ஏற்படும். அலுவலகத்தில் பிரச்னைகள், சிக்கலான சூழ்நிலைகளைத் திறமையாகச் சமாளிச்சிடுவீங்க. எந்தக் காரியத்திலும் அவசரம் மட்டும் காட்டாதீங்க. புதிய முயற்சிகளைக் கொஞ்சம் தள்ளிப் போடுங்க. வியாபாரத்துல முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் செலவுகள் அதிகமாகும், கவனம் தேவை. பேச்சில் கடுமையைக் காட்டவே காட்டாதீங்க.




மிதுனம் : நம் ஜனாதிபதியை ரோல் மாடலாக வைத்து கனவு காண்பவர்களா நீங்க? உங்கள் காரியம் கைகூடப் போகுதுங்க. படிப்பு, ஆராய்ச்சி, விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு ராக்கெட் வேக வளர்ச்சி காத்திருக்குதுங்க. புதுப் புது ஆட்களின் அறிமுகம் உண்டாகும். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த ஊடல் காணாமல் போகும். உறவினர் வருகை, விருந்து, உபச்சாரம்ன்னு செலவு வரப் போகுது, பர்ஸ் பத்திரம்.



கடகம் : விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் இரட்டையர் பட்டங்களை வென்று லியாண்டர் பயஸ், சானியா மிர்ஸா இந்தியாவுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதேபோல புதிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவங்களுக்கு எதிர்பாராத வெற்றி காத்திருக்குதுங்க. பழைய கடன் தொல்லைகள் விலகும். கூட்டுத் தொழில் செய்றவங்களுக்குப் பிரகாசமான வாரம்ங்க. பொன், வெள்ளி, ஆடை, ஆபரணம் ஆகியவை வாங்கக் கூடிய வாய்ப்பு வரும்ங்க. இதெல்லாம் வாங்கறதாலே குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்னு சொல்லவா வேணும்?




சிம்மம் : பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே பிரச்னை எப்ப வரும், எப்ப விலகும்னு தெரியாது. அதே மாதிரிதாங்க இந்த வாரம் உங்களுக்கும். பிரச்னைகள், குழப்பங்கள் வரும். அதே சமயத்துல வந்த வேகத்தில் விலகியும் போயிடும். அதனால கவலைப்படாதீங்க. உத்தியோகத்துல பதவி உயர்வு காத்துக்கிட்டு இருக்குது. நீங்கள் எதிர்பார்த்த பண உதவி உங்களைத் தேடி வரும். புதிய தொழில் முயற்சி நல்ல பலனைத் தரும். அச்சகம், எழுத்து துறைகளைச் சேர்ந்தவங்க வளர்ச்சியடைவீங்க.



கன்னி : நடிகர் சூர்யாவுக்கு இதுவரை இருந்து வந்த மெதுவான வளர்ச்சி 'காக்க காக்க' படத்தின் மூலம் ஜெட் வேகத்துக்குச் செல்லப் போகுதுன்னு சொல்றாங்க. அதுபோல உங்களுடைய வளர்ச்சி மற்றவர்கள் பிடிக்க முடியாத அளவுக்குப் போகப் போகுதுங்க. பண வரவு அதிகமாகும். காவல், இராணுவம், சட்டம் ஆகிய துறைகளைச் சேர்ந்தவங்க, சாதனைகளை நிகழ்த்தி பதவி உயர்வு, பெறுவாங்க. நிலம், வீடு வாங்கக் கூடிய சூழ்நிலை வரும். உடன் பிறந்தவர்களால் நல்லதே நடக்கும் பாருங்க!

இளம் ஹீரோ தனுஷுக்கு (கும்பம்) கூரையைப் பிய்த்துக் கொண்டு பணம் கொட்டப் போகிறதாமே!






துலாம் : *நியமனைப்புத் துறையில் சமீபத்தில் இரண்டு பெண் அதிகாரிகள் முதன் முதலாக நியமிக்கப்பட்டிருக்காங்க.* பெண்களுக்கு ரொம்ப அதிர்ஷ்டமான வாரம்ங்க. நீங்க நினைச்சது நடக்கும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். இது மட்டுமில்லாமல் தெளிவான மனநிலை, தெய்வ பலம் கூடி வரும்போது எந்த சாதனையும் சாத்தியம்தானே! சிலருக்கு உத்தியோக விஷயமாக வெளிநாடு போகும் வாய்ப்பு வரும். மறுக்காமல் போயிட்டு வாங்க. வியாபாரம் சீராக நடைபெறும்.



விருச்சிகம் : *சமீபத்தில் அரசு அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் அம்பத்தியாறு வயதானவர்களுக்குக்கூட வேலை கிடைத்தது இல்லையா!* உங்கள் விஷயத்தில் அப்படி இல்லை. உங்களுக்கு நிரந்தரமான வேலையே கிடைக்கப் போகுது. பயணம் செய்ய வேண்டியிருந்தால் அலுத்துக்காதீங்க. அந்தப் பயணத்தால ஆதாயம் வருதுங்க. புதிதாகச் சொத்து வாங்கப் போறீங்க. வெளிநாடுகளிலிருந்து மகன் - மகள் வந்து சந்தோஷப்படுத்தப் போறாங்க.




தனுசு : *'நினைத்ததை முடிப்பவன் நான்.... நான்... நான்..' என்று எம்.ஜி.ஆர். பாணியில் பாட்டுப் பாடலாம் நீங்க.* எடுத்த காரியங்களில் எல்லாம் வெற்றி உங்களுக்குத்தான். லக்ஷ்மியின் அருள் தாராளமாக இருப்பதால் பணத்துக்குக் குறை இல்லைங்க. அலுவலகத்தில் சக ஊழியர்களிடம் நட்பு பாராட்டுவீங்க. மேலதிகாரிகளிடம் பாராட்டு வாங்குவீங்க. ஏற்றுமதி - இறக்குமதி தொழில்கள் சிறப்பாக நடைபெறும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு 'ஓஹோ' வாரம்.



மகரம் : *கியூபா அதிபர் ஃபிடரல் காஸ்ட்ரோ பற்றி பலவிதத் தகவல்கள் எதிரிகளால் பரப்பப்பட்டு வந்த நிலையில், திடீரென மேடையில் தோன்றி உணர்ச்சிகரமாக உரையாற்றியிருக்கிறார்.* எதிரிங்க வெலவெலத்துட்டாங்க. அதேபோல உங்கள் எதிரிகளும் ஓடி ஒளிவாங்க. உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும். சிலருக்குப் பதவி உயர்வும், பணி மாற்றமும் தேடி வரும். புதிய தொழில், வியாபாரம் எல்லாமே நம்பிக்கையளிக்கும். கணவன், மனைவியிடையே ஒற்றுமையும் சந்தோஷமும் நிலவும்.



கும்பம் : *டான்சி வழக்கில் 'அம்மா'வுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வருதோ, இல்லையோ,* சொத்து விவகாரத்தில் கோர்ட் தீர்ப்பு உங்களுக்குச் சாதகமாகவே இருக்கப் போகுதுங்க. அப்புறம் திருமண முயற்சி ஏதாவது இருந்தால் அதையும் முனைப்போடு செய்யுங்க. பெண்களுக்கு இது அற்புதமான வாரம். இயந்திரவகை, தொழில் உபகரணங்கள், வாகனம், டிராவல்ஸ், காண்ட்ராக்ட்ஸ், எலக்ட்ரிகல்ஸ், எலக்ட்ரானிக்ஸ், தோல் பொருள்கள், எண்ணெய் வகைகள், கெமிக்கல்ஸ் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு ஆதாயம் கூரையைப் பிச்சுக்கிட்டுக் கொட்டப் போகுதுங்க.



மீனம் : *தமிழக காங்கிரஸ் கட்சிக்கு ஏகப்பட்ட தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து.* இந்த மாதிரி உங்க குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் எல்லாம் காணாமல் போகப் போகுதுங்க. நண்பர்கள், உறவினர்கள் நீங்க கேட்காமலே உதவி செய்ய ஓடி வருவாங்க. கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு லாபம் கொட்டப் போகுது பொன், பொருள் வாங்கக் கூடிய சந்தர்ப்பம் கூடி வரும். துணிவும், தன்னம்பிக்கையும் நிறைஞ்சிருக்கும்.

அக்னிசர்மா பக்கம் ஆகஸ்ட் 13 முதல் 19 வரை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



குறையொன்றுமில்லை

உயர்ந்த ராஜசூய யக்ஞம் நடக்கிறபோது சிசுபாலன் பகவானிடத்திலே கண்டவாறு ஏச ஆரம்பிக்கிறான். அக்ர பூஜை கூடாது என்று தடுக்கிறான்.

சிசுபாலன் பிறக்கிறபோது நான்கு கைகள், மூன்று கண்கள் அவனுக்கு.. கழுதை போல் கத்திக் கொண்டு பிறக்கிறான்.

அவன் அம்மாவுக்கு சுதஸ்ரவை என்று பெயர். அப்பா, தமகோஷன். இரண்டு பேரும் இப்படி விகாரமாக ஒரு குழந்தை பிறந்துவிட்டதே என்று வியசனப்பட்டார்கள். 'இப்படி ஒரு குழந்தை ஊரிலே இருந்தால் ஊரே அழிந்து போய்விடும்; இழுத்துக் கொண்டுபோய் மதில் சுவருக்கு அப்பால் விட்டுவிடுங்கள்' என்றனர். குழந்தையைத் தூக்கியபோது அசரீரி வாக்கு கேட்டது. "இந்தக் குழந்தையை யார் கையிலே எடுக்கிறபோது அதனுடைய அதிகப்படியான கைகளும் நேத்திரமும் மறைந்து போகிறதோ, யார் தூக்குகிறபோது இது பிராக்ருத சிசுவாக மாறுகிறதோ, அந்த மனிதரின் கையாலே தான் இதற்கு மரணம்; ம்ருத்யு அந்த மனிதர் தான் என்று தெரிந்து கொள்ளுங்கள்..." என்றது அசரீரி.

யாரெல்லாம் 'குழந்தை பிறந்ததா?' என்று விசாரித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார்களோ, அவர்கள் அத்தனை பேரிடத்திலும் குழந்தையைக் கொடுத்துப் பார்த்தாள் சுதஸ்ரவை. பகவான் கிருஷ்ணன் - வாசுதேவன், ஒரு நாள் தேடிக் கொண்டு வந்தான். அவன் கையிலே கொடுத்துவிட்டாள் குழந்தையை.. கொடுத்தவுடனே அதனுடைய அதிகப்படியான அங்கங்களெல்லாம் போய் விட்டன. சின்ன, அழகான குழந்தையாக அது மாறி விட்டது.

உடனே சுதஸ்ரவை கேட்கிறாள்... "கிருஷ்ணா! உன்னால்தான் என் குழந்தைக்கு ம்ருத்யு என்று ஏற்பட்டுப் போய்விட்டது. என் குழந்தையை நீதான் ரக்ஷிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

அதற்கு பகவான் சொல்கிறான்... "அவன் செய்கிற நூறு தப்பு வரையில் பொறுப்பேன். அதற்கு மேல் பொறுக்க மாட்டேன்..." என்கிறான்.

அவ்வளவு அவகாசம் அவன் கொடுத்தானே என்று சுதஸ்ரவைக்கு சந்தோஷம்.

ஆனால், ராஜசூய யாகம் நடக்கிற நேரத்தில் சிசுபாலன் பகவானை ஏச ஆரம்பித்துவிட்டான்... பகவான் அதை - ஏச்சுக்களை, "ஏகாசமே, திஸ்ரஸ்சமே" என்று எண்ணுகிறான். 'ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று எண்ணினால் அவன் வைகிற வேகத்துக்கு வெகு சீக்கிரம் நூறு முடிந்து போகும். ஆகவே அப்படி எண்ணமாட்டான் பகவான். நடுவிலே எண்ணாமல் விட்டு விடுவான். அப்புறம் மறுபடியும் 'ஐந்து, ஆறு, ஏழு, எட்டு..' என்று வசவுகளை எண்ணுவான். நூறு வசவு மொழிகள் ஆன பிறகு அவனை முடிக்கலாம் என்று பகவான் திருவுள்ளம். அவனோ வைதுகொண்டேயிருக்கிறான். பகவான் எண்ணுவது மட்டும் சரியாயில்லையே!

'ஏன் எண்ணுவதில்லை நடுவிலே?' என்று கேட்டால் அதற்கு அழகாக பதில் சொல்கிறார் இங்கே...

ஏற்கெனவே வைத வசவு வருமானால் அதை எண்ண மாட்டான் பகவான்! புதிது புதிதாக என்ன வருகிறதோ, அதை மட்டும் எண்ணுவானாம்...! சிசுபாலன் இப்படிப் புதிது புதிதாகச் சொன்ன நூறு வசவுகளை மட்டும் எண்ணி, நூறு ஆன பிற்பாடு அவனை முடித்தான் பகவான்.

ஆகையினாலே, அக்ர பூஜை நடத்தக் கூடாது என்று சொன்ன சிசுபாலன் மாண்டு ஒழிந்தான். தன் அவதாரத்துடைய பிரயோஜனத்தை முடித்துக் கொண்டான். கடைசிவரை அவன் பகவானை வைதவாறே இருந்தான்.

ஆனால் பீஷ்மாச்சார்யார் ஞானி. "பேத ஞானம் எனக்குப் போய்விட்டது. சர்வாந்தர்யாமியாக பகவான் இருக்கிறான் என்பதை இன்று உணர்ந்தேன்" என்கிறார். பூரண பிரக்ஞையோடு இருக்கிறார். கடைசி

வரை அந்த பூரணப் பிரக்ஞையும் ஞானமும் இருக்கின்றன.

சூரியன் மேலே பிரகாசிக்கிறான். இங்கே ஆயிரம் கலசங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரம் கலசங்களிலும் நீர் இருக்கிறது. சூரிய ரச்மி ஆயிரம் கலசங்களிலும் பட்டு, அவற்றில் சூரியன் தென்படுகிறான். அங்கே, ஆகாசத்திலே பிரகாசிக்கிற அதே சூரியன்தான். அதே மாதிரிதான்... எல்லா

திருவடி என்கிற கூட்டிலே போய்ச் சேர்ந்தது. அந்த மாதிரி, அந்த எம்பெருமானிடத்திலே நேரே ஆத்ம சமர்ப்பணம் பண்ணின உத்தம அதிகாரி அவர்.

வைகுண்டத்திலே கிடைக்கக் கூடிய போகம்; மோக்ஷத்திலே கிடைக்கக் கூடிய நிலை - சரீரத்தை இழந்து, உத்தம சரீரத்தால் அப்ராக்ருதமான திவ்ய மங்கள விக்ரகத்தோடு அனுபவிக்கக் கூடிய போகம்; அப்படிப்பட்ட போகத்தை இந்த உலகத்தி

''சந்திரன் குருவைப் பார்க்கிறான்... குரு சூரியனைப் பார்க்கிறான்...''

''யாரு யாரை வேணும்னாலும் பார்க்கட்டும். முதல்வர் கவர்னரைப் பார்க்காம இருந்தாச் சரி!''

- உ. ராஜாஜி



ஜீவன்களுக்குள்ளேயும் அந்தர்யாமியாக பகவான் உட்கார்ந்திருக்கிறான் - சர்வாந்தர்யாமியாக இருக்கிறான்.

உயர்ந்த ஆத்மாத்வைதம் என்கிற நிலை உண்டு. விசிஷ்டாத்வைதத்திலே ஆத்மாத்வைதம் என்று ஒரு விஷயம். இது என்னவென்றால், ஓர் ஆத்மாவைப் பார்த்தால், இன்னொரு ஆத்மாவைப் பார்க்க வேண்டாம். ஒரே மாதிரி இருக்கும். அத்தனை ஆத்மாவுக்கும் அந்தர்யாமியாக இருக்கிற பகவானும் அததற்குள்ளே ஒரே மாதிரி இருக்கிறான்.

ஆகையினால் நாம் ஆத்மாத்வைதத்தை உணருதல் முக்கியம்.

''அப்படிப்பட்ட உயர்ந்த ரீதியிலே பகவானைப் பார்க்கிறேன்'' என்று அந்த கிருஷ்ணனையே மனசிலே நினைத்துக்கொண்டு, அவனையே நேரே பார்த்துக்கொண்டு, பீஷ்மாச்சார்யார் தன் ஆத்மாவை கிருஷ்ணனுடைய திருவடியிலே சேர்த்தார்.

பட்சி - பறவைகளெல்லாம் இருக்கிறது பாருங்கள்... அவையெல்லாம் மத்தியான வேளையிலே இரை தேடுகிற பல இடங்களுக்குப் போய்விடுகின்றன. சாயங்காலம் இருட்டு வருகிறபோது, தங்கள் கூட்டிலே வந்து உறைகின்றன. அந்த மாதிரி பீஷ்மாச்சார்யருடைய ஆத்மா, எம்பெருமானுடைய

லேயே அனுபவித்தார் பீஷ்மாச்சார்யார்.

அதனால்தான் இஞ்சிமேட்டு அழகிய சிங்கர் நித்யானுஷ்டானமாகவே பீஷ்ம ஸ்துதியைச் சொன்னார். இது அந்திமக் காலத்தில் மட்டும் சொல்கிற ஸ்லோகமல்ல. நித்யம் சொல்ல வேண்டும்; பீஷ்ம ஸ்துதியை.

அப்படிப்பட்ட பீஷ்மர், பகவானால் அனுக்ரஹிக்கப்பட்டவர், விஷ்ணு சஹஸ்ர நாமத்துக்குக் கர்த்தாவாக இருக்கிறார். அவர்தான் வக்தா; சொன்னவர் அவர்; சொல்லப்பட்ட விஷயமோ பரமாத்மா! கேட்டதோ... கிருஷ்ணனே அல்லவா் கேட்கிறான்! ஆக, மூன்று விசேஷங்களும் சஹஸ்ரநாமத்துக்கு அமைந்திருக்கின்றன.

அப்படிப்பட்ட வக்தா, மோக்ஷத்தை அடைந்த தினம் பீஷ்மாஷ்டமி. அந்த திவ்யமான நாளிலே, பித்ரு தேவதைகளை உத்தேசித்து நாம் காரியங்கள் பண்ணினால் ரொம்ப விசேஷம்.

வருஷத்தில் தொண்ணூற்றாறு சிரார்த்தங்கள் பண்ண வேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது! தொண்ணூற்றாறு! சில நேரங்களில் சிரார்த்த திதியே இருக்காது. ஆனால், ஒரு மகான் வருவார். பெரிய மகான்... அவர் வந்துவிட்டால், அன்றைக்குச் சிரார்த்தம் பண்ண வேண்டும். ஏனென்றால்,

அந்த மாதிரி உத்தமர் மறுபடி கிடைக்க மாட்டார்.


அவர் வந்த தினத்தில் அவரை வரித்து, பித்ரு தேவதைகளை ஆவாஹனம் பண்ணி, அவருக்கு போஜனமிட்டு, பித்ரு சிரார்த்தம் பண்ண வேண்டும்.

அது தவிர, சாஸ்திரம் விதிக்கிற தினங்களிலே செய்ய வேண்டிய சிரார்த்தங்கள் தொண்ணூற்றாறு உண்டு.

பகவானே கேட்கிறான்... பித்ரு கீதம் என்பது விஷ்ணு புராணத்திலே ரொம்ப அழகான கீதம்: வாரிக் கொடுத்து, வித விதமான போஜனமும் தயார் பண்ணி பித்ரு தேவதைகளை ஆராதனம் பண்ணக் கூடிய ஒருவன் உதிக்க மாட்டானா...? அதற்குச் சக்தி இல்லை என்றால், வஸ்திரம், மணி எல்லாம் கொடுக்க வேண்டாம்... தக்ஷிணை மட்டும் கொடுத்து போஜனம் இட்டு, 'இன்றைய தினம் பித்ரு தினம்... பித்ரு தேவதைகள் திருப்தி அடையட்டும்' என்று சிரார்த்தம் பண்ணுகிற ஒருவன் உதிக்க மாட்டானா...?

அதற்கும் சக்தி இல்லை என்றால், கொஞ்சம் அரிசி, கொஞ்சம் வெல்லம் - ஒரே ஒரு வாழைக்காய், கொஞ்சம் பயத்தம் பருப்பு... இவற்றை வைத்து தக்ஷிணை வைத்து, ஒரு பிரும்ம வித்தை வரவழைத்து, 'இன்றைய தினம் பித்ருக்கள் தினம் - அதனாலே இன்றைக்குக் கொடுத்து திருப்தி அடைகிறேன்' என்று கொடுக்கக் கூடிய ஒருவன் உதிக்கமாட்டானா? அதற்கும் சக்தி

"'ஆ'ன்னு அலறியபடி முழிச்சுக்கிட்டீங்களே! என்ன விஷயம்?"
"அம்மா பிரதமராகி நாலரைக் கோடி அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் செய்ற மாதிரி கனவு வந்தது கமலா!"
- உ. ராஜாஜி



இல்லை என்றால், ஒரு அரைப்படி எள்ளை வாங்கி, 'இன்றைய தினம் பித்ரு தினம், இவருக்குப் பண்ணுகிறேன்; அதனால் பித்ரு தேவதைகள் சந்தோஷம் அடையட்டும்' என்று சொல்லக்கூடிய ஒருவன் உதிக்க மாட்டானா? அதற்கும் சக்தி இல்லை என்றால், அந்த தில தானத்துக்குக் கூட வழியில்லை என்றால், ஒரு பிடி எள்ளை எடுத்து, இதனாலேயே பித்ரு தேவதைகள் திருப்தி அடையட்டும் என்று கொடுக்கும் ஒருவன் உதிக்கமாட்டானா? அதற்கும் சக்தி இல்லை என்றால், இந்த கட்டை விரலை ஜலத்தில் தோய்த்து, ஈரமான விரலை எள்ளின்மீது தோய்த்து, அதிலே பத்தோ பதினைந்தோ எள் ஒட்டிக் கொள்கிறது பாருங்கள்... அப்படி ஒட்டிக் கொண்ட எள்ளை ஜலத்திலே சேர்த்து, 'இன்றைய தினம் பித்ரு தினம்; வேறு எந்த வகையிலும் பித்ருக்களை ஆராதிக்கிற வகையற்றவன் நான்... இதோ எள்ளையும் தீர்த்தத்தையும் கட்டை விரல் நுனியினாலே திருப்பி விடுகிறேன்... இதனால் பித்ரு தேவதைகள் திருப்தி அடையட்டும்' என்று சொல்லக் கூடிய ஒருவன் உதிக்கமாட்டானா...?

அதற்கும் சக்தியில்லை என்றால் ஊரைவிட்டு வெளியிலே போ... அரிவாளை எடுத்துக் கொண்டு போய் நல்ல புல் இருக்கிற இடத்திலிருந்து புல்லை அறுத்துக் கொண்டு வந்து பசுமாட்டுக்குப் போட்டு, அந்தப் பசு சாப்பிடவேண்டும். வேறு எதற்கும் சக்தி அற்றவன், 'இந்தப் புல்லை பசுவுக்குப் போட்டிருக்கிறேன். பசு திருப்தியாகச் சாப்பிடுகிறது. இந்த திருப்தி என் பித்ரு தேவதைகளுக்கு ஏற்படட்டும்' என்று சொல்கிறான்... இப்படிச் சொல்கிற ஒருவன் இருக்கமாட்டானா...? என்று பித்ரு கீதம் கேட்கிறது.

எவ்வளவு தூரத்துக்கு அது நமக்காக எளிமைப்படுத்தித் தருகிறது பாருங்கள்...!

(வளரும்)



அதிகபட்சம் குலுமணாலி, அதையும் விட்டால் காஷ்மீர்! - பாடல் காட்சிகளை ஓவிய

'அரசாட்சி' படத்துக்காக ஆடிக் கொண்டிருப்பவர்கள் அர்ஜுனும், லாரா தாத்தாவும். கவிஞர் தாமரையின், 'மழைத்துளி என்மீது விழுகிறதே' என்ற பாடலுக்கு ராஜு சுந்தரம் நடனம் அமைக்க, லாரா மூவ்மெண்டில் வெளுத்து வாங்கிவிட்டாராம். லண்டன் சென்ட்ரல் டவர் அருகில் படம் பிடித்திருக்கிறார்கள்.

டான்ஸா? உடான்ஸா?



கோலார் தங்க வயல் பின்னணியில், புழுதி பறக்க ஆடுவது தனுஷ் - சாயசிங் ஜோடி. தினாவின் இசையில் யுகபாரதி எழுதிய 'அக்மார்க் அலப்பறை!' ஃபாஸ்ட் பீட் பாடலாம். நிச்சயமாய் கெட்ட ஆட்டமாய்த்தான் இருக்கும். ஆங்! 'திருடா திருடி' படத்துலதான் இந்தத் தில்லானா தில்லானா!

மாய்த் தீட்டும் மணிரத்னம் போய்வந்த அதிக பட்ச அவுட்டோர் இவ்வளவுதான். இப்போது ஐம்பது லட்சத்தில் படம் எடுக்கிறவர்கள், ஒரு பாடலையேனும் சுவிட்ஸ்சர்லாந்தில் ஷூட் பண்ணத் துடிக்கிறார்கள். அங்கே தெருக்களிலும், புல்வெளிகள், பூங்காக்களிலும் நம்மவர்கள் டப்பாங்குத்து ஆடுவதை வாய் பிளக்க வேடிக்கை பார்ப்பது வெளிநாட்டவர்களின் சூப்பர் பொழுது போக்கு!

ரவுண்ட்ஸ் பாய்



'ஃபைவ் ஸ்டார்' பிரசன்னாவும் அறிமுகநாயகி ஸ்ருதி ராஜும் இலங்கை திரிகோணமலை தேயிலைத் தோட்டங்களின் பின்னணியில் அதிரடி ஆட்டம் போடுவது, 'காதல் டாட் காம்' படத்திற்காக.



ஒரு வழியா உள்ளூர் லொக்கேஷனுக்கு வந்துட்டோம். பொள்ளாச்சி ஆழியாறு அணைப்பகுதியில், பிரத்யூஷாவைப் பார்த்து 'காவிரிப் பெண்ணே நீ என்னிடம்தான் வந்தாயோ' என தேவா இசையில் உடம்பை வளைத்து ஆடுகிறார் 'சவுண்ட் பார்ட்டி' சத்தியராஜ். படத்தின் பெயரும் அதுதான். பிரத்யூஷாவின் கடைசிப் படம்.

'அத்தை பொண்ணே அத்தை பொண்ணே' என்று விவேகா எழுதிய பாடலுக்கு மெட்டுப் போட்டிருப்பவர் பரத்வாஜ். 'மாறன்' படத்தில் கலக்கிய ராபர்ட்டின் நடன அமைப்பு என்பதால், ஒவ்வொரு அசைவிலும் 'இளமை டாட் காம்' என்கிறார்கள்.



"இவன் மயக்கம் போட்டு விழறதுக்கு எங்கடை வாசல்தானா கிடைச்சது? வேற எங்கியாச்சும் போய் விழுந்து தொலைக்கக் கூடாது?" சாமிநாதனிடம் ஏகத்துக்கு அலுப்பும், சலிப்பும். நாள் முடிகிற ஆயாச நேரத்தில் தொல்லை வந்து சேர்ந்ததே என்கிற கடுப்பு.

திருச்சி ஜங்ஷன் பஸ் ஸ்டாண்டுக்கு அருகில்தான் அவருடைய கடை. அதன் வாசலில்தான் மயங்கிக் கிடந்தான் அவன், துணி மூட்டை மாதிரி சுருண்டுகொண்டு.

"அவன் பாட்டுக்குக் கிடக்கட்டும். நாம கடையை சாத்திருவோம்..." லுங்கியை மடித்துக் கட்டிக்கொண்டு அசால்ட்டாக சொன்னான் மாரி. அடிக்கப் போனார் சாமிநாதன்.

"போட்ருவேன் பொளேர்னு. பத்து வயசு கூட இருக்காது போல... பச்சைப் புள்ளை. அநாதை மாதிரி கிடக்கான். உட்டுட்டுப் போறதாமுல்ல? தூக்குடா உள்ள..."

சாமிநாதனும், மாரியுமாக அந்தப் பையனைக் கடைக்குள் தூக்கி வந்தனர்.

"மூஞ்சில தண்ணி தெளி..."

ஜிலீரென்று பட்ட நீர்த் திவலைகளில் அவன் இமைகள் இலேசாகத் திறந்தன.

"முழிச்சிப் பாக்கிறான்யா..." மாரியின் குரலில் சந்தோஷம்.

"அவனுக்குக் காபி, டீ ஏதாவது கொடுடா முதல்ல. மறுபடி சாஞ்சுடப் போறான்..."

சூடான டீக்குப் பிறகு அந்தப் பையன் நன்றாகவே விழித்துப் பார்த்தான், மலங்க மலங்க! முகம் முழுக்க சோர்வு அப்பியிருந்தது. உள்வாங்கி ஒட்டிக் கிடந்த வயிறு, பசியைச் சொன்னது.

"ஏய் விசாலம்!" பின்கட்டை நோக்கி குரல் கொடுத்தார் சாமிநாதன். கடையை ஒட்டினாற்போல் பின்னாலேயேதான் அவர் வீடு.

"அர்த்த ராத்திரில ஏன் இப்படிக் கூப்பாடு போடறீங்க?" எட்டிப் பார்த்த விசாலம், "யாரிது?" என்றாள்.

"ஹாங்... என் மூணாவது சம்சாரத்தோட நாலாவது பையன். அட ஏண்டி நீ வேற.



கடை வாசல்ல மயக்கமாக் கிடந்தான். பையன் மூஞ்சைப் பாத்தா தெரியலை, சாவக் கிடக்கான்னு? முதல்ல எதுனாச்சும் கொடு அவனுக்கு. அப்புறம் விசாரிச்சிக்கலாம் அவன் குலம் கோத்திரத்தை..."

நாலு இட்டிலிகள் உள்ளே போனதும் கொஞ்சம் தெம்பாகத் தெரிந்தான் அந்தப் பையன். கண்களில் கிடந்த கலவரமும்,

வர்ஷா

பயமும் மட்டும் அப்படியே இருந்தன.

"பேரென்னடா...?" விசாரிக்க ஆரம்பித்தார் சாமிநாதன்.

"முத்து..."

"வீடெங்கடா இருக்கு?"

"மணக்குடில..."

"அதெங்க இருக்கு?"

"மாயவரந் தாண்டி இருக்குங்கய்யா..." என்றான் இடையில் புகுந்த மாரி.

மாயவரம் என்ற வார்த்தையைக் கேட்டதுமே ஏக சந்தோஷம் விசாலத்துக்கு. "எங்க ஊரு பக்கத்திலேருந்தா வர்றே...?" கைகள் முத்துவின் தலையைப் பரிவோடு வருடின. தன் ஊரிலிருந்து வந்தவன் என்பதால் அவன் அவளுக்கு ஏதோ சொந்தம் போல ஓர் உணர்வு.

"ஏண்டா முத்து, ஊருவிட்டு ஊரு வந்தா அப்பா, அம்மா கூடவே இருக்க வேணாம்? இப்படியா தொலைஞ்சு போவே?" கரிசனத்தோடு கேட்டார் சாமிநாதன்.

"வீட்டை விட்டு ஓடியாந்துட்டேன்..."

"சர்தான் போ! ஆமா, ஏன் ஓடியாந்தே?"

கூடு

"பரிச்சையில ஃபெயிலாயிட்டேன்..."

"அப்படிப் போடு! அப்பன் அடிச்சானா? அதான் நழுவிட்டியா?"

"சிக்குனா நிமித்திருவாங்க. அதான் ஃபெயிலானதை வீட்ல சொல்லாமலே ஓடி வந்துட்டேன்..."

"ஒரு வேளை பட்டினி கிடந்தியா, இல்ல ஒரு நாளா? அதுக்கே இப்படி சுருண்டுட்டே. ஓடி வந்துட்டாராம் ஓடி... ஒழுங்கா வீட்டைப் பாக்கப் போய்ச் சேரு." அதுவரை இருந்த அக்கறையும், கரிசனமும் அடியோடு அழிந்து கண்டிப்பானது சாமிநாதனின் குரல்.

"வீட்டுக்குப் போனா என்னையக் கொன்னே போட்ருவாங்க. ஏதாவது வேலை கொடுங்கய்யா. செஞ்சுக்கிட்டு இங்கியே இருந்துக்கிறேன்."

"நான் என்ன தர்ம சத்திரமா நடத்தறேன்?" சடாரென்று ரௌத்ரமானார் சாமிநாதன். "போற வர்றவனுக்கெல்லாம் சாப்பாடு போட்டு வேலையும் கொடுக்கிறதுக்கு.." விழிகள் சிவந்து மூக்கு விடைத்தது. "மவனே, மரியாதையா நாளைக்குக் காலையில முத பஸ்ஸை புடிச்சி ஊரைப் பாக்கப் போய்ச் சேர்ற, என்னப் புரியுதா? ஆமா உங்க ஊருக்கு டிக்கெட் காசு எம்மா?"

"நாப்பது ரூவா இருக்குமுங்க.."

"இந்தாடா மாரி அம்பது ரூவா, இப்பமே கொடுத்துட்டேன். நாளைக்குக் காலையில முத வேலையா இவனை மாயவரம் பஸ்ல ஏத்திட்டு வந்துடு. நாளைக்கு நான் இந்தப் பயலை இங்கப் பாத்தேன்னு வச்சுக்க, உன்னையத் துரத்திப்புடுவேன். ஆமா, சொல்லிட்டேன்."

மறுநாள் சாமிநாதன் கண் விழிப்பதற்கு முன்பாகவே முத்துவை இழுத்துச் சென்றுவிட்டான் மாரி.

விசாலத்திற்குத்தான் பொறுக்கவில்லை.

"கைக்கு உதவியா வேலைக்கு ஒரு பையன் வேணும்னு சொல்லிக்கிட்டு இருந்திங்க. வசதியா வந்து சேர்ந்தான் அந்த முத்து. வச்சிக்கிட்டு இருந்திருக்கலாமுல்ல? கும்பகோணத்துப் பையன் மாரியை மட்டும் வேலைக்கு வச்சிக்கிட்டீங்க. ஏன்னா, அவன் உங்க ஊரு. எங்க ஊரு மாயவரத்திலேருந்து வந்தவன்னு தானே அந்த முத்துவை விரட்டிட்டீங்க?"

"அடப்போடி, விவரங்கெட்டவளே! நல்லது கெட்டது புரியற வயசுல ஊரைவிட்டு உழைக்க வந்தவன் மாரி. ஆனா இந்த முத்து, என்ன ஒரு பத்துப் பன்னெண்டு வயசிருக்குமா? உழைக்கிற வயசா அது? அதுவும் அப்பா, அம்மாவை விட்டுட்டு, ஊரு விட்டு ஊரு வந்து... அந்த வயசு படிக்கிற வயசு... குடும்பத்தோட சந்தோஷமா, கூட்டுக்குள்ளே இருக்கிற குருவி மாதிரி, பாதுகாப்போட இருக்க வேண்டிய வயசு. அந்த வயசுல போய்... வீட்டை விட்டு வந்து... அந்தக் கஷ்டம் அந்தச் சின்னப் பையனுக்கு வேணாம்னுதான் விரட்டிட்டேன்."

அதட்டலாய் ஆரம்பித்து குரல் தழுதழுக்க முடித்தார், சின்ன வயசில் வீட்டை விட்டு ஓடி வந்ததால், இள வயசின் 'கூடு'சுகம் தொலைத்திருந்த சாமிநாதன். ●

சிரித்து வாழ வேண்டும்-3



படம் உதவி : பிலிம் நியூஸ் ஆனந்தன்

எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை ரிசல்ட் வெளியானது. விடியற்காலையில் எழுந்து, சப்தம் போட்டுப் படித்து, ஊரை எழுப்பி, எனக்கும் திட்டு வாங்கிக் கொடுத்த எதிர் வீட்டுப் பையன் கோபாலைத் தவிர, எங்கள் தெருவிலிருந்து பரீட்சைக்குப் போன நாங்கள் எல்லோரும் பாஸ் பண்ணிவிட்டோம்.

நான், எப்போதுமே புத்திசாலி மாணவர்களில் ஒருவனாக இருந்தேன். ஆனால், வீட்டில், தினமும் புத்தகத்தை வைத்துக் கொண்டு படித்ததையே திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருப்பது என்பது எனக்கு வேப்பங்காய். வகுப்பில், ஆசிரியர் பாடம் நடத்துகிறபோது, ரொம்பக் கூர்ந்து கவனிப்பேன். அப்படி என் மனத்தில் நான் பதிய வைத்துக் கொள்ளுகிற பாடங்களும் சரி, மற்ற விஷயங்களும் சரி, எனக்கு மறக்கவே மறக்காது.

என் புத்திசாலித்தனம் ஒரு பக்கம் இருந்தாலும், நான் வகுப்பில் ரொம்ப விவகாரமான மாணவன். பரீட்சையில் 'திருக்குறளை எழுதியது யார்?' என்று கேள்வி கேட்டால், 'ஒரு புலவர்' என்று பதில் எழுதுவேன். ஆசிரியர் விடைத் தாள்களைக் கொடுக்கிறபோது என்னைக் கூப்பிடுவார். போய் நிற்பேன்.

"திருக்குறளை எழுதினது திருவள்ளுவர் என்று உனக்குத் தெரியாதா?"

"தெரியும்"

"அப்புறம் ஏன் ஒரு புலவர் என்று பதில் எழுதியிருக்கிறாய்?"

"ஏன் சார்! திருவள்ளுவர் ஒரு புலவர் இல்லையா?"

"அவர் புலவர்தான். ஆனால் திருவள்ளுவர் என்று ஏன் பதில் எழுதவில்லை?"

"நீங்க திருக்குறளை எழுதியவர் யார்? என்று தானே கேள்வி கேட்டிருக்கீங்க! எழுதியவர் பேர் என்னன்னு கேட்கலையே! அப்படிக் கேட்டிருந்தா நானும் திருவள்ளுவர்னு எழுதியிருப்பேன்!" என்று இடக்காக பதில் சொல்லுவேன்.

இன்னொரு நாள், ஆசிரியர் போர்டில் ஏதோ எழுதின சமயம், மாணவர்கள் எல்லாம் தங்களுக்குள் ஏதோ கிசுகிசுத்துக் கொண்டனர். என்ன விஷயம் என்று அவர் கேட்டபோது, யாரும் பதில் சொல்லவில்லை. அந்தச் சமயம் பார்த்து நான் 'களுக்' என்று கொஞ்சம் சிரித்துவிட, என்னைப் பிடித்துக் கொண்டார்.

"எதற்காகச் சிரித்தாய்?"

"உங்க சட்டையில் இங்க் கறை பட்டிருக்கிறது."

"ஓ! அதுவா! பேனாவுக்கு இங்க் போட்ட போது, கைதவறி சட்டையில் பட்டிருக்கும்!"

எனக்கு மறுபடியும் சிரிப்பு வந்து விட்டது.

"எதற்காகச் சிரிக்கிறாய்?"

"சாதாரணமாய் பேனாவுக்கு இங்க் போட்டிருந்தால், சட்டையின் முன் பகுதியில்தான் கறை பட்டிருக்கும். உங்கள் சட்டையிலோ முதுகுப் பக்கம் கறை இருக்கிறது. அப்படியென்றால் விசித்திரமாக


* படம் : யோகா

மார்க் வாங்கினால் புத்திசாலியா?

வளைந்து, நெளிந்தல்லவா நீங்கள் இங்க் போட்டிருக்க வேண்டும். நீங்கள் வளைந்து, நெளிந்து இங்க் போடுவதாக கற்பனை செய்து பார்த்தேன். சிரிப்பு வந்துவிட்டது" என்று விளக்கம் நான் கொடுக்க, அவர் எனக்கு கொடுத்ததென்னவோ ஒரு பிரம்படி!

இப்படிப் பள்ளிக்கூட நாட்களில் நிறைய சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஆனாலும், நான் வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்துகிற சமயத்தில் ரொம்ப கவனமாய்க் கேட்டுக் கொள்ளத் தவற மாட்டேன். பரீட்சைகளையும் நன்றாக எழுதி, நல்ல மார்க் வாங்கி விடுவேன். வகுப்பில் நான் கவனமாய் இருந்தேன் என்றால், அதற்கு ஆசிரியர்கள் எல்லாரும் அவ்வளவு சுவாரசியமாக, மிகுந்த ஈடுபாட்டோடு பாடம் நடத்தினார்கள் என்பதுதான் முக்கியக் காரணம்.

வகுப்பில் புத்திசாலிப் பையன். துறுதுறு என்று இருப்பேன் என்றாலும், மிகவும் ஆசார, அனுஷ்டானங்களைக் கடைப்பிடிக்கிற குடும்பம் என்பதால், வீட்டில் பரம சாதுவாக இருப்பேன்.

காலையில் எழுந்தவுடன், அம்மாவுக்காக ஒரு பித்தளைக் குடத்தை எடுத்துக் கொண்டு, அதன் கழுத்துப் பகுதியில் கொஞ்சம்போல புளியை ஒட்ட வைத்துக் கொள்ளுவேன். ஊரை ஒட்டி, ராஜ வாய்க்கால் என்று ஒரு ஓடை. அங்கே போய், பாறைமீது, கீழே கிடக்கும் செங்கல்லை எடுத்து உரசினால் பொடியாக செங்கல் தூள் வரும். அதை அப்படியே விரலில் எடுத்து, பல் துலக்கி, முகம் கழுவிக் கொள்ளுவேன். போகிற போது, அம்மாவின் புடைவை ஒன்றை எடுத்துக் கொண்டு போய், அதைத் தோய்த்து உலர்த்திவிட்டு, புளியைப் போட்டு, குடத்தை



'சும்மா' கண்ணாடிபோல பளபளவென்று தேய்த்து வைத்துவிட்டு, வாய்க்காலி லேயே குளித்து முடிப்பேன். பின் குடத்தில் தண்ணீர் பிடித்துக் கொள்ளுவேன். உலர்ந்த புடைவையையும், தேய்த்த குடத்தில் பிடித்த தண்ணீரையும் எடுத்துக் கொண்டு புறப்படுவேன். பூஜைக்கும், சமையலுக்கு மான தண்ணீர் அது என்ப தால், மான் தோல் பைபோல ஒன்றை எடுத்துக் கொண்டு போய், அதற்குள் தண்ணீர்க் குடத்தை வைத்து, அதைத் தலையில் சுமந்து கொண்டு வருவேன். ராஜ வாய்க்காலில் நீர் வற்றிய நாட்களில், ஆறு மைல் தூரம் வரப்புகளின்மீது நடந்து அமராவதி ஆற்றுக் குப் போய், அம்மாவின் புடைவை மற்றும் துணி களைத் துவைத்துக்கொண்டு, குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவது வழக்கம்.

அப்போது நான் அணிந்த டிராயர், சட்டை கள்கூட ஒன்று சிவப்பில் இருக்கும்; இல்லை பச்சை நிறத்தில் இருக்கும். காரணம், ★கர்நாடக மாநிலம் அரிசி கேராவில் ஸ்டேஷன் மாஸ்டர் பணியில் இருந்த என் அப்பா, ரயிலை நிறுத்த, புறப்பட அசைக்கிற கொடி தைக்கிற துணியை எடுத்துக் கொண்டு வந்து எனக்குச் சட்டை, டிராயர் தைத்துக் கொடுத்து விடுவார்.

ஸ்கூல் விட்டு வந்தவுடன் விளையாடலாம். ஆனால், தெருவிளக்குகள் எரிய ஆரம்பித்த மறு நிமிடம் வீட்டில் இருக்க வேண்டும். கைகால் கழுவிக் கொண்டு ஹோம் ஒர்க் இருந்தால் முடிக்க வேண்டும். முனிசிபாலிடி சங்கு பிடிக் கிறவரை படிக்க வேண்டும். அடுத்து இரவுச் சாப்பாடு. சாப்பிட்டுவிட்டுப் படிக்கலாம், அல்லது தூங்கப் போய்விட வேண்டும். இதுதான் தாராபுரத்தில் ஸ்கூல் வாழ்க்கை.

பரீட்சைகளில் நல்ல மார்க் வாங்கினேன் என்றா லும் எனக்குப் பரீட்சை என்றால் பயமோ, பரீட்சை முறைமீது அபார மதிப்போ கிடையாது. எண்பது, நூறு பக்கங்களில் ஒரு புஸ்தகம். அதில் உள்ளதை வருஷம் முழுக்கச் சொல்லித் தந்து, வருஷக் கடைசியில் பரீட்சை. அந்த புத்தகத்தில் சொல்லப் பட்டுள்ள விஷயங்களை, புரிந்தாலும் சரி, புரியாவிட்டா லும் சரி, நெட்டுருப் போட்டு, அப்படியே பரீட்சைப் பேப்பரில் கக்கி, மார்க் வாங்கிவிட்டால் ஒரு பையன் புத்திசாலி. மார்க் வாங்காது போனால் படிக்க லாயக்கில்லாத முட்டாள், என்று முத்திரை குத்தப்படுவதில் எனக்கு உடன்பாடு கிடையாது.

ஆனால் என்ன செய்ய? மார்க் வாங்கினால்தான் புத்தி சாலி என்று அங்கீகாரம். இஞ்சினியரிங், மருத்துவக் கல்லூரி களில் சீட் என்று இன்றைக்கும் கூட அதே நிலை நீடிப்பது என்பது பரிதாபமான விஷயம். படி படி என்று குழந்தை களைப் பெற்றோர்கள் வாட்டி வதைப்பதைப் பார்க்கிற போது, எனக்கு ரொம்பப் பாவமாக இருக்கிறது.

படிக்கிற காலத்தில் என்னுடைய பர்சனாலிடி பற்றி நான் சொல்லியே ஆக வேண்டும். வெள்ளைக்காரன் போல வெளிறிய கலர் இல்லை. செக்கச் சிவந்த நிறம். தலையில் கருகருவென்று அடர்த்தியான முடி, நெற்றியில் புரளும். என்னைப் பார்க்கிற யாரும், அட! பையன் பளீர்னு ரொம்ப அழகா இருக்கானே! என்று வாய்விட்டே சொல்லிவிடுவார் கள். அல்லது குறைந்தபட்சம் மனதுக்குள் நினைத்துக் கொள்ளுவார்கள். இதனால் எனக்கே என் அழகு பற்றி ஒரு வித கர்வம் உண்டு.

யாராவது "நாகேஸ்வரா!" என்று என்னைப் பேர் சொல்லி அழைத்தால், 'என்ன?' என்று கேட்க மாட்டேன். ஸ்டைலாகத் தலையைத் திருப்பி, ஒரு பார்வை பார்ப்பேன்! அதற்கு 'ம். என்ன?' என்று அர்த்தம். அப்படி ஒரு திமிர் என்று கூடச் சொல்லலாம். என் அக்காகூட, 'நாகேஸ்வரா! நீ சிரிக்கிறபோது கன்னத்தில் எத்தனை அழகாய் குழி விழுகிறது' என்று சொல்லி சந்தோஷப்படுவார்.

ஆனால், "அழகு என்பது நிலையில்லாதது! பின்னால், என் கன்னத்தில் மட்டுமில்லை, முகம் முழுக்க சென்னை மாநகரத்துச் சாலைகள் போல குழிகள் விழப் போகின்றன. நான் சிரித்தால் மட்டுமில்லாமல், எப்போதும் நிரந்தரமாய் அவை அங்கே குடியிருக்கப் போகின்றன" என்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

(சிரிப்பு தொடரும்)

★ கடந்த வாரம் தாராபுரம் ஸ்டேஷன் என்று தவறாக பிரசுரமாகி விட்டது.

பெப்சி, கோக் பருகினால் கான்ஸர் வருமா...?

சமீபத்திய சர்ச்சை குறித்து, சென்னையில் இயங்கி வரும் 'டாக்சிக் லிங்க்' என்ற சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இயக்கத்தின் ரங்கராஜனிடம் கேட்டோம்.

"குளிர்பானம் என்பது, தண்ணீர், கார்பன்-டை-ஆக்ஸைடு வாயு மற்றும் அந்தந்த ருசிக்குரிய கான்ஸன்டிரேட், இந்த மூன்றின் கலவைதானே? இங்கே ரசாயன எச்சங்கள் எப்படி வரமுடியும்?"







ரங்கராஜன்

"நீங்கள் சொல்வது போல, தண்ணீரில் குளிர்பான கான்ஸன்டிரேட்டைக் கலந்து கார்பன்-டை-ஆக்ஸைடு வாயுவைச் சேர்த்துத்தான் குளிர்பானங்கள் தயாரிக்கப்படுகின்றன. இங்கே நேரடியாக எந்த ரசாயனப் பொருட்களையும் சேர்க்க வாய்ப்பில்லை. பிரச்னை தண்ணீரில்தான் இருக்கிறது.

"கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்!"

"குளிர்பானம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் எங்கே நிறுவப்பட்டுள்ளன என்று பார்த்தால், எல்லாமே விவசாய நிலங்களாக இருந்த இடங்களில்தான். அங்கே விவசாயம் செய்யப்பட்ட சமயத்தில் மிக அதிக அளவில் ரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக, மண்ணில் உரங்களின் வீரியம் தங்கிவிட்டது. அந்தப் பகுதியின் நிலத்தடி நீரிலும் இதன் பாதிப்பு ஊடுருவி விட்டது. அந்தத் தண்ணீர்தான், குளிர்பானங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. ஆக, குளிர்பானங்களில் இருக்கும் ரசாயன எச்சங்களின் ரிஷிமூலம், விளை நிலங்களில் ஏற்கெனவே பயன்படுத்திய ரசாயன உரங்கள்தான்."

"தற்போது குளிர்பானங்களில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ள ரசாயன எச்சங்கள் எவை? இவை, குளிர்பானம் பருகுபவர்களை எப்படி பாதிக்கும்?"

"குறிப்பிடப்படும்படியாய் நாலு ரசாயனங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது: டிடிட்டி, நோய்க்கிருமிகளை அழிப்பதற்காக, சுகாதாரக் காரணங்களின் அடிப்படையில் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தப்பட வேண்டியது இது. இதனை விளை நிலங்களில் பயன்படுத்தத் தடை உள்ளது. மாலதியான், லிண்டேன், குளோரோ பைரிபோஸ் ஆகியவையும் உடல் நலத்தைப் பாதிக்கக் கூடியவையே. இவற்றால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் மனித இனத்துக்கு அபாயம் அளிப்பவை. மூளையும், நரம்பு மண்டலமும் பாதிப்படையும்; குழந்தைப் பிறப்பை சிக்கலாக்குவதுடன், உடற்குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறக்கவும் வாய்ப்பு உண்டு. உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தி குறையும். காலப் போக்கில் கேன்ஸர் கூட வரலாம்."

"இந்தியாவில் மட்டும்தான் இந்தப் பிரச்னையா?"


"ஆமாம்! உலக நாடுகளில், குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில், உடல் நலம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த சட்டங்கள் கடுமையானவை. அங்கே ரசாயன பாதிப்புள்ள தண்ணீரைப் பயன்படுத்தி குளிர்பானங்கள் தயாரிக்க முடியாது. ஆனால் இங்கே கடுமையான சட்டங்களும் இல்லை; இருக்கிற சட்டங்களிலும் ஓட்டைகள் இருப்பதால், சகஜமாய் விற்றுவிட முடிகிறது.

சந்திப்பு : எஸ். சந்திரமௌலி
படம் : கிளிக் ரவி



ஜில்லு மல்லு

—கதிர்



ஒரே பேப்பரா இருக்கு. என்ன தொழிலை மாத்திட்டியா?
'ஃபிரண்ட்ஸ் டே'க்காக எனக்கு வந்த கிரீட்டிங்ஸ்.
பரவாயில் லையே... உனக்கு இவ்வளவு ஃபிரண்ட்ஸா...
சொன்னா நீ நம்ப மாட்ட. எனக்கு இங்க்லிஷ் எழுத்து இருபத்து நாலுலேயும் ஃபிரண்ட்ஸ் இருக்காங்க.
டேய்... ஆல்பாஃபெட்ஸ் 26 எழுத்துடா.
சரி...சரி... அந்த இரண்டு பேருக்கு இங்கிலீஷ் தெரியாது...
மீசையே இல்லே, இதுலே மண் வேற ஒட்டலேங்கிறே! அடங்குடா.
என்னை விடு! உனக்கு நீயே எழுதி போஸ்ட் பண்ணாதான் உண்டு...
'சார் போஸ்ட்'
உனக்கும் கிரீட்டிங் கார்ட்... என்ன நான் சொன்னா மாதிரியே செய்திட்டியா....
என்னடா... இது போதுமா...?
இன்னிக்கு ஃபிரண்ட்ஸ்டேயா? எனிமிஸ் டேயா?!?



Trust • Taste • Nutrition
என்னையே நம்பி இருக்கும் என் குழந்தையின் ஊட்டசத்துக்கு நான் யாரை நம்புவது?
என் குழந்தைதான் எனக்கு ஒப்பற்ற செல்வம். அவன் என்னையே நம்பியிருப்பதால், கொஞ்சம் கவலைப்படுவது இயற்கைதான். பெரும்பாலான தாய்மார்கள், ‘அவனுக்கு சரியான ஊட்டசத்து கிடைக்கிறதா, சரியான முறையில் வளர்ச்சி இருக்கிறதா?’ என்றெல்லாம் கவலைப்படுகிறார்கள். ஆனால் எனக்கு அந்த கவலை இல்லை. ஏனெனில், ஃபாரெக்ஸ் இருக்கிறதே!
ஃபாரெக்ஸை எளிதில் தயார் செய்ய முடியும். எனவே, குழந்தைக்கு பசி எடுத்தவுடனேயே ஊட்டலாம் அல்லவா? ஃபாரெக்ஸ் ஒரு விசேஷ முறையில் தயாரிக்கப் படுவதால் எளிதில் செரிக்கக் கூடியது. மற்றும், பால், கோதுமை, அரிசி, பழங்கள் மற்றும் காய்கறிகளின் இயற்கையான நற்குணங்கள் அதிசிறப்பாக அப்படியே இருக்கும். மேலும், ஃபாரெக்ஸ் என் குழந்தைக்கு புரோட்டீன்ஸ், கார்போஹைட்ரேட்ஸ், விட்டமின்ஸ் மற்றும் மினரல்ஸின் சரியான கலவை அடங்கிய சமச்சீர் ஊட்டசத்து அளிக்கிறது. எனவே, என் குழந்தையின் சரியான வளர்ச்சிக்கு வீட்டில் தயார் செய்த ஆகாரங்களுடன், நான் நம்புவது ஃபாரெக்ஸைதான்.
எனவே, 50 ஆண்டுகளுக்கும் மேலாக, பல தலைமுறைகளாக தாய்மார்கள் ஃபாரெக்ஸை நம்புவதில் ஆச்சரியம் இல்லை. ஒவ்வொரு முறையும் என் குழந்தை சிரிக்கும் போது, ‘நன்றி, ஃபாரெக்ஸ் அம்மா!’ என்று கூறுவது போல் இருக்கும்.
ஃபாரெக்ஸ்®
வளர்ச்சிக்கு சிறந்த வழி
6 ருசிகரமான சுவைகளில்
ரைஸ், வீட், வீட் வெஜிடபிள், வீட் மிக்ஸ்டு ஃப்ரூட்ஸ், வீட் ஆப்பிள்
வீட் எக்
இலவச குழந்தை பராமரிப்பு புத்தகத்திற்கு, குழந்தையின் பெயர்/பிறந்த தேதியுடன் எங்களுக்கு எழுதுங்கள்: ஹைன்ஸ் இண்டியா பி. லிட். த. பெ. எண் : 1907, மும்பை - 400 001.
IMPORTANT NOTICE: MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY, INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE
महत्वपूर्ण सूचना: माँ का दूध आपके बच्चे के लिये सर्वोत्तम है. ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करे.

Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a newspaper in